www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 11/00
දිනමුරසු වාරමලර්
மார்ச்.10–16,1996

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 144

## விலை 3400 கோடி



"வழியிலே கவனம்!"

சந்திரிக்காவுக்கு புதிய எச்சரிக்கை



கிரிக்கெட் உலகின் புருனே மன்னன்

டெண்டுல்கர் ஸ்பெஷல்





பார்த்திபன் + சங்கீதா அம்பலமான இரகசியம்

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## கற்றுக்கொள்ள வேண்டும்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

புலிகள் தாக்கினால்
பதிலடியாக
தமிழ் மக்களை தாக்குவது
ஒரு சம்பிரதாயம் மாதிரி
அங்கீகரிக்கப்பட்டு வருகிறதோ
என்று அச்சப்படவேண்டியிருக்கிறது.

மூதூர் குமாரபுரத்தில்
படுகொலை வேட்டை!
மட்டக்களப்பு கின்னையடியிலும்
படையினரின் அத்துமீறல்!
வீடுகளைக் கொளுத்தி
வேடிக்கை பார்த்திருக்கிறார்கள்.

அத்துமீறல்களை நிறுத்த
அரசாங்கம் நினைத்தால்போதும்;
நிச்சயமாக நிறுத்த முடியும்!
தேவையானது துணிச்சல் மட்டும்.

வருத்தம் தெரிவிப்பது,
கமிஷன் நியமிப்பது போன்ற
புளித்துப்போன முறைகளை
ஒரம்கட்டிவிட்டு
உரிய நடவடிக்கை எடுக்க
அரசு துணிந்தால்
அத்துமீறல்கள் அடங்கும்!

கடந்த காலத்தில்
பதவியில் இருந்த
சகல அரசாங்கங்களும்
செய்யத் தவறியதெல்லாம்-
தேவையான நேரத்தில்
தேவையான நடவடிக்கை
எடுக்கத் தவறியதுதான்!

தண்டிக்கப்பட வேண்டியவர்கள்
தட்டிக் கொடுக்கப்பட்டார்கள்.
1974 தமிழாராய்ச்சி மாநாட்டில்
வன்முறையை கட்டவிழ்த்த
பொலிஸ் அதிகாரிக்கு
கிடைத்த பரிசு- உயர்பதவி!

அதன் பின்னர்தான்,
அடிக்கு அடி கொடுக்கும்
மனோபாவம்
காட்டுத் தீயெனப் பரவியது.

தீர்ப்புச் சொல்ல வேண்டியவர்கள்
தம் விழிகளையும், செவிகளையும்
சாத்திக்கொள்ளும் போதுதான்,
நம்பிக்கையீனங்கள் உதயமாகின்றன.
'நாமே தீர்ப்பு வழங்கினால் என்ன?'
என்று பாதிக்கப்பட்டோர் சிந்திக்கும்
அவசியமும் உருவாகிறது!

1974 இல்
தமிழாராய்ச்சி மாநாட்டு
கொலைகளுக்கு
தண்டனை வழங்க
அன்றைய அரசு முனைந்திருந்தால்,
குறிப்பிட்ட பொலிஸ் அதிகாரியை
ஆயுதத்தோடு தேடியலைந்த
சிவகுமாரன்
தோன்றியிருக்க மாட்டான்!

சிவகுமாரனின் தீரமும்
சிவகுமாரனின் மரணமும்
தமிழ் இளைஞர்கள் மத்தியில்
ஏற்படுத்திய தாக்கமே
ஆயுதப்போரின்
எழுச்சிக்கு வித்தானது!

இவையெல்லாம்,
கடந்த கால வரலாறுகள்!
துரதிஷ்டவசமாக
யாரும் கற்றுக்கொள்ளவோ
அதே தவறுகள் தொடர்வதை
நிறுத்தவோ தயாராக இல்லை!

விதைப்பது எதுவோ
விளைவதும் அதுவே!
இயற்கை விதியும் அதுதான்,
இனப்பிரச்சனை விடயத்தில்
கடந்த அரசாங்கங்கள்
கையாண்ட முறைகளால்
கண்டறிந்த உண்மையும் அதுதான்!

மீண்டும் மீண்டும்
கொக்கட்டிச்சோலைகளும்,
குமாரபுரங்களும்
தோன்றிக்கொண்டேயிருந்தால்,
பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில்
வன்முறை எண்ணங்கள்
விதைக்கப்படுவதும் தொடரும்!

"தண்டிக்க நானிருக்கிறேன்"
என்று- அரசாங்கம்
உத்தரவாதம் காட்டாதபோதுதான்
சாதாரண மக்கள்
வேறு இரட்சகர்களைத் தேடுகிறார்கள்!
அதுதான் உலக வரலாறு
நமக்கு உரைக்கும் பாடம்!
நமது வரலாறும் அதுவே!

வரலாற்றில் இருந்து
புதிய அரசாவது
கற்றுக்கொண்டால் நன்று!

❑❑

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும் வரை

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

# ஆன்மீகம்

## உணவிலும் ஆன்மீகம்

உலகில் வாழும் மக்கள் எல்லாருக்கும் உண்ணும் உணவும், குடிக்கும் பானமும் கட்டாயம் தேவை. இவை இன்றி உயிர்வாழ முடியாது என்பது நாமறிந்ததே. எனில், இவைகளை ஆன்மீக முறையில் அணுகுதல்பற்றி நமக்கு என்ன சொல்லப்படுகிறது என்பதை நாம் சற்று சிந்திப்போம்.

"என் ஆத்துமாவே! கர்த்தரை தோத்திரி. பூமியிலிருந்து ஆகாரம் உண்டாகும்படி, அவர் மிருகங்களுக்குப் புல்லையும், மனுஷருக்கு உபயோகமான பயிர்வகைகளையும் முளைப்பிக்கிறார்."

ஒருவர் உணவை ஒருவர் பறிக்காத பட்சத்தில் வானத்துப் பட்சிகளுக்கும் வளமாய் உணவு கிடைக்கும். எனவேதான் இயேசுநாதர் "என்னத்தை உண்போம், என்னத்தை குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று கவலைப்படாதிருங்கள்" என்று கூறியுள்ளார்.

நீதியும் நேர்மையும், அன்பும் பண்பும், உண்மையும் உரிமையும் நல்ல முறையில் செயல்படும் பொழுது வாழ்வும் வளமும் செறிந்திருக்கும். அப்பொழுது, உலகில் வாழும் எல்லா மக்களும்-

"பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே, எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்" என்று கேட்கக் கூடியதாகவிருக்கும்.

கேட்பது மட்டுமல்ல, நீங்கள் புசித்தாலும் குடித்தாலும் எதைச் செய்தாலும் எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்வதாகவும் அமைய வேண்டும்.

இவ்வாறு, ஆகார விடயத்திலும் ஆன்மீக முறையைக் கடைப்பிடித்தால் எல்லாமே நல்லதாய் விளங்கும்.

ஏ.பி.வி.கோமஸ்-



## நபிகளார் கண்ட நற் கனவு

ஒரு நாள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உறங்கிக் கொண்டிருந்தபோது கனவில் சொர்க்கத்தைக் கண்டார்கள். அதில் ஹைறஜ்ரத் பிலால் (ரலி) அவர்கள் செருப்புடன் நடந்து வருகின்ற காட்சி தங்களுக்கு புலப்பட்டது.

அன்று காலையில் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் பிலாலை அழைத்து "பிலாலவே! நான் இன்றிரவு ஒரு கனவு கண்டேன். இதில் நீர் இவ்வுலகில் இருப்பதைப் போன்று என்னிடம் நடந்து வந்து கொண்டிருந்தாய். இதற்காக தான் செய்த நல்லவைகள் எவை?" என வினவினார்கள்.

அதற்கு பிலால் (ரலி) அவர்கள், "நான் தினமும் உளூவுடனேயே இருப்பேன். எனது உளூ முறிந்துவிட்டால் இரவானாலும் பகலானாலும் சரி உடனே உளூச் செய்து கொள்வேன். இயன்ற அளவு தொழுகையையும் கடைப்பிடித்து வந்தேன்" என பதிலளித்தார்கள்.

நபிகளார் கண்ட நற்கனவும் பிலாலின் பின்பற்றலும் நமக்கோர் நற் போதனையே!

எம்.சி.கலீல், கல்முனை-05

## கவிதைப்போட்டி இல-141

### பரிசுக்குரிய கவிதை

### தனிமை

இடுகாடு சுடுகாடெல்லாம்
வெடிச்சத்தம் கேட்குதையோ!
இடிபாட்டின் நடுவினிலே நான்
தனியாகத் தவிக்கின்றேனே!
முடிவொன்று கிடைக்காதா?
இனிதாக நாம் வாழ்வதற்கு??

காரைதீவூர் சிவம், குருக்கள்மடம்.

### இடமுள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்

**உலகமே பொய்த் தோற்றம்**

கனவுகள் கலைந்து விட்டால்
கருமையான வெளித்தோற்றம்!
உறவுகள் பிரிந்து விட்டால்
உலகமே பொய்த் தோற்றம்!
காத்திருக்கும் கன்னியிவள்
கண்களிலும் நீர் தோற்றம்!

தெ-றஞ்ஜனா, இறம்பைக்குளம்,
வவுனியா.

**குண்டு மழை**

விண்ணிலே தவழ்ந்து வந்த
அண்டமதிர் விமானமது
கண்ணிமைக்கும் நேரமதில்
குண்டுகளைப் பொழிந்ததனால்
எண்ணிலா உயிர்களுடன்
மண் வீடாம் என் மாளிகையும்
பூண்டோடு நிலத்தினிலே
பொடிப் பொடியாய் போனதம்மா...!

மும்தாஜ் ஜெஸ்மின்-முஸ்தபா, ஏறாவூர்-05

**இழப்பால்..**

குமாரபுரத்தில்
குமரனை இழந்து;
கூடி வாழ்ந்த
கணவனை இழந்து;
மனநிலை மாறிய
மன நோயாளி!

ஏஸ்.பி.தேவராஜா, செங்கலடி.

**என்னென்ன கோலம்?**

பசுமை நிறைந்த புவியில் இன்று
யுத்தத்தின் அகோரக் கோலம்!
பதியை இழந்த மனையாள்- நெஞ்சில்
படர்ந்ததோ வேதனைக் கோலம்!

பசறையூர்- மல்லிகா பத்மநாதன்.

**முரண்**

இந்த மண்ணில்
நாம் விதைத்தது
அகிம்சையும்
தியாகமும்-
முளைத்தது என்னவோ
அராஜகம்தான்.

சுபா வரன்-கண்டி.



**என்று?**

வந்து போனது
இன்னுமோர்
ரமழான் பிறை;
என்றுதான்
அகலுமோ
எங்கள் வாழ்வின்
கறை?

ரம்புக்கெலையூரான்,
கண்டி.

**ஓலமிடவைத்ததுவோ?**

கண்ணயர்ந்த நேரமதில்
விண்ண திர்ந்த வேட்டோசை
பண்ணி வைத்த பாவமிதோ?
உன்னுறவு உடமைகளை
எங்கோ சிதற வைத்து
உன்னை மட்டு மிங்கே
ஓலமிட வைத்ததுவோ?

க.சுகிலா, கல்லடி வேலூர்,
மட்டக்களப்பு.

**ஏக்கம்**

மிடுக்குடனே நிமிர்ந்து நின்ற
அடுக்கு மாடிக் கட்டிடங்கள்
படு களத்தில் உடைந்தழிந்து
சுடுகாடாய் மாறியதால்,
உடுப்பதற்கோ உடையிழந்து
படுப்பதற்கோ பாயிழந்து
எடுப்பார்கைப் பிள்ளையென
ஏங்குகின்றேன் தனிமையிலே.!

முஸ்தபாஇஸ்லத், ஏறாவூர்-06.

## கவிதைப் போட்டி இல-144



### கவனியுங்கள்

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பிவையுங்கள். அனுப்பவேண்டிய கடைசித் திகதி 16.03.1996.

—முகவரி—
கவிதைப் போட்டி இல: 144. தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

**கூறம்மா....**

காத்திருக்கச் சொல்லிவிட்டு
கட்டிடத்துச் சிதைவுக்குள்
காணாமல் சென்று விட்ட
கணவன் உடல் எது அம்மா!?

நா.தர்மசேகர், சம்பூர்-6, மூதூர்.

**நந்தவனத்தில், பாலைவனம்..**

பூக்கள் பறிக்கப்பட்டன,
வாழ்க்கை முறிக்கப்பட்டது;
சாவுக்கு சவால்விட்ட பர்தா ரோஜா,
முட்களுக்குள் சிக்கித் தப்பியது!

எஸ்.ராஜ்கமல்,
திஹாரிய.

**ஏன்?**

யுத்த மேகம்
கொட்டிய மழை
என்னை மட்டும்
ஏன்?
விட்டுவைத்தது?!

ஏ.எல்.ஏ.சிப்லி,
காத்தான்குடி-05.

**எப்போது?**

வரண்ட நிலம்போல
இழந்து போன
வாழ்வின் வசந்தம்
மீண்டு வருவது எப்போது?

நஜீமா அஹமட், கல்முனை-04.

# வாசக(ர்) சாலை

ப்ரியமான தினமுரசே! நீ வாரம் ஒரு முறை என்போன்ற பல்லாயிரக்கணக்கான வாசகர் உள்ளங்களில் முரசு கொட்டி தவழ்கின்றாய், உன்னில் ஒரு புதிய தொடர்கதை "நீ, நீயா" அது என்னை மிகவும் கவர்ந்துள்ளது.

முரசு வாசகன் கோணக்கலையூர்,
ப.ஜெயப்பிரகாஷ், பசறை.

-0-

மர்மக் கதை மன்னன் ராஜேந்திரகுமாரின் நீ...நீயா! தொடர் திகிலுடன் ஆரம்பமாகியதில் மகிழ்வுகள் பல. ஒவ்வொரு திகில் தொடரினையும் சுவைபட வைப்பது முரசின் பணியாய் அமைந்துவிட்டதே. வாசகர்களின் ஆவலறிந்து செயற்படும் முரசே உன் எழில்- மங்கையரெழில் போலல்லவா?

மொஹம்மட் டஷ்மீர், குறிஞ்சாக்கேணி-03.

-0-

என் உள்ளம் கவர்ந்த முரசே!

நீ வாராவாரம் சுமந்துவரும் அத்தனை அம்சங்களும் பிரமாதம். திகில் மன்னன் ராஜேந்திரகுமாரின் திகில் தொடர் என் உள்ளத்தை தொட்டுவிட்டது. அதிரடி ஐயாத்துரைக்கும் நாரதருக்கும் என் பாராட்டுக்கள். உன் தமிழ்ப்பணி தொடர எனது நல்வாழ்த்துக்கள்.

பூ. இதயரெத்தினம், ஆரையம்பதி-03.

-0-

என் அன்பு முரசே.

என் மூதாதையர்கள் சொல்வார்கள் 'நாக்கில் கருமச்சம் உள்ளவன் சொன்னால் சொல் பலிக்கும்' என்று. அதே போன்று, நீ தரும் அத்தனை செய்திகளும் அமைந்து விடுகின்றன. நாரதரை அடிக்கடி இடம் மாற்றிவை. பாதுகாப்பு கொடு.

அன்புடன் வாசகன் ஏ.பி.சதாசிவம்.

**மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவு செய்யப்பட முடிந்தவர்கள்:**

* எஸ். ரி. ரமேஷ், அக்கரைபற்று-06.
* பத்மநாதன் சுபத்திரா, பசறையூர்.
* எமல்டா மாலினி, தன்னாமுனை.
* ரி. பிரியதர்ஷினி, பசறை.
* ஆ. மகேந்திரதாஸ், கோட்டைக்கல்லாறு.
* கிண்ணியா முலாதீக்
* பி.எம்.டி.பைரூஸ், குச்சவெளி-04.
* ஃபெமீலா ஆதம்பாவா, புசல்லாவ.
* பௌஸர் ஸலாம், தர்காநகர்.
* கு.கீதா, புசல்லாவ.
* கி. புஸ்பராஜ், இறக்குவானை.
* எம். எஸ். சஹீது, சம்மவச்சதீவு.
* அருள் சபானந்தன், சங்கமன்கிராமம்.
* கே.எஸ்.ஆர். சிவகுமார், ஏறாவூர்-04
* ஏ. பர்ஸானா, கிண்ணியா-04.
* ச. கனிமலர், பதுளை.
* கு. ரதீஸ்குமார், முனைக்காடு.
* ஏ.ஆர்.பாகிமா பானு, சிறாஜ்நகர்.
* அருமைத்துரை- பரமேஸ்வரன், கொழும்பு-13
* க.சந்திரகலா, ஹல்கரனோயா.
* பாயிஷா.ஏ.ஜப்பார், கல்முனை-03.

மலையக அரசியல் விடயங்கள் தொடர்பாக முரசு தரும் விமர்சனங்கள் மட்டுமே பக்கச்சார்பின்றி, புகழ் பாடல் இல்லாமல் உண்மை பேசுகின்றன. எனினும் ஒதுக்கப்படும் இடம் போதாது. நாரதர் பார்வையில் அதிக இடம் கொடுத்து மலையக நிலவரத்தை எக்ஸ்ரே எடுத்து தரவேண்டும்.

எஸ். புண்ணியமூர்த்தி, நுவரெலியா.

-0-

கிரிக்கெட்டை வைத்து அரசியலை அலசிய ராஜதந்திரி யாருக்குப் பாராட்டுக்கள்.

சே.பவானி, கொழும்பு-6.





கார்லோஸ் தொடரை தற்காலிக நிறுத்தம் செய்து மனக் கவலையை உண்டு பண்ணி விட்டார், ரசிகன். வித்தியாசமான ரசிகன்தான்.

வித்தியாசமானதொரு கிரிக்கட் அலசலை அலசி பிரமிப்பில் ஆழ்த்தி விட்டார் இராஜதந்திரியார். அத்தோடு இராஜகுமாரன் இராமாயணத்தை இதமான பாணியில் செலுத்திக் கொண்டிருக்கிறார். பாராட்டுக்கள்.

ராஜேந்திரகுமாரின் புதிய தொடர் எடுத்த எடுப்பிலேயே சூடு பிடித்து விட்டது.

நாரதரின் எக்ஸ்ரே ரிப்போர்ட்டும் அற்புதனின் அரசியல் தொடரும் நாட்டின் நடப்புக்களையும் இறந்தகால நிகழ்வுகளையும் விளக்குகின்றன.

மேலும் ஒரு தவறு- அதாவது முன் பக்கத்தில் "ரமழான் வாழ்த்துக்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அது தவறானதாகும். ரமழான் என்று சொல்வது இஸ்லாமிய மாதங்களில் நோன்பு மாதத்தைக் குறிக்கும் பெயரே தவிர பெருநாளைக் குறிக்கும் பெயரல்ல. "நோன்புப் பெருநாள்" அல்லது "ஈதுல் பித்ர்" வாழ்த்துக்கள் என்பதே சரியானதாக அமையும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

பி.எம்.முஹம்மது அனிஸ், கொழும்பு-12.

-0-

**திருட்டு**

அன்புடன் தினமுரசு ஆசிரியர் அவர்களுக்கு,

முரசு இதழ் 139ல், ஹப்புத்தளையூர் மனோ கோபாலன் என்ற வாசகர் 'காதல் வாழவேண்டும்' என்றதலைப்பில் ஒரு கவிதை எழுதியிருந்தார். அந்தக்கவிதை, கவியரசு வைரமுத்துவின் 'இந்தப்பூக்கள் விற்பனைக்கல்ல' என்ற புத்தகத்தில், வா...எனும் தலைப்பில் இடம்பெற்ற கவிதையின்பல வரிகளை திருடி எழுதியிருக்கிறார். இவ்வாறான இலக்கியத் திருடர்களுக்கு எங்கள் அபிமான முரசு களம் அமைத்துக் கொடுப்பதையிட்டு மனம் வருந்துகிறேன்.

என்றும்அன்புடன் முரசுப்பிரியன், கே.பி.சங்கர், கொழும்பு.11.



படிப்பகம்

www.padippakam.com

# சட்ட நகல் கொழும்பில்! தாக்குதல் வடக்கில்!

## பாரிய தாக்குதலுக்கு படைகள் தயார்!

**அரசியல் தீர்வு யோசனையின் சட்ட நகல் வடிவம் பாராளுமன்றத் தெரிவுக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படுவதையடுத்து, வடக்கில் பாரிய இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்படும். தீர்வு யோசனை தொடர்பாக தெற்கில் சலசலப்புக்கள் எதுவும் ஏற்படாதிருக்கும் வகையில் வடக்கில் பாரிய நடவடிக்கை மேற்கொள்ளும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.**

### அரசின் திட்டம்

மார்ச் 7ம் திகதி பாராளுமன்ற தெரிவுக் குழுவிடம் அரசியல் தீர்வு யோசனையின் சட்ட நகல் முன்வைக்கப்பட்டதும், தெற்கில் இனவாத சக்திகள் எதிர்ப் பிரசாரங்களில் ஈடுபடலாம் என்று அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

அவ்வாறான பிரசாரங்களின் வாயை அடைக்கும் விதமாக வடக்கில் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

யாழ் குடாநாட்டிற்கான தரைப் போக்குவரத்துப் பாதையைத் திறக்கக்கூடிய வகையில் புதிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை விரும்புவதாகக் கூறப்படுகிறது.

கொழும்பில் நடக்க வேண்டிய உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளும் நடைபெற்று முடிந்து விட்டன. எனவே-வடக்கில் பாரிய நடவடிக்கையை ஆரம்பிக்கும் திட்டத்துக்கு ஜனாதிபதி பச்சைக் கொடி காட்டலாம் என்று நம்பப்படுகிறது.

### விலை 3,400 கோடி

'எதிர்வரும் சித்திரை மாதத்தின் முன்னர் போரை எப்படியாவது முடிவுக்கு கொண்டு வருவேன்' என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அடிக்கடி கூறிவருகிறார்.

போருக்காக ஒதுக்கப்பட்டுள்ள மூவாயிரத்து நானூறு கோடி ரூபாய்களில் பெரும் பகுதியை மீதப்படுத்திக் காட்டுவேன் என்று ஜெனரல் அனுருத்த ரத்வத்த கூறிவருகிறார்.

இதேவேளை வடக்கில் புலிகளின் வெளியீடு ஒன்றில் "4 ஆயிரம் கோடியும், ஒரு இலட்சம் படைகளும் புலிகளை வெல்லப் போதுமானவையல்ல." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

"தற்போது ஒதுக்கப்பட்டுள்ள மூவாயிரத்து நானூறு கோடிக்குள் போரை முடிவுக்கு கொண்டு வருவது. போருக்காக செலுத்தும் கடைசி விலை இதுவாகத்தான் இருக்க வேண்டும். இதற்கு மேல் இலங்கை தாங்காது." என்று இராணுவ அதிகாரி ஒருவர் முரசுக்கு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து மக்கள் இடம் பெயர்ந்து சென்றுள்ளதால், சூரியக் கதிர் இராணுவ நடவடிக்கை தொடர்பான அரசின் பிரசாரங்கள் பலவீனமாகத் தொடங்கி விட்டன.

பத்திரிகையாளர்களையோ, அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களையோ யாழ்ப்பாணத்திற்கு அழைத்துச் சென்று காட்டவும் முடியவில்லை.

எனவே- யாழ்ப்பாணத்திற்குள் மக்களைக் கொண்டுவரக்கூடிய இராணுவ நடவடிக்கை ஒன்று அவசியம் என்று அரசாங்கம் கருதுகிறது.

தற்போது யாழ்-குடாநாட்டில் வடமராட்சி, தென்மராட்சி பகுதியகளில் உள்ள மக்களை தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தாலாவது போதும்: மக்கள் உள்ள பகுதிகள் கட்டுப்பாட்டில் இருப்பதாகக் காட்டலாம் என்று உயர் மட்டத்தில் விரும்பப்படுகிறதாம்.

### புலிகளின் தயாரிப்பு

ஆனையிறவு முகாமில் இருந்து யாழ் நகர் வரை தரைவழியாய்ச் சென்று காட்ட வேண்டும். அவ்வழியாக பத்திரிகையாளர்களையும் அழைத்துச் செல்லவேண்டும் என்று விரும்புகிறார் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர். அதற்கேற்பவே அடுத்த கட்ட நடவடிக்கை திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இதேவேளை, ஆனையிறவு, வெற்றிலைக்கேணி, மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரியில் உள்ள இராணுவ முகாம்களிலிருந்து படையினர் முன்னேறி வரலாம் என்று கருதி பாரிய பதுங்கு குழிகளை அமைத்து, எதிர்த் தாக்குதலுக்கு புலிகள் தயாராகி வருகின்றனர்.

முல்லைக் கடலில் புலிகளின் ஆயுதக் கப்பல் தாக்கப்பட்டிருக்காவிட்டால் ஆட்டிலறி பீரங்கிகள் புலிகளிடம் வந்து சேர்ந்திருக்கும்.

படையினர் முன்னேறும் நடவடிக்கையில் ஈடுபட முன்னரே, புலிகளது ஆட்டிலறி பீரங்கிகள் மூலம் ஆனையிறவு, பூநகரி முகாம்கள்மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டிருக்கும் என்று புலிகளது வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

---

## "காட்டிக் கொடுக்கிறது தமிழர் கூட்டணி"

## புலிகளின் தினசரி காட்டமான சாடல்!

அரசாங்கம் முன்வைத்துள்ள அதிகாரப் பரவலாக்கல் யோசனையை கூட்டணியினர் ஆதரித்துவருவதாக 'ஈழநாதம்' பத்திரிகை குற்றம் சாட்டியுள்ளது.

வடக்கில் கிளிநொச்சியில் இருந்து வெளியிடப்படும் புலிகளின் தினசரியான ஈழநாதம் பத்திரிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில் பின்வருமாறு கூறியுள்ளது:

"எதிர்பார்த்தது போன்றே தமிழர் விடுதலைக் கூட்டணியினர் சந்திரிக்கா அரசு முன்வைத்துள்ள அதிகாரப் பரவலாக்கல் திட்டத்திற்குத் தமது ஆதரவை வழங்கியுள்ளனர்.

இது எவருக்கும் ஆச்சரியமோ, அதிர்ச்சியோ அளிக்க நியாயமில்லை. ஏனெனில் அதிகாரப் பரவலாக்கல் யோசனை எவை என்பதல்ல, அவற்றை ஆதரிப்பது என்பது கூட்டணியினர் ஏற்கெனவே எடுத்துவிட்ட முடிவு.

சட்டம் படித்தவர்கள், ஆங்கிலம் புரிந்தவர்கள், அரசியல் ஞான சட்ட நுணுக்கங்கள் தெரிந்தவர்கள் எனக் கூறிக்கொள்ளும் மு.சிவசிதம்பரம் போன்ற கூட்டணியினர், சந்திரிக்கா அரசு முன்பு வைத்த தீர்வு யோசனைக்கும், தற்போது சட்ட நகல் வடிவில் முன்வைத்துள்ள யோசனைக்கும் இடையே உள்ள வேறுபாட்டை மறைக்க முயல்வது ஏன்?

கூட்டணியினர் தமிழ் மக்களை ஏமாற்ற முனைகிறார்கள்.

ஜே.ஆர்.ஜயவர்த்தனா காலத்திலும் இதேபோலத்தான் கூட்டணியினர் நடந்து கொண்டனர். மாவட்ட அபிவிருத்தி சபையானது தமிழீழத்தின் முதல்படி என்றனர்.

அதன்பின்னரும் இந்தியாவின் அனுசரணையுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளிலும் சிறீலங்கா அரசின் யோசனைகளுக்கு கூட்டணியினர் தலையாட்டிக் கொண்டிருந்தனர். ஒரு வகையில் நியாயப்படுத்தி வந்தனர் என்றும் குறிப்பிடலாம்.

ஆனாலும் கூட்டணியினரால் எதனையும் பெற முடியவில்லை. இவ்வளவு ஏமாற்றங்களின் பின்னரும் கூட்டணியினர் தமது முயற்சிகளைக் கைவிடவில்லை.

மறு வளமாக கூறுவதானால் அதிகாரசுகம் இதனைக் கைவிட அவர்களை அனுமதிப்பதில்லை. ஏற்கெனவே அச்சுகத்தை அனுபவித்தவர்கள் அது கை நழுவிப் போவதை விரும்பவில்லை. எதைக் கொடுத்தாலும் பெற்றுக் கொண்டு அதிகாரத்தை சுவைக்கவே விரும்புகின்றனர். இதனால் அவர்கள் எவ்வித காட்டிக் கொடுப்பிற்கும் தயாராகவே உள்ளனர்." இவ்வாறு ஈழநாதம் பத்திரிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில் எழுதியுள்ளது. 'கூட்டணியின் காட்டிக் கொடுப்பு' என்ற தலைப்போடு ஆசிரியர் தலையங்கம் எழுதப்பட்டிருந்தது.

---

## ஜனாதிபதியின் தலைக்கு விலை!

## 'இன்டர் நெற்'றில் புலிகள் அறிவிப்பு

இன்றைய காலத்தில் அதி நவீன தகவல் தொடர்பு சாதனம் 'இன்டர்நெற்.' கம்பியூட்டர் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை பயன்படுத்தி ஏற்படுத்தப்பட்டுள்ள தகவல் துறை.

இன்டர் நெற்றில் குறிப்பிட்ட பணம் செலுத்தி யார் வேண்டுமானாலும் உறுப்பினராகலாம். அவ்வாறு உறுப்பினராகும் ஒருவர் தனது கம்பியூட்டர் மூலமாக 'இன்டர் நெற்'றில் செய்திகளை கொடுக்கலாம். இந்த முறை காரணமாக தவறான செய்திகளும் இன்டர் நெற் மூலம் கிடைக்கக்கூடும்.

இதேவேளை புலிகளும் 'இன்டர் நெற்' மூலம் தமது பிரசாரத்தை ஆரம்பித்துள்ளனர்.

நிதி சேகரிப்பு வேண்டுகோள்கள், மற்றும் புலிகளின் பிரசாரங்கள் என்பன இன்டர் நெற் மூலம் வெளியிடப்படுகின்றன.

இன்டர் நெற் மூலமாக சமீபத்தில் வெளிவந்த அறிவித்தல் ஒன்றில், இலங்கை ஜனாதிபதியின் தலைக்கு ஐந்து கோடி அமெரிக்க டொலர்கள் விலை வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி சந்திரிக்காவின் தலையை கொண்டு வருபவர்களுக்கு 5 கோடி தரப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்ததாம். இத் தகவலை கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்று வெளியிட்டுள்ளது.

இப்படியான அறிவித்தலை புலிகள் நேரடியாக வெளியிடுவதில்லை. 'இன்டர் நெற்'றில் உறுப்பினராக உள்ள யாராவது ஒருவர் மூலமாக வெளியிடலாம்.

"புலிகளுக்கு ஏவுகணை வாங்கப் பணம் தேவை. உதவி செய்ய வேண்டியது தமிழர்களது கடமை" போன்ற வேண்டுகோள்களும் 'இன்டர்நெற்' மூலமாக வெளியிடப்படுகின்றன.

வெளிநாடுகளில் உள்ள தமிழர்கள் பலரது வீடுகளில் கம்பியூட்டர் இருக்கிறது. அவர்கள் 'இன்டர் நெற்'றிலும் உறுப்பினராக இருப்பதால் 'இன்டர் நெற்' மூலமான பிரசாரம் முக்கியமானதாகி வருகிறது.

---

## யாழ்ப்பாணத்தில் மூன்றாம் தரப்பு

படையினர் நிலைகொண்டுள்ள யாழ்ப்பாணத்துக்குள் ஊடுருவித் தாக்கும் நடவடிக்கைகளில் புலிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

படையினரின் ரோந்து நடவடிக்கைகள், காவல் அரண்கள், புலிகளின் நடமாட்டங்கள் இவற்றின் மத்தியில் மூன்றாவது தரப் பொன்றும் யாழ்ப்பாணத்திற்குள் ஊடுருவிச் சென்று திரும்புகிறது.

அந்த மூன்றாவது தரப்பு யார் தெரியுமோ? திருடர்கள்.

அரியாலை, கொழும்புத்துறைப் பகுதிகளில் உள்ள வீடுகளில்தான் திருடர்கள் தமது கைவரிசையை சிறப்பாகக் காட்டியிருக்கிறார்கள்.

அரியாலைப் பகுதியில் திருடப்பட்ட பொருட்களில் ஒரு பகுதி புலிகளின் காவல் துறையினரால் மீட்கப்பட்டுள்ளன.

இதேவேளை அரியாலை, கொழும்புத்துறை. பாசையூர் போன்ற இடங்களில் உள்ள பல வீடுகளில் கூரைகள்கூட காணாமல் போயுள்ளன.

அடாது போர் நடந்தாலும் விடாது திருடும் கூட்டமும் இருக்கிறது.

### தமிழ் கட்சிகள் மகஜர்!

கொழும்பில் தற்போது ஏற்பட்டுள்ள புதிய சூழ்நிலை தொடர்பாக தமிழ் கட்சிகள் ஜனாதிபதியுடன் பேச்சு நடத்த உள்ளன.

கொழும்பில் இனவாத சக்திகள் மீண்டும் தலைதூக்க ஆரம்பித்துள்ளன. இதனால் கொழும்பில் உள்ள தமிழ் மக்கள் மத்தியில் பாதுகாப்பற்ற மனநிலை தோன்றிவருகிறது.

கொழும்பில் நடைபெறும் கைதுகள் தொடர்பாகவும் கரிசனமான நடைமுறைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இரவு வேளைகளில் பெண்கள் கைது செய்யப்படுவது தொடர்பாகவும், அது குறித்து நடைமுறையில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பாகவும் தமிழ் கட்சிகள் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வரவுள்ளன.

முதல் கட்டமாக தற்போதுள்ள சூழ்நிலை தொடர்பாக ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்று அனுப்பப்படவுள்ளதாக தமிழ் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ரெலோ, புளொட், ஈரோஸ், ஈ.பி.டி.பி. ஆகிய ஐந்து தமிழ் கட்சிகளே கூட்டாக மகஜர் அனுப்பவுள்ளன.

---

## நியமனங்களில் மீண்டும் அரசியல்?

(காரைதீவு நிருபர்)

அம்பாறை மாவட்ட தமிழ்-முஸ்லிம் பிரதேசங்களில் அமுலாகும் சமுர்த்திதிட்டத்திற்கு ஊக்குவிப்பாளர்களை (Animators) நியமிக்கும் போது அரசியல் புகுத்தப்பட்டது தெரிந்ததே.

ஆனால் ஒருசில அரசியல் பிரமுகர்கள் நியமனமொன்றுக்கு ரூ.10 ஆயிரம் வாங்குவதாக புகார்கள் கிடைத்திருக்கின்றன. ரூபா.10 ஆயிரம் கொடுத்த பலர் முத்திரையில் கையெழுத்திட்டு J.P. கையொப்பம் வைத்து தினமுரசிற்கு தரவும் தயாராயுள்ளனர். நகைநட்டை, காணியை அடவுவைத்துவிட்டு ஏழை மக்கள் இந்த சில்லறை அரசியல் பிரமுகர்கள் பின்னால் திரிகின்றனர். அரசியல்வாதிகளுக்கு காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளும் ஆசை. சகலரிடமும் பணம் பெறுகின்றார்கள்.

இதேவேளை நடந்துமுடிந்த தமிழ் மொழி ஆசிரியர் போட்டிப்பரீட்சை ஒரு கண்துடைப்பு என்று சிலர் பேசிக்கொள்கிறார்கள். ஏன் என்று கேட்டால், பின்வருமாறுசொல்கிறார்கள்: நியமனங்கள் யாவும் அரசியல் வாதிகளிடமாம். அவர்கள் சிபாரிசு செய்வோருக்குத்தான் வேலையாம். அப்படியானால் பிரதிநிதி இல்லாத அம்பாறைத் தமிழர்களின் நிலை என்ன? பணத்தோடு அலைகிறார்கள், யாரிடம் கொடுக்க? தரகர்களுக்குவாசிதான்.

---

## மாணவர்களுக்கு மண்ணெண்ணெய்

யாழ்ப்பாண பல்கலைக்கழக இறுதியாண்டுப் பரீட்சைக்கு விண்ணபித்த மாணவர்களுக்கு தலா 5 லிற்றர் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டது. சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் வைத்து மண்ணெண்ணெய் வழங்கப்பட்டது.

குப்பி விளக்குகளில் மாணவர்கள் கல்வி கற்று வருவதால் மண்ணெண்ணெய் தட்டுப்பாடு அவர்களது கல்வியைப் பாதிக்கிறது. பரீட்சைக்கு தயாராகும் மாணவர்களின் நன்மை கருதியே மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது.

---

## சோதனையில் வேதனை

வடபகுதியிலிருந்து கொழும்பு வரும் மக்கள் வவுனியா தாண்டிக்குளம் தடை முகாமில் வைத்து கடும் சோதனைகளுக்கு உள்ளாகி வருகின்றனர்.

தாண்டிக்குளத்தில் தடுத்து வைக்கப்படும் மக்களில் இளவயதினர் இரவு நேரங்களில் தொல்லைகளுக்கு உள்ளாகின்றனர்.

தூக்கத்தில் இருக்கும் பெண்கள் விசாரணைக்காக அழைக்கப்பட்டு விஷமத்தனமான கேள்விகள் கேட்கப்படுகிறதாம். சோதனை என்ற பெயரில் அத்துமீறல்களும் இடம் பெறுகிறதாம். தற்காலிக அடையாள அட்டைகளும் கிழித்து எறியப்படுகின்றன.

வெட்கம் காரணமாகவும், பயத்தாலும் பாதிக்கப்படும் பெண்கள் வெளியே சொல்வதில்லை.

திருக்கோணமலையில் உள்ள சோதனை முகாம்கள் சிலவற்றிலும் பெண்கள் தொல்லைகளுக்கு உள்ளாவதாக பரவலான பேச்சுக்கள் அடிபடுகின்றன.

---

## புலிகளின் வங்கியில் நடைமுறைக் கணக்கு

வடபகுதியில் உள்ள அரச வங்கிகளில் போதிய பணம் இல்லாமையால் புலிகளின் தமிழீழ வைப்பகத்திற்கு வாடிக்கையாளர்கள் தோகை அதிகரித்து வருகிறது.

இதனையடுத்து தமிழீழ வைப்பகத்தில் 'நடைமுறைக் கணக்கு' கடந்த மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நெல்லியடி, சாவகச்சேரி, கிளிநொச்சி ஆகிய இடங்களில் புலிகளின் வங்கியான தமிழீழ வைப்பகம் இயங்கிவருகிறது.

நடைமுறைக்கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டதையடுத்து தமிழீழ வைப்பக காசோலைகளும் புழக்கத்திற்கு வந்துள்ளன.

வடபகுதியில் உள்ள அரசாங்க வங்கிகளில் பணத்தை வைப்பிலிட்டவர்கள் அவற்றை திரும்பப் பெறுவதில் தாமதங்கள் ஏற்படுகின்றன. 2 ஆயிரம் ரூபாவுக்கு மேல் பணம் மீளளிக்க முடியாமல் அரச வங்கிகளில் பணத்தட்டுப்பாடு நிலவுகிறது.

---

## பெண் புலிகள் தாக்குதல்

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ள கொக்குவில் பகுதியில் புலிகள் அமைப்பினரின் பெண்கள் அணியினர் தாக்குதல் ஒன்றை நடத்தினார்கள். இராணுவத்தினரும் திருப்பித் தாக்கினார்கள். இரு தரப்பினருக்கும் இடையில் நடைபெற்ற மோதலில் இரு பெண் புலிகள் பலியானார்கள். லெப்டினன்ட் கோதை (கணேசன் சுதா) பைந்தமிழ் (சின்னராசா அருள்மொழி) ஆகியோரே பலியானவர்களாவர்.

---

## வெளியேறுமாறு மிரட்டல்!

கொழும்பில் புறநகர் பகுதிகள் சிலவற்றில் தமிழ் மக்கள் மிரட்டல்களுக்கு உள்ளாகின்றனர்.

இரத்மலானை, கல்கிஸை பகுதிகளில் குடியிருக்கும் தமிழர்களை கும்பல் ஒன்று மிரட்டி வருகிறது. பொறியியலாளர் ஒருவரின் வீடு கல்வீச்சுக்கும் உள்ளானது.

அதனையடுத்து அந்த பொறியியலாளர் வீட்டை காலி செய்துவிட்டு சென்று விட்டார்.

நிதி திரட்டல் என்று கூறிக் கொண்டு பணம் கறப்பது, கேலி செய்வது, மிரட்டுவது போன்ற செயல்களில் ஈடுபடும் கும்பல்கள் தொடர்பாக பொலிசில் புகார் தெரிவிக்கப்படுவதில்லை. அவ்வாறு புகார் தெரிவித்தால் அக் கும்பல்களால் மேலும் பாதிப்பு ஏற்படலாம் என்று பொதுமக்கள் அஞ்சுவதே காரணம்.

---

## கூட்டணி எம்.பி.கள் ராஜினாமா?

## புலிகள் கிழக்குத் தலைமை யோசனை

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கிழக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது பதவிகளைத் துறக்கவேண்டும் என்று கோரப்படலாம் என்று தெரிய வருகிறது.

புலிகளின் கிழக்கு மாகாண தலைமைப் பீட மட்டத்தில் அது தொடர்பாக ஆராயப்பட்டுவருவதாக நம்பத் தகுந்த வட்டாரங்களில் இருந்து அறியப்படுகிறது.

கிழக்கு மாகாண கூட்டணி எம்.பி. ஒருவரின் நெருக்கமான ஆதரவாளரிடம் வாகரையில் வைத்து புலிகள் பேசியிருக்கிறார்கள். "பதவியைத் துறக்குமாறு நாம் அறிவித்தால் கிழக்கு மாகாண கூட்டணி எம்.பிகள் எப்படி நடந்து கொள்வார்கள்? கொழும்புக்கு சென்று பாதுகாப்பு தேட முற்படுவார்களா?" என்றெல்லாம் அந்த ஆதரவாளரிடம் வினாக்கள் எழுப்பப்பட்டதாம்.

இனப்பிரச்சனைக்கு தீர்வாக அரசாங்கம் ஒரு தீர்வு யோசனையை முன்வைத்துள்ளது.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் விவாதிக்கப்பட்ட பின்னர், அந்த சட்ட நகல் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் நேரத்தில் வடக்கு- கிழக்கு இணைப்பை வலியுறுத்தி கூட்டணியின் கிழக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவிகளை துறக்க வேண்டும்.

அதன்மூலம் கிழக்கு மாகாண தமிழ் மக்கள் இணைப்புக்கு எதிரானவர்கள் அல்ல என்று வெளிப்படுத்த வேண்டும் என்று புலிகளது கிழக்குப் பிராந்திய தலைமைப்பீடம் விரும்புகிறதாம்.

தீர்வு யோசனைகள் திருப்தி தரவில்லை என்று கூறி சகல தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களையும் பதவி விலகுமாறு கோரினால் என்னவென்றும் யோசிக்கப்படுகிறதாம்.

எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்தில் பாராளுமன்றத்தின் ஆதரவைப் பெறுவதற்காக தீர்வு யோசனை சட்ட நகல் முன்வைக்கப்படும் என்று அமைச்சர் ஜி.எல். பீரிஸ் கூறியிருக்கிறார்.

எனவே- எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்தில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு புலிகளிடம் இருந்து அறிவித்தல் வரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமது தலைமைப்பீடத்தின் முடிவை எதிர்பார்த்து புலிகளது கிழக்கு மாகாண தலைமைப் பீடத்தினர் காத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

---

## பாடசாலை மாணவர்கள் படை வீரர்களாகிறார்கள்

(காரைத்தீவு நிருபர்)

நாட்டின் நிலைமையைக் கருத்திற் கொண்டு பாடசாலைகளை பாதுகாக்கும் திட்டமொன்றை பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டு உள்ளது.

இதன்படி சம்மாந்துறைப் பொலிஸ் பிரிவிலுள்ள காரைத்தீவு, நிந்தவூர், சம்மாந்துறை ஆகிய கோட்டக் கல்வி பணிமனையூடாக பாடசாலைகளில் பொலிஸ் பொறுப்பதிகாரி ஏ.டபிள்யூ அப்துல் கபார் கூட்டங்களை நடத்தியிருந்தார்.

அவர் கூறும்போது சிரேஷ்டமாணவ தலைவர்கள் தினமும் 7.00 மணிக்கு முன் பாடசாலைக்கு வந்து கன்ரீன், கழிவகம், கட்டிடம் போன்றவற்றை சோதனை செய்ய வேண்டும். 7.30க்கு வரும் சகல மாணவர்களையும் 'செக்' பண்ண வேண்டும். அந்த மாணவர்கள் வகுப்பறைக்குச் சென்று தங்கள் வகுப்பறைகளையும், கதிரைமேசைகளையும் 'செக்' பண்ண வேண்டும்.

மேலும் பாடசாலைக்கு வரும் அந்நியர்களையும் 'செக்' பண்ண வேண்டும் என்று கூறப்பட்டதாகத் தெரிகிறது. பாடசாலை மாணவர்கள் மறைமுகமாக படைவீரர்களாகிறார்கள்.


படிப்பகம்

www.padippakam.com

# எம்.ஜி.ஆர். பெயரில் அரசியல் வியாபாரம்

## தமிழக முதல்வர் ஜெயலலிதா சாட்டை

"எம்.ஜி.ஆர்.பெயரைச் சொல்லி அரசியல் வியாபாரம் செய்யும் இடைத்தரகர்கள் புறப்பட்டுவிட்டார்கள்." இவ்வாறு தமிழக முதல்வர் ஜெயலலிதா சாடியுள்ளார்.

எம்.ஜி.ஆர். முன்னணி என்ற பெயரில் இணைந்துள்ளவர்கள்மீதே ஜெயலலிதா அவ்வாறு சாட்டை வீசியிருக்கிறார்.

தமிழ்நாட்டில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு பேசிய ஜெயலலிதா மேலும் தெரிவித்ததாவது: "புரட்சித்தலைவரின் கனவுகளை நனவாக்கி வரும் உங்கள் அன்புச் சகோதரியை விமர்சிக்கும் அருகதை கபடதாரிகளுக்கு கிடையாது.

புரட்சித் தலைவரின் விசுவாசிகள் என்ற புதிய சாயத்தைப் பூசிக்கொண்டு நடைபோட்டுவருபவர்களின் முக விலாசங்கள் தமிழ் நாட்டு மக்களுக்கு தெரியாதா?

புரட்சித்தலைவரை ஒழித்துக்கட்ட திட்டம் போட்டவர்களிடம் கையேந்தித் திரிந்தவர்கள் இன்று அரசியல் வியாபாரம் செய்ய வருகிறார்கள்.

என்னிடம் வந்து மன்னிப்புக்கேட்டார்கள். "எங்களை ஆதரிக்காவிட்டால் அரசியல் அநாதைகளாகிவிடுவோம்" என்று மன்றாடினார்கள்.



மறப்போம், மன்னிப்போம் என்று இடம் கொடுத்தோம். உயர்ந்த எண்ணத்துடன் சற்றுக் கூடுதலாகவே இடம்கொடுத்துவிட்டோம். ஆனால் அவர்கள் தமது சுயரூபத்தைக் காட்டி விட்டார்கள்.

இன்று கருணாநிதி கம்பனியுடன் கூடிக் குலாவுகிறார்கள். அந்தக் கம்பனி ஒரு அரசியல் விபத்தின் காரணமாக இரண்டு வருடம் ஆட்சியில் இருந்தது.

அந்த இரண்டாண்டு காலத்தில் எம்.ஜி.ஆரின் நினைவிடத்தைக்கூட கருணாநிதி கம்பனி கட்டிமுடிக்கவில்லை.


காளான் வடிவில் ஒரு குடையை மட்டும் வைத்துவிட்டு, 'இதுதான் எம்.ஜி.ஆர். சமாதி' என்று எம் நெஞ்சங்களில் நெருப்பை அள்ளிக் கொட்டினார்கள்.

இன்று கருணாநிதி கம்பனிக்கு உதவியாக எம்.ஜி.ஆர். விசுவாசிகள் என்றும், எம்.ஜி.ஆர். மன்றம் என்றும் சொல்லிக்கொண்டு சிலர் புறப்பட்டிருக்கிறார்கள்.

இவர்களை எம்.ஜி.ஆரின் ஆத்மா மன்னிக்காது; சும்மாவிடாது. நாம் அவர்களைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை.

தமிழக மக்களது பேராதரவுடன் தமிழகத்தில் மீண்டும் எம்.ஜி.ஆர். ஆட்சிதான் வரும். நம்மை எவராலும் வெல்ல முடியாது" என்று ஜெயலலிதா உரையாற்றினார்.

# காட்டூண் மூலை




நன்றி — த சண்டே ஒப்சேர்வர்

## சாமி வழக்கில் தாமதம்

சந்திரசாமி வழக்கில் இந்திய மத்திய புலனாய்வுப் பிரிவு வீண் தாமதம் செய்துவருவதாக இந்திய உச்ச நீதிமன்றம் கண்டித்துள்ளது.

சந்திரசாமிக்கு இந்திய அரசியல் தலைவர்களிடம் செல்வாக்கு இருப்பதால் அவர் மீதான விசாரணைகள் தாமதமாகி வருவதாகக் கூறப்படுகிறது.

சர்வதேச ஆயுதக் கடத்தல் மன்னன் கஷோகியுடன் தொடர்பு, பம்பாய் குண்டு வெடிப்பு சூத்திரதாரியான தாவூத் இப்ராகிமுடன் தொடர்பு போன்ற பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சந்திரசாமிமீது சுமத்தப்பட்டுள்ளன.

இக்குற்றச்சாட்டுக்கள் உண்மையானால், உடனடியாக விசாரணை நடத்தவேண்டும் என்று உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.

## "கலைஞர் தலைமையில் புதிய ஆட்சி"

"திருச்சியில் அ.தி.மு.கவினர் மாநாடு நடத்தினார்கள். அவர்கள் கையில் இருப்பது ஆட்சி எந்திரம். கலைஞர் மாபெரும் மாநாட்டை கூட்டியது போல தாமும் செய்துகாட்டினர் ஒரு தந்திரம்." இவ்வாறு கூறியுள்ளார் தி.மு.க.வின் கொள்கை பரப்புசெயலாளர் டி.ராஜேந்தர்.

"தி.மு.க. மாநாடு 'ஒரிஜனல்'முடி, அ.தி.மு.க மாநாடு 'டோப்பா'முடி. ஒரிஜனல் ஒரிஜனல்தான். டூப்ளிகேட் டூப்ளிகேட்தான்.

கலைஞரிடம் இப்போது வேகம் மட்டுமல்ல, விவேகமும் கூடியுள்ளது. ஆனால் சில இடங்களில் நிதானமும் தேவைதான். மத்தியிலும், மாநிலத்திலும் நிச்சயம் மாற்றம் உண்டு. - ஜெயலலிதாவின் ஆட்சியைக் கவிழ்க்கும் இயக்கம் தி.மு.க.தான். அதன் தலைவர் கலைஞர் தலைமையில் புதிய ஆட்சி மலரும்." என்று முழங்கியுள்ளார் ராஜேந்தர்.

# தமிழ் சேவை இசைப் பிரிவில் முறைகேடு

## உயர் அதிகாரியால் விருது அபகரிப்பு!

இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் தமிழ்ச்சேவை தனது அறிவித்தலில், ஜனாதிபதி விருது பெறுவதற்கான சிறந்த கலைஞர்களை தெரிவு செய்யும் பெரும் பொறுப்பை வானொலி இரசிகர்களிடமே ஒப்படைத்தது. அவ்வாறே, இரசிகர்களும் தாங்கள் விரும்பிய கலைஞர்களின் பெயர்களைத் தபால் அட்டையில் எழுதி தமிழ்ச் சேவைக்கு அனுப்பி வைத்தனர்.

ஆனால் அவை கவனத்தில் கொள்ளப்படவில்லை. உதாரணமாக, இசைப் பிரிவில் நடந்த முறைகேட்டை இங்கு விளக்க விரும்புகிறேன். இரசிகர்களினால் தெரிவு செய்யப்படாத-ஓரிரு வானொலி நிகழ்ச்சிகளுக்கு மாத்திரம் இசையமைத்த, ஒரு புது முகம், சிறந்த இசையமைப்பாளருக்குரிய, ஜனாதிபதி விருதை எப்படிப் பெற்றுக் கொண்டார்?

இக் கேள்விக்கான-பதிலை இந்நாட்டு இரசிகப் பெருமக்களுக்கு தமிழ்ச் சேவையின் இசைப்பிரிவு சொல்லியாக வேண்டும். ஏனென்றால், இலங்கை வானொலி ஒரு அரசாங்க கூட்டுத்தாபனம்.

மேலும், சொல்வதானால் சிறந்த இசையமைப்பாளருக்குரிய ஜனாதிபதி விருதை எப்படியாவது, இப்புதிய இசையமைப்பாளருக்கு பெற்றுக்கொடுக்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன், தமிழ்ச் சேவையின் இசைப்பிரிவு தந்திர உபாயங்களை பிரயோகித்து திட்டங்களைத் தீட்டியதா?

1. 1970ஆம் ஆண்டு முதல் 1995ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வரை தமிழ்ச் சேவையின் மெல்லிசைப் பாடல்கள் வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்த இசையமைப்பாளர்களை ஒதுக்கிவிட்டு எதுவித பங்களிப்பும் செய்யாத, ஒரு புதுமுகத்திற்கு, சிறந்த இசையமைப்பாளர் விருது வழங்கிய முறை நியாயமா?

2. இச் செயல்பாட்டின் மூலம், இலங்கை வானொலி தமிழ்ச்சேவை இசையமைப்பாளர்களுக்கு போட்டியில் கலந்து கொள்ளும் சந்தர்ப்பம் கூட கிடைக்காமல் செய்துவிட்டதே! தமிழ்ச் சேவை இசைப்பிரிவின் இச் செயல்பாட்டினால் கலைஞர்கள் கொதிக்கின்றனர். அப்படியானால், இது ஜனநாயக முறைக்கு எதிரானது அல்லவா? இதன் மூலம் நம் நாட்டு இசையமைப்பாளர்களின் உரிமை மீறப்படவில்லையா?

3. சிறந்த இசையமைப்பாளர் தெரிவு இரசிகர்களிடம் ஒப்படைக்கப்படாமல் இரசிகர்களின் விருப்பத்தை தபால் அட்டை மூலம் அதாவது வாக்கெடுப்பு மூலம்-அறிந்து கொள்ளாமல், சிறந்த இசையமைப்பாளர் என்பவர் எப்படி தெரிவு செய்யப்பட்டார்? இது முறைகேடான தேர்வு அல்லவா?

4.கர்னாடக சங்கீத வாய்ப்பாட்டில் சிறந்த பெண் பாடகிக்கான ஜனாதிபதி விருது, தமிழ்ச்சேவை இசைப்பிரிவு அதிகாரிக்கு வழங்கிய முறை நியாயமா? அதே நிறுவனத்தில் பணிபுரியும் ஓர் உயர் அதிகாரி விருதும் பரிசாக பணமும் பெற்றுக்கொள்ள, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன விதிமுறைகள் இடமளிக்கின்றனவா? அதுவும், வானொலி ரசிகர்களின் தபால் அட்டை (வாக்கெடுப்பு) மூலம் தெரிவு செய்யப்படாமல், ஜனாதிபதி விருது வழங்கிய முறை சரிதானா?

தட்டிக் கேட்காவிட்டால் தம்பி சண்டப்பிரசண்டன் என்பார்கள், இப்போ தட்டிக் கேட்கின்றோம், தக்க பதில் கிடைக்குமா? இல்லாவிட்டால் அடுத்து ஜனாதிபதி விருதும் மற்றுமொரு குடும்ப அங்கத்தவருக்கு கிடைத்து விடும் என்று இசைக் கலைஞர்கள் பேசிக் கொள்வது நியாயம்தானே?

எம்.எஸ். செல்வராஜா, கொழும்பு-10

## கல்முனைக்குடியில் ஒரு குறை

கல்முனைக்குடி அரசினர் பெரியரல் யுனிட் வைத்தியசாலை இப்பகுதி மக்களுக்கு அளப்பரிய வைத்திய சேவைகளை வழங்கி வருகிறது.

இங்கு வெளி நோயாளர் சிகிச்சைப் பிரிவு, மகப்பேற்று சிறு சத்திர சிகிச்சை என்பன நடைபெறுகின்றன.

ஆனாலும் சில குறைபாடுகள் இவ் வைத்தியசாலையில் இருந்து வருகின்றன. கர்ப்பிணிகளையோ, கடுமையான நோயாளர்களையோ அவசர சிகிச்சைக்காக அம்பாறை அல்லது மட்டக்களப்புக்கு எடுத்துச் செல்வதற்கு இவ் வைத்தியசாலைக்கு ஓர் அம்புலன்ஸ் வண்டி இல்லை.

இதனால் நோயாளர்கள் சொல்லொண்ணா துன்பங்களுக்கு உள்ளாவதோடு உயிர் ஆபத்துக்களையும் எதிர்நோக்குகின்றனர்.

மேலும் இங்கு ஈ.சி.ஜி, எக்ஸ்ரே இயந்திர உபகரணங்களும் இல்லாமையால் தனியார் ஸ்தாபனங்களையே இதற்காக நாட வேண்டியுள்ளது.

எனவே சுகாதார சமுக சேவைகள் நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி அவர்கள் இவ்விடயத்தில் உடன் கவனம் செலுத்த வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

எம்.சி.கலீல், 328, ஹனிபா வீதி, கல்முனை-05.

## பொறுப்பான அதிகாரி???

கிழக்கின் பல பாதுகாப்பான பகுதிகளில் மண்மூடைகளினால் பாதுகாக்கப்பட்டிருக்கும் மின் மாற்றிகள் பல இன்றும் வெடித்துச் சிதறிக் கொண்டிருக்கின்றன. இதற்குக் காரணம் மக்களுக்குப் புரியாமலில்லை.

மட்டக்களப்பு மத்திய வீதியில் (புளியந்தீவின் மத்தியில்) அமைந்திருக்கும் மின்மாற்றி (10-02-96) வெடித்தது. இம்மின்மாற்றி ஏற்கனவே ஒருமுறை தகர்க்கப்பட்டு மாற்றம் செய்யப்பட்டதென்பது இங்கு குறிப்பிடவேண்டும். அது மட்டுமல்லாமல் இம்மின்மாற்றி அமைந்திருக்கும் இடத்திலிருந்து மிக மிக அண்மையில் இராணுவ பொலிஸ் நிலையம் இருக்கிறது. இதைவிட சுற்றிலும் குறுகிய தூரங்களில் படையினரின் பாதுகாப்பு அரண்களும், முகாம்களும் விழிப்பாயிருக்கின்றன. இப்படியிருக்கையில், நேரத்தில் வெடிக்கும் குண்டினை யார் அதில் பொருத்தினார்கள்? இதனால் பிரதான வீதியும் கடைகளும், அப்பகுதிக்குரிய வீடுகளும் இருட்டில் மூழ்கிப் போயின: பொறுப்பான அதிகாரியிடம் முறையிடப்பட்டது. "இம் மின் மாற்றியினால் பயனடைபவர்கள் பணம் சேர்த்து மின்மாற்றியை மாற்றலாம்" என்று பதில் சொன்னாராம். நமக்கும், நமது பகுதிக்கும் பாதுகாப்பு நாமேயானால் இவர்களும் இவர்களின் படைப்பிரிவுகளும் நமக்கெதற்கு?

தமிழ் நேசன், மட்டுநகர்.

## பிரதேச சபை கவனிக்குமா?

கொட்டகலை பிரதேச சபைக்குட்பட்ட டயகம நகரில் அடிக்கடி குடிநீர் தட்டுப்பாடு ஏற்படுகின்றது, இதனால் மிருந்த சிரமத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளது. டயகம நகரை நிர்வகிக்கும் பிரதேச சபைக்கு இந்த பாராமுகம் ஏன்? நகரிலுள்ளோரின் தற்காலிக திருத்தங்களால் ஓரிரு நாட்கள் நீர் வந்தாலும் அதிகமான நாட்களில் வருவதில்லை, இதற்கான நிரந்தர தீர்வு இல்லையா? புதிய குழாய் தொடர்புகளுக்கு பணம் அறவிடும் பிரதேச சபை, மாணி (மீட்டர்) பொருத்தி பணம் அறவிட்டாவது மக்களின் நீர்த் தேவையை நல்ல முறையில் பூர்த்தி செய்யுமா?.... சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனிப்பார்களா?...

-எம்.வாசன், டயகம.

## விளம்பரப் பகுதி


### மனோதத்துவ வைத்தியம்
### (GENERAL PSYCHIATRIST)

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை மனோதத்துவ சிகிச்சை மூலம் நீக்கி, உங்களை நீங்களே வெற்றி கொள்ள பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்.

இளம் சமுதாயதினர் மெலிந்து, சக்தியிழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்தியிரையின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்களை மனோதத்துவ சிகிச்சை மூலம் உடனே நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 11/2 மணித்தியாலத்தில், தான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள் ஹிஸ்டீரியா ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளையேறுதல், குழந்தைப்பேறு இன்மைக்கும் தீர்க்கமுடியாத வியாதிக்கும் மருந்து உண்டு.

மார்ச் 18 முதல் 28 வரை Dr.P. ARUMUGAM, AHMED TOURIST INN. BANG BANG BULDING NO: 10, RECLAMATION ROAD, (ENTRANCE BANKSHALL ST.) COLOMBO 11. T.P. 436383, 436390 மார்ச் 3,4 Dr. முகைதீன் டிஸ்பென்ஸரி ஓட்டமாவடியிலும், மார்ச் 9,10,11 கல்முனை T.M.M. பாமசியிலும், மற்ற நாட்களில் DR. P. ARUMUGAM No: 50, TISSA WEERASINGAM SQ., BOUNDRY ROAD, BATTICALOAவிலும் சந்திக்கலாம்.





33 வருட கடும் சேவைக்கு பின் உலக மாந்திரீக சக்ரவர்த்தி என பட்டமெடுத்த எமது நிர்வாகத்தில் தெட்டத்தெளிவான சேவை என்னவென்றால் மலையாள மாந்திரீகமோ அல்லது ஜோதிட ஆயுள் கணிப்போ வீட்டுக்கு வீடு வாசல்படி உண்டு. பல மொழிக்கு ஒப்ப எனது நிர்வாகத்தில் எத்தனையாம் திகதி எத்தனை மணிக்கு என்ன கிழமை உங்கள் உந்தன் விடயம் சரிவரும் என்று கருதி உறுதிமுத்திரையுடன் வாங்கும் பணத்திற்கு அத்தாட்சி வழங்கி பெயர் வாங்கிக் கொண்டிருப்பது அரசு அங்கிகாரம் பெற்ற திரு.பி.கே.சாமி (ஜே.டி.ஜீ.என்)ஜே.பி.யின் பி.கே.சாமி அசோசியட் தனியார் நிறுவனம் உண்மை பொய் அறிய நேரில் வந்து காணலாம் திரு.பி.கே.சாமி அவர்களை காலை ஆறு முதல் மாலை 2.00 மணிவரையே சந்திக்கலாம். நேரில் மட்டுமே அவரின் ஆலோசனை பெறலாம். தெளிவுரையாளர் மூலமே தொலைபேசியில் பேசலாம். ஆலோசனைக் கட்டணம் ரூபா 250. வெளிநாட்டவர்கள் ஆலோசனைக் கட்டணம் ரூபா 2000. அவர் அவர் கையிலேயே மாந்திரீகப் பார்சலை ஒப்படைக்க அவர்களது உண்மையான தொலைபேசி சரியான இலக்கத்தை குறிப்பிட்டு அங்கத்தவர் கட்டணம் 2000 ரூபா அனுப்பினால், அவர் இல்லத்திலேயே அவர்களது கையிலேயே எமது பிரதிநிதி பார்சலை ஒப்படைப்பார். வெளிநாட்டவரோ உள்நாட்டவரோ மலையாள மாந்திரீக சக்தி உதவி தேவையென்றால் உண்மை சேவையான எமது ஸ்தாபனத்திற்கு வருகை தரலாம்.

**நேரிலோ, அல்லது தொலைபேசியிலோ, கடிதத்தொடர்புகளுக்கோ**

திரு.பி.கே.சாமி (J.D.G.A.N) JP
ஸ்ரீ துர்க்காதேவி ஸ்தானம்,
162, கொட்டாஞ்சேனை வீதி,
கொழும்பு-13.

தொலைபேசி வரிகள்:- 01-342463, 342464, 344432, 344431.
நுவரெலியா:- 052 3093, 2508, 3570, 3336.

இன்னும் உண்மை விளங்க எமது விளம்பர சேவை 'ஜோதிடம் பார்ப்போம்' நிகழ்ச்சி பிரதி சனிக்கிழமைதோறும் காலை 10.45 மணிக்கு FM 99இல் நடைபெறும் கேட்டு உண்மை அறியலாம்.



**BRIGHT**ன் தபால் மூலம் கல்வித்திட்டம்

மூன்றே மாதங்களில்
ஆங்கிலம்/சிங்களம் பேச, எழுத,
வாசிக்க கற்றுத்தரப்படும்
விபரங்களுக்கு கீழ்காணும்
விண்ணப்பத்துடன் தொடர்பு கொள்க

பெயர்: ..............................
விலாசம்: ..............................

**BRIGHT TRAINING CENTRE**
S-27, FIRST FLOOR, P.O. BOX. 162,
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX
COLOMBO 11. TEL: 434770



1996ஆண்டுஆகஸ்ட் மாதம்
நடைபெறவுள்ளஆண்டு 5 புலமைப்பரிசில்
போட்டிப் பரீட்சைக்கான
**BRIGHT** ன் வெற்றிக்கனி இதழ்
7முதல்12வரை முன்னோடிப் பயிற்சி நூல்
மாதந்தோறும் வெளி வருகின்றது.

மாணவர்களின் நலன் கருதி 1995 ஆண்டு வினாப்பத்திர வினாக்களை போல தயாரிக்கப்பட்டு மாதந்தோறும் வெளி வரும். ஆண்டு 5 மாணவர்கள் பரீட்சையில் கூடிய புள்ளிகள் பெற்றுக்கொள்ள பாவிக்க வேண்டிய நூல்

**வெற்றிக்கனி யாகும்.**

வெற்றிக்கனி இதழ் 7 முதல் 12 வரை பெறவிரும்பும் மாணவர்கள் 5 இதழ்களுக்கும் 250/= ரூபாவை செலுத்தி தொடர்ந்து பெற்றுக்கொள்ளமுடியும். இதழ் 1முதல் 6 வரையான வெற்றிக்கனிக்களஞ்சியமும் 250/= செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். கட்டணத்தை காசுக் கட்டளையாக The Director - BBC எனும் பெயருக்கு SEA STREET SPO தபாற்கந்தோரில் பெறக்கூடியதாக பதிவுத் தபாலில் விண்ணப்பத்துடன் அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

முழுப்பெயர் : ..............................
முகவரி : ..............................
..............................
காசுக்கட்டளை இல : ..............................

**BRIGHT BOOK CENTRE (PVT) LTD.**
S - 27 FIRST FLOOR, P.O. BOX - 162
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX
COLOMBO - 11 T.P : 434770



படிப்பகம்

www.padippakam.com

# சந்திரிக்காவுக்கு எச்சரிக்கை

## "வழியெங்கும் கவனம் மங்களம் – சுபமங்களம் கதிர்காமரையும் கவனமாகப் பார்த்துக் கொள்ளவும்."

### எக்ஸ்ரே ரிப்போர்ட்

**ஜ**னாதிபதி சந்திரிக்காமீது புலிகள் கடும் கோபத்தில் இருக்கிறார்கள்.

இதுவரை பதவியில் இருந்த ஆட்சித் தலைவர்கள் மத்தியில் புலிகளுக்கு பெரும் சவாலாக மாறியிருப்பவர் சந்திரிக்காதான்.

ஜனாதிபதி சந்திரிக்காவின் சமாதானக் கோஷம் வெளியுலகில் ஆதரவினைப் பெறும் ஆயுதமாக மாறியிருக்கிறது.

அதுதான் புலிகளுக்கு மாபெரும் பாதகம். "போர் என்றால் போர்" என்று ஜே.ஆர். பாணியில் மார்தட்டினால் புலிகளுக்கும் சந்தோசம்தான்.

அல்லது, மரம் செடி கொடி என்று விஜயதுங்கா பாணியில் பேசினாலும் மகிழ்ச்சிதான்.

புலிகள் நம்நாட்டு பிரஜைகள் அவர்களுடன் உள்ள பிரச்சனைகளை நமக்குள் தீர்த்துக் கொள்ளலாம் என்று பிரேமதாசா அறிவித்திருந்தார்.

வெளியுலக ஆதரவை பிரேமதாசா கோரவில்லை. அதனால் புலிகளது வெளிநாட்டு பிரசாரங்கள் பாதிப்படையவில்லை.

அந்தவகையில் பிரேமதாசா புலிகளைப் பொறுத்தவரை ஆபத்தில்லாதவராக இருந்தார்.

ஆனால், தமிழ் மக்கள் மத்தியில் பிரேமதாசா நல்லவர் என்றொரு அபிப்பிராயம் இருந்தது.

உதாரணமாக, பிரேமதாசா ஆட்சியில் இனக்கலவரம் ஏற்படக்கூடும் என்ற நினைப்புக்கூட தென்னிலங்கையில் உள்ள தமிழர்கள் மத்தியில் எழுந்ததில்லை.

அந்தளவுக்கு பிரேமதாசாவின் மீது தமிழ் மக்கள் மத்தியில் ஒரு நம்பிக்கை இருந்தது.

பிரேமதாசாவால் இனப்பிரச்சனையைத் தீர்க்க முடியாவிட்டாலும், இனப்பூசலைத் தோற்றுவிக்கமாட்டார் என்று நம்பப்பட்டது.

அந்த நம்பிக்கைதான் புலிகளுக்கு பிடிக்காத விஷயம்.

தம்மைத் தவிர, தமிழ் மக்கள் நம்பிக்கை வைக்கக்கூடிய வேறொரு சக்தி இருப்பது எப்போதும் ஆபத்து என்பது பிரபாகரனின் கணிப்பு.

அதுவும் ஆட்சியில் இருக்கும் ஒருவர் தமிழ் மக்களது நம்பிக்கையைப் பெற்றிருந்தால் தமது போராட்டத்தையே பலவீனப் படுத்துமளவுக்கு நிலமை மாறலாம் என்று புலிகள் நினைத்தார்கள்.

ஆக, வெளியுலக நிலவரப்படி பிரேமதாசாவால் புலிகளுக்கு பாதகமில்லை. உள்நாட்டில் தமிழ் மக்கள் மத்தியில் பிரேமதாசா தொடர்பாக இருந்த நல்ல அபிப்பிராயம்தான் புலிகளுக்கு பிரச்சனையாக இருந்தது.

அதனால்தான் தற்கொலைத் தாக்குதல் திட்டம் வகுக்கப்பட்டது. கரும்புலியை பிரேமதாசாவின் கோட்டைக்குள்ளேயே அனுப்பிவைத்தனர்.

அதன்பின்னர் ஜனாதிபதி சந்திரிக்கா தொடர்பாக தமிழ் பேசும் மக்கள் மத்தியில் ஏற்பட்ட நம்பிக்கை புலிகளே எதிர்பார்க்காத ஒன்று தான்.

பிரேமதாசாவுக்கு தமிழ் மக்களிடம் இருந்த ஆதரவை விட மூன்று மடங்கு அதிகமான ஆதரவை சந்திரிக்கா பெற்றுக் கொண்டார்.

பாராளுமன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் இரண்டிலும் மளமளவென்று சாதனைப் பட்டியல் உயர்ந்தது. உலக அரங்கில் புதிய பெண் தலைவிக்கும், அவரது புன்னகைக்கும் அமோக வரவேற்புக் கிடைத்தது.

உள் நாட்டிலும், வெளிநாட்டிலும் ஒரே நேரத்தில் அமர்க்களமான செல்வாக்குப் பெற்ற இலங்கையின் ஆட்சித் தலைவர் சந்திரிக்காதான்.

புலிகளைப் பொறுத்தவரை இது கிணறு வெட்டப் பூதம் கிளம்பிய கதை.

பிரேமதாசா கொல்லப்பட்டு விஜயதுங்கா பதவிக்கு வந்தபோது, தாம் நினைத்த விளைவுதான் அறுவடையாகியிருக்கிறது என்று புலிகள் சந்தோசப்பட்டார்கள்.

ஏனெனில், விஜயதுங்காவைவிட வேறு யாராலும் அந்தளவுக்கு தமிழ் மக்களை வெறுப்பேற்றி இருக்க முடியாது. மனுசன் மிகத் திறமையாக அந்தக் காரியத்தைச் செய்து, புலிகளுக்கு உபயோகமாக இருந்தார்.

அதற்கு நன்றியாகவோ என்னவோ விஜயதுங்காவுக்கு கரும்புலி அனுப்பாமல் இருந்துவிட்டார் பிரபாகரன்.

ஆனால், விஜயதுங்காவுக்குப் பின்னர் பதவிக்கு வந்த சந்திரிக்கா, தனக்கு முன்பிருந்த தலைவர்களையெல்லாம் செல்வாக்கு விடயத்தில் தூக்கிச் சாப்பிட்டுவிட்டார்.

பிரேமதாசா உள்நாட்டு அரசியலில் பழம் தின்று கொட்டை போட்டவர். ஜே.ஆரைவிட மக்களின் நாடித்துடிப்பை அறிந்தவர் பிரேமதாசாதான்.

அவரால்கூட வெளியுலகில் மாபெரும் செல்வாக்கை சேகரிக்க முடியவில்லை.

ஜனாதிபதி சந்திரிக்காவோ பதவிக்கு வந்த சூட்டோடு வெளியுலகையும் மிகச் சுலபமாக வசீகரித்துவிட்டார்.

பிரேமதாசா இனக்கலவரம் ஏற்பட இடமளிக்கமாட்டார் என்று நம்பிய தமிழர்கள் கூட இவர் இனப்பிரச்சனையைத் தீர்த்து வைப்பார் என்று பெரிதாக நம்பவில்லை.

ஆனால் சந்திரிக்கா பதவிக்கு வந்த போது, அவர் இனப்பிரச்சனைக்கும் தீர்வு காணப் போகிறார் என்று தமிழ் மக்கள் மத்தியில் பலத்த நம்பிக்கை தோன்றியது.

சந்திரிக்கா பதவிக்கு வந்த புதிதில் வடக்கு-கிழக்கில் ஒரு கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு நடத்தியிருந்தால், பிரபாகரனை விட சந்திக்காவுக்குத்தான் அதிக வாக்குகள் கிடைத்திருக்கும்.

பிரேமதாசா,காமினிதிசநாயக்க போன்ற செல்வாக்கான சிங்கள அரசியல் தலைவர்களை கொலை செய்தது மூலம் தென்னிலங்கை அரசியல் தலைமைத்துவத்தை பலவீனமாக்கலாம் என்று புலிகள் நினைத்திருந்தால், சந்திரிக்காவின் வரவு அதற்கு நேர் மாறாகிவிட்டது.

பிரேமதாசா, காமினி திசநாயக்கா ஆகியோரை அப்புறப்படுத்தியது மூலம் புலிகள் சந்திரிக்காவுக்கு மறைமுமாக உதவியது போலாகிவிட்டது.

குறிப்பாக காமினிதிசநாயக்காவை அப்புறப்படுத்தியது மூலம் சந்திரிக்காவுக்கு தினமும் தலையிடி கொடுத்துக் கொண்டிருக்கக்கூடிய எதிரணித் தலைமையை புலிகளே இல்லாமல் செய்துவிட்டார்கள்.

காமினி கொலை மூலம் ஜனாதிபதித் தேர்தலில் நெருக்கடி ஏற்படும். அனுதாப அலை காரணமாக சந்திரிக்காவின் வெற்றி வாய்ப்பு பாதிக்கப்படும். அரசியல் நெருக்கடியில் தென்னிலங்கை சிக்கிக் கொள்ளும் என்று புலிகள் கணக்குப் போட்டார்கள்.

ஜனாதிபதித் தேர்தல் முடிவு அந்தக் கணக்கைப் பொய்ப்பித்துவிட்டது.

காமினிக்கு விழவிருந்த வாக்குகள்கூட ஐ.தே.கட்சி வேட்பாளரின் ஆளுமை இன்மையால் சந்திரிக்காவுக்கு விழுந்தன.

ஆக, கிணறு வெட்ட பூதம் கிளம்பிய கதை அதுதான்.

அதன்பின்னர்தான் புலிகள் கத்தியை உறைக்குள் போட்டுக் கொண்டனர்.

ஜனாதிபதி சந்திரிக்காவை நேரடியாக எதிர்த்தால் தமக்குத்தான் சேதம் என்று உணர்ந்து கொண்டனர்.

எனவே– பேச்சுவார்த்தை, போர்நிறுத்தம் என்ற கட்டங்களை எதிர்கொண்டு காய் நகர்த்த திட்டமிட்டனர்.

"எந்தவொரு சிங்கள அரசும் பிரச்சனையைத் தீர்க்காது" என்பது பிரபாவின் மிக உறுதியான நம்பிக்கை.

அதனை மக்கள் உணராதபோது அவர்கள் போக்கில் கொஞ்சக்காலம் விட்டுப் பிடிக்கவே பேச்சுவார்த்தைகள்.

பேச்சுவார்த்தை முடிவு எப்படி இருக்க வேண்டும் என்பதை பிரபா முன்கூட்டியே முடிவு செய்திருந்தார்.

'ஜனாதிபதி சந்திரிக்காவும் அவருக்கு முன்பிருந்த தலைவர்கள் போலத்தான். இவராலும் பிரச்சனையைத் தீர்க்க முடியாது' என்று தமிழ் மக்கள் புரிந்து கொள்வதுதான் பேச்சுவார்த்தையின் முடிவாக இருக்க வேண்டும் என்று பிரபா தீர்மானித்திருந்தார்.

ஆனால், பிரபா எதிர்பார்த்ததுக்கு மாறாக பேச்சை நீடித்துச் செல்ல அரசு முயன்றது. ஜெனரேட்டர்களை அனுப்பியது. பொருளாதாரத் தடைகளை மெல்ல மெல்ல விலக்கியது.

இப்படியே காலத்தை இழுத்துச் செல்வதால் யாருக்கு இலாபம்? என்று கணக்குப் பார்த்தார்கள் புலிகள். அரசுக்குத்தான் அதிக இலாபம் என்று தெரிந்தது.

காலக்கெடு விதித்துவிட்டு போர் நிறுத்தத்தை முறித்துக் கொண்டார்கள்.

போரை முதலில் ஆரம்பித்தவர்கள் புலிகள்தான் என்ற அம்சத்தை வைத்து வெளியுலகில் தன்னை நியாயப்படுத்திக் கொண்டது அரசாங்கம். தற்போதுவரை அந்த அம்சம்தான் வெளியுலகில் புலிகளை கடுமையாகப் பாதித்துக் கொண்டிருக்கிறது.

ஆனால், இலங்கையில் உள்ள தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஜனாதிபதி சந்திரிக்காமீது ஆரம்பத்தில் இருந்த நம்பிக்கை சரிபாதிக்கும் மேலாக சரிந்திருக்கிறது.

வடக்கு-கிழக்கைப் பொறுத்தவரை பொதுஜன முன்னணி அரசாங்கமும் முன்னைய அரசாங்கங்கள் போலத்தான் என்று தமிழ் மக்கள் நினைக்கத் தொடங்கி விட்டார்கள்.

நவாலி தேவாலய வளாகத் தாக்குதல், நாகர் கோவில் பாடசாலைமீதான தாக்குதல் போன்றவற்றின் பின்னர் யாழ் குடாநாட்டு மக்கள் புலிகளது பதிலடி நடவடிக்கைகளைஆதரிக்கத் தொடங்கினார்கள்.சூரியக் கதிர் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்ட வேகமும், கொடி கட்டுவதில் காட்டிய ஆர்வமும், இடம்பெயர்ந்த மக்கள் விடயத்தில் என்ன செய்யலாம் என்று முடிவெடுப்பதில் காணப்படவில்லை.

மக்கள் இடம்பெயர்ந்து சென்றதால் பாரிய உயிரிழப்புக்கள் தவிர்க்கப்பட்டன என்ற அம்சத்தை அரசாங்கம் கவனத்தில் கொள்ளாமல், இடம் பெயர்ந்த மக்களை அரசாங்கத்திற்கு விரோதமான மக்களாக நோக்குவதும் அதிருப்திகளை தோற்றுவிக்கின்றன.

மூதூர் படுகொலைகள், கிண்ணையடி வீடு எரிப்புக்கள், சோதனை அரண்களில் நடக்கும் அத்துமீறல்கள், சேஷ்டைகள் போன்றவை மக்களது மனங்களை வென்றெடுக்கும் நடவடிக்கைகள் அல்ல.

'நாமும் முன்பிருந்தவர்கள் போலத்தான்' என்று வலுக்கட்டாயமாக நிரூபிப்பது போலவே காரியங்கள் நடக்கின்றன.

புலிகளைப் பொறுத்தவரை இந்த நிலை அவர்களுக்கு சாதகம்தான் ஓரளவு வெற்றி என்றும் சொல்லலாம்.

ஜனாதிபதி சந்திரிக்காமீது தமிழ் மக்கள் வைத்த நம்பிக்கை பொய்த்துவருவது புலிகள் விரும்பி எதிர்பார்த்த ஒன்றுதான்.

ஜனாதிபதி சந்திரிக்கா மூலமாக புலிகள் எதிர்நோக்கிய நெருக்கடிகள் இரண்டு.

ஒன்று; உள்நாட்டில் தமிழ் மக்கள் மத்தியில் சந்திரிக்காவுக்கு ஏற்பட்ட செல்வாக்கு.

இரண்டு; வெளிநாடுகளில் சந்திரிக்கா அரசுக்கு தேடிக்கொண்ட பலத்த ஆதரவு.

இதிலே முதலாவது நெருக்கடியில் இருந்து புலிகள் மீண்டுவருகிறார்கள்.

அரசியல் தீர்வு யோசனையில் ஏற்பட்டுள்ள பிடுங்குப்பாடுகளும், பேரினவாதிகளுக்கு பணிந்து செய்யப்படும் விட்டுக் கொடுப்புகளும் புலிகளை தமிழ் மக்கள் மத்தியில் அரசியல் ரீதியில் மேலும் நியாயப் படுத்தப் போதுமானவையாகும்.

இப்போது புலிகள் தாக்குதலை நேரடியாகவே ஆரம்பித்துவிட்டார்கள்.

எல்லாவற்றுக்கும் காரணம் சந்திரிக்காதான் என்று காட்டமான வார்த்தைகளால் கண்டிக்கத் தொடங்கிவிட்டார்கள்.

இதே வார்த்தைகளை சந்திரிக்கா ஜனாதிபதியான நேரத்தில் புலிகள் பயன்படுத்தி இருந்தால், தமிழ் மக்கள் முகம் சுளித்திருப்பார்கள். இப்போது நிலமை மாறிவருகிறது.

அரசியல் தலைவர்கள்மீது குறிவைக்க முன்னர் புலிகள் முதலில் செய்வது அம்பலப் படுத்தல்.

ஒருவரை அழிக்கும் முன்னர் அவரது புகழை அழித்துவிட்டுத்தான் புலிகள் தமது குறியை வைப்பார்கள்.

காமினிக்கு குறிவைக்க முன்னர் யாழ் நூல் நிலைய எரிப்புத் தொடர்பாக விசாரணை நடத்துமாறு கோரினார்கள் புலிகள்.

அரசாங்க பிரசார சாதனங்களும் அந்தக் கோரிக்கையை மகிழ்வோடு பிரசாரம் செய்தன.

எதிரிக்கு எதிரி நண்பன் என்ற ரீதியில் அரசாங்கம் புலிகளின் கோரிக்கைக்கு முக்கியத்துவம் கொடுத்தது. அக் கோரிக்கை பிரபலமானதால் காமினி தொடர்பாக மறந்திருந்த குற்றச்சாட்டு எல்லோரது நினைவிலும் வந்தது.

அதன்பின்னர் காமினி கொல்லப்பட்டார். அது தண்டனை வழங்கப்பட்டதுபோல அமைந்துவிட்டது.

இப்போது ஜனாதிபதி சந்திரிக்கா தொடர்பான கண்டனப் பிரசாரங்கள் சூடு பிடித்துள்ளன.

ஜனாதிபதியை குறிவைத்து வகுக்கப்பட்ட திட்டம்தான் புத்த பிக்குகள் வேடத்தில் கரும்புலித் தாக்குதல்.

சிங்களம் சரளமாகத் தெரிந்த ஒரு ஆசிரியர் மூலமாக ஒரு மாதகாலமாக 50 பேருக்கு வகுப்புக்கள் எடுக்கப்பட்டன.

பௌத்த மதம் தொடர்பான விளக்கங்கள், பழக்கவழக்கங்கள் போன்றவையும் போதிக்கப்பட்டன.

அந்த வகுப்புக்களில் கலந்து கொண்டவர்களில் 20 பேர் பொறுக்கி எடுக்கப்பட்டனர்.

பௌத்த மதகுருமார்கள் அரச விழாக்களில் கலந்து கொள்ளும் காட்சிகள் அடங்கிய வீடியோ கசட்டுக்கள் கொழும்பிலிருந்து அனுப்பிவைக்கப் பட்டன.

அந்த 20 பேருக்கும் அவை போட்டுக் காண்பிக்கப்பட்டன. பதட்டம் எதுவுமில்லர்மல் ஜனாதிபதி கலந்துகொள்ளும் நிகழ்சியில் சேர்ந்து கொள்ளத்தான் அந்தப் பயிற்சி.

திட்டம் கிட்டத்தட்ட பூர்த்தியான நிலையில், புலிகளது உளவுப் பிரிவிற்குள் இருந்து விஷயம் எப்படியோ கசிந்து விட்டது.

திட்டத்தின் அபாயத்தை உணர்ந்து கொண்ட பாதுகாப்புத் தரப்பு உடனடியாக தான் அறிந்த செய்தியை மக்களுக்கு அறிவித்தது.



## நாரதர்

புத்தபிக்குமார் வேடத்தில் கரும்புலிகள் தாக்குதலுக்கு திட்டமிடப்பட்டதையும், எவ்வாறெல்லாம் கட்டம், கட்டமாக திட்டமிடப்படுகிறது என்பதையும் பாதுகாப்பு தரப்புக்கு விளக்கியவர் புலிகளது உளவுப் பிரிவுக்கு மிக நெருக்கமான ஒருவர்தான் என்று தகவல்.

ஒரு மாதத்திற்கு ஒரு தடவை தாண்டிக்குளம் ஊடாக வவுனியா வந்து செல்பவராம் அவர். இத்தனைக்கும் புலிகளுக்கும் வேண்டப்பட்டவராக இருக்கிறாராம் அந்த நபர். மிக நம்பிக்கையான வட்டாரத்தில் இருந்து முரசுக்கு கிடைத்த தகவல்கள்தான் இவை. முன்னர் வெலிஓயாத் தாக்குதல் திட்டமும் முன்கூட்டியே கசிந்ததும் தெரிந்ததுதானே.

இதேவேளையில், புலிகளது ஆஸ்தான கவிஞர் என்றழைக்கப்படும் புதுவை இரத்தினதுரை ஒரு கவிதை எழுதியிருக்கிறார். பிரபா என்ன நினைக்கிறார் என்று அவருடன் பேசியறிந்து எழுதுபவர் புதுவை இரத்தினதுரை. கவிதையில் பல பகுதிகளை இங்கு வெளியிட முடியாது. (சுய தணிக்கை) ஒரு முக்கிய பகுதி இது.

***"பெண்ணே! பழி சுமந்து கொண்டாய்.***
***இனியென்ன,***
***வழியெங்கும் கவனம்.***
***மங்களம், சுப மங்களம்.***
***கவனம்***
***கண்டவன் நிண்டவனெல்லாம்***
***குண்டு வைப்பான்!***
***இனி என்ன நடக்குமோ***
***ஏது நடக்குமோ?***
***கதிர்காமரையும்***
***கவனமாகப் பார்த்துக்கொள்ளவும்."***

என்று எழுதப்பட்டுள்ளது.

இக் கவிதை வெளியான பின்னர்தான் புத்தபிக்குகள் வேடத்தில் கரும்புலிகள் தாக்குதல் நடத்தவிருந்த திட்டம் கசிந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அதிரடி அய்யாத்துரை



**ப**ச்சை அணிக்குள் இருக்கும் அம்மாவின் புத்திரர் அதிகாரப் பகிர்வு விஷயத்தைக் கடுமையாக எதிர்க்கிறார். பிராந்திய சபை, அதுக்கு ஒரு அதிகாரம் எண்டதெல்லாம் துப்பரவாகப் பிடிக்கேல்லை எண்டு சொல்லிப் போட்டாராம். அவருடன் சேர்ந்து கட்சிமாறிவந்த கோஷ்டிதான் கடும் போக்கினராக இருக்கினமாம்.

**அ**திகாரப் பகிர்வு தொடர்பாகப் பேச கூட்டான கட்சியிடம் ஐந்து தமிழ்கட்சிகள் சார்பாக கேட்கப்பட்டதாம். கூட்டான கட்சியில் ஆளாளுக்கு ஒன்று சொல்லுகிறார்களாம். 'அவர் விரும்பமாட்டார்' எண்டு தங்களுக்கு பிடிக்காத சகாக்கள் மீது ஒவ்வொருத்தரும் பழி போடுகினமாம்.

**ரெ**ண்டு எழுத்தார் அயல்நாட்டை கண்டபடி ஏசுகினம். ஆனால் பாருங்கோ, கிரிக்கெட் போட்டியிலை அயல்நாடு விளையாடும் நேரத்திலை, சொந்தநாடு மாதிரியல்லோ தமிழ் சனம் விழுந்து விழுந்து சப்போட் பண்ணுகினம். யார் அந்த பொடியன்? டெண்டுல்கராம். அந்தப் பொடி நூறு அடிச்சா எங்கட சனமும் விசில் அடிக்குதுகள். மொஸ்கோவிலை மழை பெய்தா கொழும்பிலை குடை பிடிச்ச கம்யூனிஸ்ட்காரர்கள் மாதிரி, கல்கத்தாவிலை ஃபோர் அடிச்சா கல்கிசையிலை விசில் அடிக்கினம். வாழ்க நட்புறவு.

**அ**வுஸ்திரேலியாவில் ஆட்சிமாறியதால் ரெண்டு எழுத்தாருக்கும் சில பாதிப்புக்கள் இருக்குதாம். முன்பிருந்த அரசாங்கம் ஆதரவான போக்கில் இருந்ததாம். அதனால் அங்கிருந்து சில காரியங்கள் செய்யக் கூடியதாக இருந்ததாம். புதுசு எப்படியிருக்கப் போகுதோ தெரியேல்லை எண்டு யோசிக்கினமாம்.

**த**லைநகரில் சில பாடசாலைகளில் பெற்றோர்களை சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டிருக்கிறதாம். தாம் கொடுக்கும் வீட்டு வேலைகளை பிள்ளைகளிடம் கொண்டு சென்று கொடுக்க வேண்டும். அவர்கள் விடை எழுதியவுடன் பெற்றோர்கள் அந்தவிடைத்தாள்களைக் கொண்டு வந்து பள்ளியில் கொடுக்கவேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறதாம். பள்ளிக் கூடம் போய்வரும் பிள்ளைகளை அம்மா கொஞ்சி வரவேற்பது அந்தக் காலம். பள்ளிக்குப் போய் வரும் அம்மாக்களை பிள்ளைகள் வீட்டிலிருந்து கொஞ்சி வரவேற்பது இந்தக்காலம்!

**பா**ராளுமன்ற கட்சிகளைச் சந்தித்து தீர்வு யோசனை தொடர்பாக நீதிக்குப் பொறுப்பானவர் கலந்துரையாடினவராம். மாலையில் விருந்தும் கொடுத்தவராம் இரண்டிலும் அதிகாரத்தரப்பு ஆள் மாதிரியே கலந்து கொண்டாராம் மிஸ்டர் நீலமானவர். எல்லாம் செய்துபோட்டு பத்திரிகைகளுக்கு அதுவும் குறிப்பாக தமிழ் பத்திரிகைகளுக்கு உணர்ச்சிவசப்பட்டமாதிரி அறிக்கையும் விட்டுக் கொள்ளுவினம். உதுதானுங்கோ சாணக்கியம்.

**சி**றைக்குள் நடைபெற்ற அசம்பாவிதம் பற்றிக் கேள்விப்பட்டிருப்பியள். வெளியே வராத ஒரு செய்தி என்ன தெரியுமோ? ரெண்டு எழுத்து சந்தேக நபர்கள் அதிகாரிகளுக்கு இரும்புக்கம்பிகளால் பலமான சாத்துப்படி கொடுத்துப் போட்டினமாம். வெளியே சொன்னால் வெட்கம் எண்டு அதை மெல்ல அமுக்கிப்போட்டினமாம் மேலதிகாரிகள்.

**ஃபி**ரான்சிலிருந்து ஆங்கிலப் பத்திரிகை ஒன்றை ரெண்டு எழுத்தார் வெளியிடப் போகினம். முன்னர் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த ஆங்கிலப் பத்திரிகையின் பெயர் 'சனிநோக்கு'. அதன் ஆசிரியர் சிவத்தார் ஃபிரான்ஸ் ஆங்கிலப் பத்திரிகைக்கு ஆசிரியராக செயற்படுவாராம். யார் பத்திரிகையாக இருந்தாலும் விஷயங்களை உள்ளபடி சொன்னாச் சரிதான்.

**'ல்**கமி', 'சர்பா' இதெல்லாம் என்ன சொல்? என்ன அர்த்தம்? 29.02.96 இரவு ரூபவாகினித் தொலைக்காட்சியில் ஒரு பாட்டு நிகழ்ச்சியில் திரையில் விழுந்த தமிழ பட்டபாடுதான் அது. தமிழ் எழுத்துக்களை காட்டினால் தமிழை அமுல்படுத்தினமாதிரித்தானே. சொற்கள் வாக்கியங்கள் அர்த்தத்தோடு வரத் தேவையில்லை எண்டு நினைக்கினமாக்கும்? ரூபவாகினியில் கூட இப்படியான கொடுமை? தமிழ் பிரிவுக்காரர்களுக்கு கட்டிக்காட்ட முதுகெலும்பு இல்லை. பதவியல்லோ போயிடும்.

**இ**ந்த வாரம் சித்தர் பாடல். பட்டினத்தாரை அழைக்கிறேன்.

"பிறந்தன இறக்கும், இறந்தன பிறக்கும்
தோன்றின மறையும், மறைந்தன தோன்றும்.
பெருத்தன சிறுக்கும், சிறுத்தன பெருக்கும்.
உணர்ந்தன மறக்கும், மறந்தன உணரும்.
புணர்ந்தன பிரியும், பிரிந்தன புணரும்."



படிப்பகம்

www.padippakam.com

அரசியல் தொடர்

அற்புதன்

# '86ல் ஏழுநாள் போர்

## பேச்சும்—வேட்டையும்

ஈழப் போராளி அமைப்புக்களது விருப்பங்களுக்கு மாறாக ஜே.ஆர்.அரசுடன் பேச்சு நடத்த முன்வந்தனர் கூட்டணியினர்.

இந்திய அரசு சொன்னதால்தான் பேச்சுவார்த்தைகளுக்கு செல்லுகிறோம் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தெரிவித்தனர்.

திம்பு பேச்சுவார்த்தைக்குப் பின்னர் கொழும்பில் ஜே.ஆர்.அரசுக்கும், தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் இடையே 1986 ஜுலை மாதம் பேச்சுவார்த்தை ஆரம்பித்தது.

மாகாண சபைத் திட்டத்தை கொழும்பில் வைத்து கூட்டணியினர் பரிசீலித்துக் கொண்டிருந்தபோது வடக்கு-கிழக்கில் இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்தன.

திருக்கோணமலையில் மட்டும் நூறு பேர் வரை கொல்லப்பட்டனர். அவர்களில் மூதூர் அகதி முகாமில் இருந்து மட்டும் 60 பேர் வரை கொல்லப்பட்டனர். 40 பேர் வரை காணாமல் போயினர்.

மன்னார் மாவட்டத்தில் 50 பேர்வரை கொல்லப்பட்டனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் 38 பேர் பலியானார்கள்.



வவுனியாவில் 30 பேர் வரை சுட்டுக் கொல்லப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தில் 25 பேர் வரை கொல்லப்பட்டனர்.

ஒரு புறம் இராணுவ நடிவடிக்கை காரணமாக தமிழர்கள் கொல்லப்பட்டுக் கொண்டிருக்க, மறுபுறம் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டதை இயக்கங்கள் கடுமையாகக் கண்டித்தன.

## வீரவேங்கை விமர்சனம்

ஜே.ஆர்.அரசு முன்வைத்துள்ள மாகாண சபை தீர்வு யோசனை தொடர்பாக வீரவேங்கை பத்திரிகையில் பின்வருமாறு கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

"இந்திய அரசின் முயற்சியினால் கூட்டப்பட்ட திம்பு மாநாட்டில் இந்திய அரசின் வார்த்தைக்கு மதிப்பளித்து, ஈழ மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் தமிழீழ விடுதலைப் புலிகளும், ஏனைய இயக்கங்களும் கலந்து கொண்டன. கூட்டாக தமது நிலைப்பாட்டை முன்வைத்தன. அதன் முக்கிய அம்சங்கள் வருமாறு:-

1. தமிழ் மக்கள் ஓர் தனியான தேசிய இனம் என்பது அங்கீகரிக்கப்பட வேண்டும்.

2. தமிழ் பேசும் மக்கள் தொடர்ச்சியாக வாழும் பாரம்பரிய பிரதேசங்கள் தமிழ் பேசும் மக்களது தாயகம் என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

3. தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமை ஏற்றுக்கொள்ளப்படவேண்டும்.

இப்பொழுது ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவால் இந்திய அரசு மூலமாக முன்வைக்கப்பட்டுள்ள மாகாண சபை திட்டத்தில் பழையபடி அரைத்த மாவே அரைக்கப்பட்டிருக்கிறது.

தமிழ் அமைப்புக்கள் திம்புவில் முன் வைத்த திட்டங்களின் வாசனைகூட இல்லை.

பெயரளவில் மாகாண சுயாட்சியே தவிர, சுயாட்சித் தன்மை துளியளவும் இல்லை.

தமிழீழ மக்களின் பாரம்பரிய தாயகம்-அதாவது வடக்கு-கிழக்கு பிராந்தியங்கள்- நிரந்தரமாகவே பிரிக்கப்படுகிறது. அவை இணைந்து ஒரே அரசாக செயற்பட முடியாது.

மாகாணங்களுக்கிடையிலான நீர்ப்பாசனத் திட்டங்கள் யாவும் மத்திய அரசிடமே தொடர்ந்து இருக்கும். சிங்களக் குடியேற்றங்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு மாகாண சபைகளுக்கு அதிகாரம் கிடையாது.

தமிழ் மக்களின் மிக முக்கியமான கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலைத் துறைமுக நிர்வாகம் தமிழர்களின் கைகளில் இருக்காது.

## தூக்குக்கயிறு

இவையெல்லாவற்றையும் விட ஜெயவர்த்தனாவின் மாகாணசபைத் திட்டம் ஒரு தூக்குக் கயிறு. இதனை ஏற்றுக் கொண்டால் இலங்கைத்தீவு ஒரே நாடு என்பதையும், ஒற்றையாட்சி நாடென்பதையும் ஏற்றுக் கொண்டதாகிவிடும்.

பௌத்தம் அரச மதம், சிங்கக் கொடி, சிங்களத் தேசிய கீதம் என்பவற்றை உள்ளடக்கிய ஒற்றையாட்சி என்னும் தூக்குக் கயிற்றில் நாமே நமது தலையைக் கொடுத்தது போலாகி விடும்.

இத்தகைய இழி நிலையை ஏற்பதற்கா 1977இல் இருந்து இதுவரை இருபதினாயிரத்துக்கு மேற்பட்ட தமிழர்களை பலிகொடுத்தோம்?

கொடிய விஷத்தை அமிர்தமாகக் கருதிக் குடித்துத் தின்று உயிரைத் தியாகம் செய்த இளைஞர்கள் எத்தனை பேர்?

தமிழீழ இயக்கங்களையும், இந்திய அரசையும் ஏமாற்றி கண்ணாமூச்சி காட்டும் மாகாணசபைத் திட்டத்தை முன் வைத்து உலக அரங்கிலே தான் நியாயமாக நடப்பதுபோல நாடகமாடுகிறார் ஜே.ஆர்.

உண்மையில் ஜெயவர்த்தனா நடத்தி முடிக்க விரும்புவது தமிழர்களுக்கு சமவுரிமை அளிக்கும் சமரசமல்ல. தமிழர்களை மீளா அடிமை நிலைக்குள் தள்ளும் சாணக்கியம் நிறைந்த சமரசத் திட்டமாகும்.

தமிழீழ மக்களிடமிருந்து நூற்றுக்கு நூறுவீதம் "இறைமையுள்ள சுதந்திரத் தமிழீழம்" என்று 1977 இல் வீர முழக்கமிட்டது கூட்டணி.

1979 இல் மாவட்டத்துக்கு பின்னால் ஆலவட்டம் பிடித்துக் கொண்டு ஓடியது கூட்டணி.

கூட்டத்தில் கூடி நின்று கூவிப் பிதற்றி தமது நாவன்மையால் வாக்கு வேட்டையாடிய அரசியல் குத்துக்கரண வீரர்கள், இன்றும் அதே பழைய மாவட்டத்தை 'மாகாணமாக்கி' தமிழர்களை கிணற்றிலே விழுத்த ஜெயவர்த்தனாவுக்கு ஒத்துழைப்புத் தருகின்றனர்.

இல்லாவிட்டால், மாகாணசபை திட்டத்தில் கூட்டணியினரோடு 90 வீத உடன்பாடு கண்டுவிட்டதாக ஜே.ஆர். துணிந்து கூறுவாரா?

டில்லியில் இனி நடைபெறும் மூன்றாவது சுற்றுப் பேச்சில், வடக்கு-கிழக்கு இணைப்பு விவகாரமே முக்கிய இடம்பெறும் என்று, 11.9.86இல் வீரகேசரிக்கு அளித்த பேட்டியில் அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

இதிலிருந்தே ஏனைய பிரச்சனைகளில் கூட்டணிக்கு ஜே.ஆர். அரசோடு உடன்பாடு ஏற்பட்டுவிட்டது என்பது தெரிகிறதல்லவா?

தமிழீழ மக்களையும், தமிழீழ போராளிகளையும் அமிர்தலிங்கம் கூட்டணியினர் ஏமாற்றுவதை உணரமுடியாத அறிவிலிகளா நாங்கள்?"

இவ்வாறு கூட்டணியையும், ஜே.ஆரின் மாகாணசபைத் திட்டத்தையும் கடுமையாக சாடியிருந்தது 'வீரவேங்கை.'

## தாக்குதல்

19.9.86 திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ள தெகிவத்தை இராணுவமுகாமில் இருந்து ரோந்து அணியொன்று புறப்பட்டது.

முன்னால் கால் நடையாக 15 பேர் வந்தனர். அவர்களின் பின்னால் ஜீப் ஒன்றில் ஏனையோர் வந்தனர்.

3ம் யூனிட் என்ற இடத்துக்கு அந்த ரோந்து அணி வந்தபோது புலிகள் தாக்கினார்கள்.

திடீர் தாக்குதலை எதிர்பார்க்காத இராணுவத்தினர் பின்வாங்கினார்கள். ஒருவர் கொல்லப்பட்டார். அவரிடமிருந்த T.56 ரக துப்பாக்கி புலிகளால் கைப்பற்றப்பட்டது.

அதே தினம் யாழ் மாவட்டத்திலும் ஒரு தாக்குதல் நடந்தது.

தொண்டமானாறு பாலத்தில் காவல் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவவீரர்கள் புலிகளால் தாக்கப்பட்டனர். இராணுவத்தினர் திருப்பிச் சுட்டனர். மோதலின் முடிவில் இராணுவத்தரப்பில் ஒருவர் பலியானார். புலிகளது தரப்பில் சேதமில்லை.

21.9.86 அன்று பருத்தித்துறை இராணுவ முகாமில் இருந்து பலத்த ஷெல் அடிகள், மற்றும் துப்பாக்கி வேட்டுக்களை பொழிந்தபடி வெளியேறியது இராணுவம்.

புலிகளும், ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பினரும் இணைந்து இராணுவத்தினரின் முன்னேற்றத்தைத் தடுத்தனர்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். அடித்த மோட்டார் ஷெல்கள் விழுந்து வெடிக்க ஆரம்பித்ததும் இராணுவத்தினர் பின்வாங்கிச் சென்று விட்டனர்.

## 'ஷெல்'மாரி

யாழ்ப்பாணம் கோட்டை இராணுவ முகாமிலிருந்து தினமும் 'ஷெல்'மாரி பொழிவது வழக்கமாகிக் கொண்டிருந்தது.

கோட்டை முகாமை சுற்றியிருந்த ஆயிரம் மீட்டர் பகுதியை பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தியிருந்தனர்.

அப்பகுதிக்குள் யாரைக் கண்டாலும் இராணுவத்தினர் கண்ணை மூடிக்கொண்டு சுட்டுத் தள்ளிவிடுவர்.

கோட்டை முகாமிலிருந்து ஷெல் அடிப்பதைக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

'யாழ் மக்கள் ஒன்றியம்' என்ற பெயரில் நடைபெற்ற அந்த ஊர்வலத்தில் பெருந்தொகையான மக்கள் கலந்து கொண்டனர். 27.8.86 இல் அந்த ஊர்வலம் நடைபெற்றது.

**"கோட்டைக்குள்ளே வீரமா? வெளியே வந்தால் ஓட்டமா?"**

**"வடக்கில் வீடுகள் அழிப்பு. தெற்கில் வீடமைப்பு."**

**"அழிக்காதே, அழிக்காதே, யாழ்நகரை அழிக்காதே!"**

**"எங்கள் பிள்ளைகளை அழிக்காதே, பள்ளி மாணவர்களைக் கொல்லாதே"**

என்றெல்லாம் கோஷங்கள் எழுப்பியபடி, சுலோக அட்டைகளைத் தாங்கியபடி ஊர்வலம் நடந்து கொண்டிருந்தது.

அப்போது கோட்டைக்குள்ளிருந்த இராணுவத்தினர் என்ன செய்தார்கள் தெரியுமா?

வழமைபோல 'ஷெல்' மாரி பொழிந்தார்கள். யாழ்-பழைய சந்தை, கே.கே.எஸ் வீதி, யாழ்-மத்திய கல்லூரி, சத்திரத்துச் சந்தி ஆகிய இடங்களில் ஷெல்கள் வந்து விழுந்து கொண்டிருந்தன.

## களத்தில் பிரகடனம்

யாழ்ப்பாணத்திலிருந்து புலிகள் இயக்கத்தினரால் வெளியிடப்பட்ட பத்திரிகையின் பெயர் 'களத்தில்'.

புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளராக இருந்த திலீபன்தான் 'களத்தில்' பத்திரிகையின் ஆசிரியராகவும் இருந்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி ஜே.ஆர். அரசுடன் நடத்தும் பேச்சுவார்த்தைகள், மாகாண சபைத் திட்டங்கள் என்பவற்றையெல்லாம் கேட்டு மக்கள் ஊசலாடிவிடக் கூடாதல்லவா.

அதனால் 'களத்தில்' பத்திரிகையில் ஆசிரியர் கலையங்கத்தில் எழுதப்பட்டது இப்படி;

"தமிழீழ விடுதலைப் போராட்டம் இன்று முக்கியமான காலகட்டத்தில் நகர்ந்து கொண்டிருக்கிறது.

இரத்த ஆற்றிலும், சாம்பல் மேட்டிலும் தியாக வேள்வியால் கட்டி வளர்க்கப்பட்ட எம் சந்ததிக்கான மக்கள் விடுதலைப் போராட்டம் இன்றைய நேரத்தில் நாம் எடுத்துவைக்கும் மிகச் சரியான அடிவைப்பிலேயே தங்கியுள்ளது.

தீரம்-தியாகம்.
வெற்றிகள்-தோல்விகள்.
சாதனைகள்-வேதனைகள்
தடங்கல்கள்-முன்னேற்றங்கள்
இறுதியாக தெளிந்த இலட்சியப் பாதை.

இத்தனையுடும் வளர்ந்த போராட்டம் இன்று ஓர் முக்கிய காலகட்டத்தில் இருக்கிறது.

இறுதியிலும், இறுதியான, உறுதியிலும் உறுதியான எமது ஒரே பிரகடனமாக:

**"சுதந்திர தமிழீழம் தவிர்ந்த வேறெந்த தீர்வும் இனிவரும் எமது அரசியல் அகராதியில் கிடையாது."**

இவ்வாறு 'களத்தில்' பத்திரிகையில் எழுதியிருந்தார் திலீபன்.

## அன்னையர் முன்னணி

அன்னையர் முன்னணி என்னும் அமைப்பும் குறிப்பிடத்தக்க பங்கை ஆற்றி வந்தது.

யாழ் மாவட்ட அன்னையர் முன்னணித் தலைவிகளில் ஒருவர் திருமதி ரி.குணநாயகம்.

"சிறைகளில் உள்ள எமது பிள்ளைகளை விடுதலை செய்யுங்கள்." என்பதுதான் அன்னையர் முன்னணியின் பிரதான கோஷம்.

யு.என்.ஐ. செய்தி நிறுவன நிருபருக்கு அளித்த பேட்டியில் திருமதி ரி. குணநாயகம் சொன்னது இது:

"அண்மைக் காலமாக சிறீலங்கா படைகள் மேற்கொண்ட வன்முறைகள் காரணமாக 2 ஆயிரம் பேர்வரை இளம் பெண்கள் - பெரும்பாலும் கரையோரக் கிராமங்களில் விதவைகளாக்கப்பட்டுள்ளனர்.

யாழ்-குடாநாட்டில் வாழும் பெரும்பாலான பெற்றோர்களுக்கு அவர்கள் இறந்தால் கூட இறுதிக்கிரியை செய்ய பிள்ளைகள் கிடையாது.

அவர்கள் கொல்லப்பட்டிருப்பார்கள். அல்லது வெளிநாடுகளுக்கு தப்பியோடி இருப்பார்கள். அதுவும் இல்லாவிட்டால் ஏதாவது ஒரு தீவிரவாத இயக்கத்தில் பணியாற்றுவார்கள்.

எமது பிள்ளைகளை சிறீலங்கா அரசு கைதுசெய்து சித்திரவதை செய்தமை காரணமாகவே அவர்கள் ஆயுதமேந்திப் போராட ஆரம்பித்தனர். இதற்கான முழுப் பொறுப்பையும் சிறீலங்கா அரசாங்கமே ஏற்க வேண்டும்."

## ஈழவர் முன்னணி

ஈரோஸ் இயக்கத்தினரால் ஈழவர் முன்னணி என்னும் அமைப்பு உருவாக்கப்பட்டது.

இதற்காக முன்னின்று செயற்பட்டவர்களில் ஒருவர் பரராஜசிங்கம்.

மக்களைத் திரட்டி வெகுஜனப் போராட்டங்களை நடத்தினார்கள்.

ரெலோ இயக்கம் புலிகளால் தடை செய்யப்பட்ட போதும் யாழ்ப்பாணத்தில் ஏனைய நான்கு இயக்கப் பிரதிநிதிகளும் சந்தித்து பேசிக்கொண்டிருந்தனர்.

ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எஃப்., புளொட், புலிகள் ஆகிய நான்கு இயக்கங்களும் வாரத்தில் ஒரு தடவை சந்தித்து பிரச்சனைகள் குறித்து கலந்து பேசிக்கொண்டன.

## ஏழ நாள் போர்

யாழ்ப்பாணத்தை தமது கட்டுப்பாட்டில் கொண்டுவர 1986 மே மாதத்தில் முப்படைகளும் பாரிய நடவடிக்கையில் இறங்கினார்கள்.

மே 17 முதல் மே 24 வரை யாழ்ப்பாணத்திற்குள் முன்னேறும் முயற்சியில் ஈடுபட்ட இராணுவத்தினருக்கும் இயக்கங்களுக்கும் இடையே கடும் மோதல் ஏற்பட்டது.

விமானக் குண்டுவீச்சுக்கள் மத்தியில் பலத்த மோதல் தொடர்ந்தது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். மோட்டார் தாக்குதலில் ஈடுபட்டது.

கோட்டை இராணுவ முகாமுக்கருகே இருந்து ஈ.பி.ஆர்.எல்.எஃப். மோட்டாரிலிருந்து ஷெல்கள் சீறிக் கிளம்பிக் கொண்டிருந்தன.

திடீரென்று ஒரு ஷெல் மோட்டாருக்குள்ளேயே வெடித்தது. இரண்டு போராளிகளின் உயிரை எடுத்தது.

அதன் பின்னரும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். தொடர்ந்து மோட்டார் ஷெல் தாக்குதலில் ஈடுபட்டது.

ஏனெனில் மோட்டார் தாக்குதலை விட்டால், இராணுவத்தினரை அச்சுறுத்த வேறு மார்க்கம் இருக்கவில்லை.

யாழ்ப்பாணத்தில் ஏழு நாள் மோதலின் பின்னர் இராணுவத்தினர் தமது முயற்சியைக் கைவிட்டனர்.

ஏழுநாள் மோதல் முடிந்தவுடன் அதன் வெற்றியை புலிகள் அமைப்பின் தனித்த வெற்றியாக பிரசாரம் செய்யப்பட்டது.

உளி-மோகன் என்ற பெயரில் புலிகளின் பத்திரிகையில் ஒருவர் எழுதிய கவிதையில் ஒரு பகுதி இது:

**"ஈண்டு பகையழித்து ஈழத் திருநாட்டை**
**ஆண்டு வருவதெல்லாம் ஆகா! நம் புலிப்படையே!**
**மீண்டு(ம்) பகைவன் படை மீறி வந்தால் நம்**
—புலிகள்
**வேண்டும் வரை கொடுப்பர் வெல்லும் தமிழீழம்"**

ஏனைய இயக்கங்கள் மத்தியில் இதனால் கசப்புணர்வு ஏற்பட்டது.

(தொடர்ந்து வரும்)

# கூட்டணிமீது பாய்ந்த 'வீரவேங்கை'

# 69

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# கிழக்கில்-தரையில்-முதலாவது கரும்புலி

**5.12.95** அன்று மட்டக்களப்பு மாவட்டம் புதுக்குடியிருப்பில் விசேட அதிரடிப்படை முகாம்மீது கரும்புலித் தாக்குதல் நடத்தப்பட்டது.

அதுதான் கிழக்கு மாகாணத்தில் தரையில் நடத்தப்பட்ட முதலாவது கரும்புலித் தாக்குதலாகும்.

அத்தாக்குதலில் கரும்புலியாக பங்கு கொண்டவர் மேஜர் ரங்கன் என்றழைக்கப்படும் தினேஷ்குமார். கரும்புலி ரங்கன் உட்பட 24 புலிகள் அத்தாக்குதலில் பலியானார்கள்.

கரும்புலி ரங்கனின் நினைவாக 5.01.96 அன்று மட்டக்களப்பு மியாங்குளம் சந்தியில் இராணுவத்தினர் மீது புலிகள் தாக்குதல் தொடுத்தனர். ரோந்து சென்ற படையினர் மீது புலிகள் நடத்திய தாக்குதல் அது.

ஒரு அதிகாரி உட்பட எட்டு இராணுவத்தினர் பலியானதாகவும், தமது தரப்பில் மூன்று பேர் பலியானதாகவும் புலிகள் அறிவித்தனர். பலியான புலிகளில் இருவர் பெண்கள்.



மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட விசேட தளபதி கருணாவுடன் கரும்புலி ரங்கன் கடைசியாக எடுத்துக்கொண்ட படம்.



படிப்பகம்

www.padippakam.com

அலசுவது – இராஜதந்திரி



# நிராகரிக்கப்படும் தாயகக் கோட்பாடு

# ஒரே குரலில் பேசவேண்டிய தமிழ் கட்சிகள்

அரசாங்கத்தின் தீர்வுத்திட்ட யோசனைகள் பாராளுமன்றத் தெரிவுக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளதையடுத்து தமிழ் அரசியல் கட்சிகள் ஆளுங்கட்சியினருடனும், எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியுடனும் பேச்சுக்களை நடத்திவருகின்றன.

தமிழ் மக்களின் பிரச்னைகள் தோற்றம்பெற்ற காலத்தில் தமிழரசுக்கட்சி, தமிழ் காங்கிரஸ், சுயாட்சிக்கழகம் என்று ஒருசில தமிழ் கட்சிகளே தமிழர்களது பிரச்னைகளுக்குக் குரல் கொடுத்துவந்தன.

அப்போது முற்றுமுழுதாக அரசியல் சார்ந்ததாக பாராளுமன்றத்தை மையமாக வைத்தே தமிழர் பிரச்னை கையாளப்பட்டது.

ஆனால் இன்று ஓரிரு தமிழ் அரசியல் கட்சிகள் மட்டுமல்ல, சுமார் பத்து தமிழ் அரசியல் கட்சிகள்வரை காணப்படுகின்றன.

இருந்தபோதிலும் தமிழர்களது பிரச்னைக்கான தீர்வு அணுகுமுறைகளை உரிய உத்வேகத்துடன் எடுக்கும் உறுதியற்றவையாகவே தமிழ் அரசியல் கட்சிகள் விளங்குகின்றன.

புளொட், ஈபி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எஃப், டெலோ, ஈரோஸ் ஆகிய ஐந்து தமிழ் அரசியல் கட்சிகளும் ஒன்று சேர்ந்துள்ளன.

தமிழர் விடுதலைக்கூட்டணி தனக்கென தனிப்பாணியை வகுத்து, தனியாகவே இயங்கிவருகின்றது.

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் நிலைப்பாடு என்னவென்று எதுவுமே புரியாதுள்ளது.

இன்று அதிகளவில் தமிழ் அரசியல் கட்சிகள் காணப்படுகின்றபோதிலும், இக்கட்சிகள் தகுந்தவாறு தம்மை ஒருங்கிணைத்து தமிழ் மக்களின் கோரிக்கைகளுக்காக ஓரணியில் ஒன்று திரளாத தன்மையே ஆளுங்கட்சிக்கும், எதிர்க்கட்சிக்கும், தமிழர் பிரச்னையை ஆட்டிப்படைப்பதில் நல்ல சந்தர்ப்பங்களை வழங்கியுள்ளன.

இன்று நேற்று மட்டுமல்ல, தமிழர் பிரச்னை என்று இந்த நாட்டில் தோற்றம் பெற்றதோ அன்றிலிருந்து தமிழ் அரசியல் கட்சிகளிடையேயும், தமிழ் அரசியல்வாதிகளிடையேயும் பிரச்னைகள் நிலவிவந்துள்ளன.

தமிழ் மக்களின் பிரச்னையை வைத்து பேரினவாத அரசியல் கட்சிகள் மட்டும் அரசியல் லாபம் தேடவில்லை; தமிழ் கட்சிகள்கூட அவ்வப்போது சுய நலத்துடன், அரசியல் லாபங்களைக் கொண்டிருந்தன.

எனவே இன்று தமிழ் மக்களின் பிரச்னை இழுத்தடிக்கப்படுவதற்கும், கூடவே மிக மோசமான கட்டத்தை எட்டியிருப்பதற்கும் பேரினவாத அரசியல் கட்சிகள் மட்டும் பொறுப்பாளிகளல்ல.

தமிழ் அரசியல் கட்சிகளும், தமிழ் அரசியல்வாதிகளும்கூட தமிழர் பிரச்னை விகாரமடைவதற்கான சூழ்நிலைகளைத் தோற்றுவித்தவர்களாகவே இருக்கின்றனர்.

1983ம் ஆண்டுக்குப்பின்னர் இலங்கையின் வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் மக்களது அரசியல் பிரச்னை தீவிரவாதமாக மாற்றம் பெற்றது.

பல்வேறு அரசியல் கண்ணோட்டங்களையும் கொண்ட இளந்தலைவர்கள் தமது சுற்றம், சுகம், கல்வி, தொழில் ஆகிய அனைத்தையும் தியாகஞ்செய்து தீவிரவாத நடவடிக்கைகளில் குதித்தனர்.

இந்த இளந்தலைவர்கள் பல்வேறு தீவிரவாத அமைப்புக்களிலும் இடம் பெற்றிருந்த போதிலும் அவர்கள் அனைவருமே ஏதோ ஒரு விதத்தில் தமிழர் பிரச்னை, அதற்குரிய பரிகாரம், தமது செயற்பாடுகள், என்பன குறித்து தெளிவான கண்ணோட்டங்களைக் கொண்டிருந்தார்கள்.

தீவிரவாத இயக்கங்கள் தோற்றம் பெற்ற காலங்களில் ஒவ்வொரு இயக்கத்திலும் பல துடிப்புமிக்க – அதேவேளை கொள்கைப்பிடிப்புமிக்க இளைஞர்கள் பலர் இருந்தனர்.

கூடவே அவர்கள் தத்தமது இயக்கங்களை வளர்த்தெடுப்பதில் வெளிப்படுத்திய தியாகங்களும் மிக உயர்வானவையாகவே இருந்தன.

இருந்தபோதிலும், காலப்போக்கில் இத்தீவிரவாத தமிழ் அமைப்புகளிடையேயும், பிளவு, குத்துவெட்டு என்பன வலுவடையத்தொடங்கின.

ஒவ்வொரு அமைப்பும் ஆட்பலம், ஆயுதபலம், அரசியல்பலம் என்பவற்றைத் தத்தமது நிலைப்பாடுகளுக்கேற்ற விதத்தில் கொண்டிருந்தன.

ஆயினும் தமிழ் மக்களின் வடக்கு-கிழக்குப் பிரச்னை தொடர்பாக தம்மிடமிருந்த அனைத்து வளங்களையும் ஒன்றிணைத்து ஒரே இலக்கை அடையும் வகையில் தம்மை ஒருங்கிணைப்பதில் இந்த இயக்கங்கள் பெரிதும் தவறியிருந்தன.

இந்த இயக்கங்கள் தம்மிடையேயான கசப்புணர்வுகள், வேற்றுமைகள் என்பவற்றைத் தீர்க்க தம்மிடமிருந்த ஆட்பலம், ஆயுதபலம் என்பவற்றை நன்கு பிரயோகித்தன.

இந்நிலையில் தீவிரவாத அமைப்புக்களிடையேயும் பகைமை பூதாகாரமாக உருவெடுத்தது. இதனால் அந்த அமைப்புக்களின் போக்கும் நாளடைவில் திசைமாற ஆரம்பித்தது.

ஒரு பொது எதிரியை எதிர் கொள்வதைவிடுத்து, தம்மவர்களையே எதிரிகளாகக்கருதும் நிலைக்கு தமிழ் தீவிரவாத இயக்கங்கள் மாறியிருந்தன.

எனவே தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் பலவீனமடையவும், அதில் ஏனையவர்கள் குளிர்காயவும், இயக்க மோதல்கள் மற்றும் அரசியல் சிந்தனைகளில் தோன்றிய குளறுபடிகளே முக்கிய காரணங்களாக விளங்கின.

பல்வேறு தமிழ் தீவிரவாத இயக்கங்களும் வடக்கு-கிழக்கில் இயங்கிவந்த காலத்தில் அன்றைய ஐக்கிய தேசியக் கட்சி அரசு பலத்த தலையிடியை எதிர்நோக்கி இருந்தது.

ஆனால் இந்த இயக்கங்களிடையே பிளவு ஏற்பட்டு, அவை நலிவடைய ஆரம்பித்ததும் இலங்கை ஆயுதப்படையினரும் உஷாரடைய ஆரம்பித்தனர்.

அன்றைய தேசிய பந்தோபஸ்த்து அமைச்சரான லலித் அத்துலத் முதலிகூட பல்வேறு தமிழ் தீவிரவாத அமைப்புக்கள் குறித்து கலக்கமடைந்திருந்தார்.

அவர் ஒருதடவை, "அனைத்து இயக்கங்களுமே ஒன்று சேர்ந்து போரிட்டிருந்தால் அவர்கள் கோரிய தமிழ் ஈழத்தை இலகுவாகவே வென்றிருப்பார்கள்," என்று தெரிவித்திருந்தார்.

எனவே தமிழ்மக்களின் போராட்டங்கள் அரசியல் சார்ந்ததாக இருந்தாலென்ன, ஆயுதப்போராட்டமாக இருந்தாலென்ன, குறுகிய கண்ணோட்டங்களும், சுயநலத்தன்மைகளும் அவற்றில் ஊடுருவியதே சாபக்கேடாக விளங்கியிருந்தது.

எஸ்.ஜே.வி. செல்வநாயகம், ஜி.ஜி.பொன்னம்பலம் போன்றோர் அரசியல் நடத்திய காலத்தில் சமஷ்டி, 50க்கு 50 என்றெல்லாம் கூப்பாடுகள் போடப்பட்டன. ஆனால் இவை தொடர்பிலும் உறுதியான போராட்டம் நடத்தப்படவில்லை.

பாராளுமன்றத்தில் தமிழ் அரசியல்வாதிகள் அன்று பேரினவாத அரசியலாளர்களுக்கெதிராக காத்திரமான விவாதங்களை நடத்தியதும், சுடச்சுட பதிலிறுத்ததும் ஏதோ உண்மைதான்.

ஆனால் அப்போது ஆளுங்கட்சிக்காரர்கள் யாழ்ப்பாணம் விஜயம் செய்தபோது, பலாலி விமானநிலையத்தில் ஆளுயர மாலைகளுடன் நீயா, நானா? என்று தமிழ் அரசியல்வாதிகள் மாலைபோட்டு வரவேற்பதற்கும் போட்டியிட்டார்கள்.

கூடவே பலாலியிலிருந்து மோட்டார்கள் பவனியாக – தென்னிலங்கையிலிருந்து வந்தவர்களுடன் கூட அமர்ந்து செல்வதற்கும் போட்டியிட்டு, வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டும் இருந்தனர்.

இதன் காரணமாகவே, நாய்க்கு எலும்புத்துண்டுகளைப் போடுவதுபோல ஆளுங்கட்சிக்காரர்களும் 'தமிழ்த்தலைவர்கள்' என்று இருந்தவர்களை சிறு சிறு சலுகைகளைக் கொடுத்துச் சமாளித்தும் வந்திருந்தனர்.

ஆனால் இன்று நிலைமை வேறாக இருக்கின்றது. தமிழர்களது பிரச்னை என்பது இரத்தப் பிரவாகமாகவே மாறியிருக்கின்றது.

இந்நிலையில் ஒரு காத்திரமான தீர்வுத்திட்டம் தமிழர்களின் அரசியல், கலாசார, பாரம்பரியபிரதேச விழுமியங்களை பாதுகாக்கும் வகையில் அமைந்திருக்க வேண்டியது இன்றியமையாததாகின்றது.

இலங்கையில் வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் மக்கள் தமது தாயகக் கோட்பாட்டை வலியுறுத்தியுள்ள அதேசமயம், உலகில் பல்வேறு நாடுகளிலும் இலங்கைத் தமிழரது பிரச்னையை ஒத்த பிரச்னைகள் நிலவி வருவதையும், அவற்றைத் தீர்ப்பதற்காகக் கையாளப்படும் அணுகுமுறைகளையும் இலங்கையின் ஆட்சியாளர்களும், மறுபுறத்தே தமிழ் அரசியலாளர்களும் அவதானிக்க வேண்டியதாகின்றது.

ஏனெனில் இலங்கைத் தமிழர் பிரச்னை என்பது தற்போது ஒரு சர்வதேசக் கவனத்தை ஈர்த்த பிரச்னையாகவே இருக்கின்றது.

இந்நிலையில் இலங்கைத் தமிழர் பிரச்னையை நோக்குகின்ற சர்வதேச சமூகமும், வடக்கு-கிழக்கு வாழ் தமிழர்கள் தமது தாயகக் கோட்பாட்டை வலியுறுத்தி தமது தனித்துவங்களைப் பேணவே ஒரு போராட்டத்தை நடத்தி வருகின்றனர் என்பதையே அறிந்து வைத்துள்ளது.

இந்நிலையில், வடக்கு-கிழக்குத் தமிழரது தாயகக்கோட்பாட்டை ஏற்கமுடியாது என்று ஆட்சியாளர்களும், எதிர்க்கட்சியும் கூறியிருப்பது 'வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதாகவே' இருக்கின்றது.

தமிழர்களது அடிப்படைப்பிரச்னை-தாயகக் கோட்பாட்டை வலியுறுத்தி அதனடிப்படையிலேயே ஒரு தீர்வைக் காண்பதாக இருக்கின்றபோது, ஆட்சியாளர்களும், அவர்களோடு இணைந்த பேரினவாதிகளும், அதிகாரப்பரவலாக்கம் என்ற கோஷத்துடன், வடக்கு-கிழக்குத் தமிழர்களது அடிப்படைக் கோரிக்கைகளைத் தட்டிக் கழிப்பவர்களாகவே இருக்கின்றனர்.

அதிகாரப்பரவலாக்கம் என்றாலென்ன, அதிகாரப்பகிர்வு என்றாலென்ன, தமிழர்களது வடக்கு-கிழக்கு ஒன்றிணைந்த தாயகக் கோட்பாடு தகுந்த வகையில் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதே இன்று இன்றியமையாததாகின்றது.

இந்நிலையில் இத்தாயகக் கோட்பாட்டின் அடிப்படையிலேயே தமிழர்கள் தமது உரிமைகள், மற்றும் அடிப்படைக்கோரிக்கைகளையும் பாதுகாக்க முடியும். கூடவே அதிகாரப் பகிர்வு கொண்டுவரக்கூடிய சாதகமான தன்மைகளையும் அனுபவிக்கமுடியும்.

இதைவிடுத்து, தாயகக்கோட்பாட்டை அங்கீகரிக்காத நிலையில் அதிகாரப்பகிர்வு என்பது வெறுமனே ஒரு கண்துடைப்பாகவே அமையும்.

எனவே ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்று ஜனாதிபதி சந்திரிகாவின் பொதுஜன ஐக்கிய முன்னணிக் கட்சியும், திரு.ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசியக்கட்சியும் வேறுபட்டிருக்கலாம்.

ஆனால் வடக்கு-கிழக்கு பிரச்னை தொடர்பில் அவை இரண்டுமே ஒரே கட்சியாக, ஒரே நிலைப்பாட்டுடன் இருக்கின்றன என்பதையே தமிழ் அரசியல் கட்சிகள் நன்குணரவேண்டும்.

இந்நிலையில் ஆளுங்கட்சியுடனும், எதிர்க்கட்சியுடனும் ஆயிரம் சுற்றுப்பேச்சுக்களை நடத்தலாம்.

ஆனால் தமிழர்களது தாயகக் கோட்பாட்டை மையமாகக் கொண்ட பேச்சுக்கள் இடம்பெறாதவகையில் எவ்வித பிரயோசனமும் கிட்டிவிடப்போவதில்லை.

தமிழ் அரசியல் கட்சிகள் தம்மிடையே குத்து வெட்டுக்கள், கருத்து மோதல்களைக் கொண்டிருக்கலாம், ஆனால் வடக்கு-கிழக்குப் பிரச்னை தொடர்பாக ஒரே குரலில், ஒரே அணியாக தெளிவான சிந்தனையைக் கொண்டிப்பதனூடாகவே ஒரு நேர்த்தியான தீர்வை நோக்கி நகரமுடியும்.

இதைவிடுத்து, பேரினவாதக் கட்சிகளையும், ஆட்சி, அதிகாரங்களில் உள்ளோரையும் "ஏமாற்றுகிறார்கள், தட்டிக்கழிக்கிறார்கள், தரமறுக்கிறார்கள்" என்று வெறுமனே கூச்சல் போடுவதில் எதுவித பயனுமே இல்லை.

ஏனெனில் எமது பலவீனங்கள், எமது சுயநலப்போக்குகள், எமது குறுகிய கண்ணோட்டங்கள், எமது துரோகத்தனங்கள் என்பவையே பேரினவாதிகள் எம்மீது சவாரி விடுவதற்கான முக்கியமான காரணங்களாக உள்ளன என்பதையே நம்மவர்கள் உணரவேண்டியது இன்றியமையாததாகின்றது.

## உள்நாட்டுப் போரா? விடுதலை யுத்தமா?

**கலிபோர்னிய நீதிமன்ற உறுப்பினர். சர்வதேச சட்டம், மனித உரிமைச் சட்டம் என்பவற்றில் தேர்ந்தவர். 1982 இல் அரச சார்பற்ற பிரதிநிதியாகத் தோன்றி ஐ.நா சபையின் மனித உரிமைக் குழு முன் சாட்சியம் அளித்தவர். அவர்தான் சட்டத்தரணி திருமதி கரன் பார்க்கர். இலங்கைப் பிரச்சனை தொடர்பாக சமீபத்தில் ஒரு நீண்ட கட்டுரை எழுதியுள்ளார். அதிலிருந்து சில முக்கிய பகுதிகள்.**

தமிழீழ விடுதலைப் புலிகள் பயங்கரவாத இயக்கமா? என்பது பற்றி எனது கருத்தை வெளியிடுமாறு கேட்கப்பட்டுள்ளேன்.

நான் உறுதியாகச் சொல்கிறேன்-தமிழீழ விடுதலைப் புலிகள் பயங்கரவாத இயக்கமல்ல. மாறாக சிறீலங்கா அரசுக்கு எதிராகப் போராடும் ஆயுதம் தாங்கிய அமைப்பாகும்.

தமிழீழ விடுதலைப்புலிகளை 'பயங்கரவாத' இயக்கம் என்று வர்ணிப்பது அரசியல் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டது. இதற்கு சட்டத்தின் அடிப்படையில் அல்லது உண்மையின் அடிப்படையில் ஆதாரம் இல்லை.

சிறீலங்காவில் போர் ஒன்று நடைபெறுகிறது. போர் என்று எதை நான் குறிப்பிடுகிறேன் என்றால், அங்கு இரண்டு தரப்புகளுக்கு இடையே நடைபெறும் ஆயுதப் போராட்டத்தை ஆகும்.

சிறீலங்காவில் நடைபெற்றுவரும் போரை ஒன்றில் உள்நாட்டுப் போர், அல்லது சுயநிர்ணய உரிமைக்கான போர் என்று வர்ணிக்கலாம்.

ஒரு நாட்டின் உள்ளே அரச படைக்கும் குறைந்தது இன்னொரு படைக்கும் இடையில் ஆயுத மோதல் இருந்தால், அங்கு உள்நாட்டு யுத்தம் இருப்பதாகக் கொள்ள வேண்டும்.

அந்த இன்னொரு படைக்கு ஒரு முகப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைகளை எடுப்பதற்கு வசதியாக நிலத்தின் மீது ஓரளவு ஆதிக்கம் இருக்க வேண்டும். அத்தோடு மனிதாபிமான சட்டங்களைக் கடைப்பிடிக்கும் நடைமுறை வல்லமையும் இருக்க வேண்டும். விடுதலைப் புலிகள் இந்த வரைமுறைகளை கடந்த 10 ஆண்டுகளாக மிகத் தெளிவாகப் பூர்த்தி செய்துவருகின்றனர்.

சுயநிர்ணய உரிமைக்கு உரித்தான மக்களது ஆயுதப்படைக்கும், அரசின் ஆயுதப் படைக்கும் இடையில் மோதல் இருக்குமாயின் அப்போது ஒரு தேசிய விடுதலைப்போரும் இருப்பதாகக் கொள்ள வேண்டும்.

எனது கருத்தின்படி சிறீலங்காவில் நடைபெறும் போர் ஒரு தேசிய விடுதலைப் போராகும். காரணம், தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள்.

பிரித்தானியரது காலனி ஆட்சிக்கு முன், இலங்கைத் தீவில் வடக்கு-கிழக்கின் ஆதிக்குடிகளான தமிழர்கள் தங்களுக்கு என்று முழுமையான, ஆனால் சிங்கள அரசுக்கு பிறிதான அரசு ஒன்றை சொந்தமாக வைத்திருந்தார்கள்.

வலுக்கட்டாயமான ஒற்றையாட்சி முறையால் காலனி ஆட்சிக்குப் பின்வந்த பெரும்பான்மை சிங்கள ஆட்சியினால் தமிழ் மக்கள் மேலும் மேலும் அச்சுறுத்தப்பட்டார்கள்.

முப்பது ஆண்டுகாலமாக சமாதான வழிகளில் வேறுபாடுகளைக் களைய எடுத்த முயற்சிகளின் பின், எழுபதுகளின் கடைசியில் தமிழர்கள் ஆயுதங்களைக் கையில் எடுத்தனர்.

சிறீலங்காவில் நடைபெறும் போர் உள்நாட்டுப் போர் என்றால் வெளிநாடுகள் அதில் நடுநிலைமை வகிக்க வேண்டும். காரணம், ஒரு உள்நாட்டுப் போர் என்பது அந்த நாட்டின் உள் விவகாரம் ஆகும்.

ஆனால், தேசிய விடுதலைப் போர் என்றால், வெளிநாடுகள் சுயநிர்ணய உரிமைக்குப் போராடும் பக்கத்திற்கு ஆதரவு நல்க வேண்டும்.

இப்படிச் சொல்வதால் இன்னொரு நாடு தமிழ் மக்களுக்கு அல்லது தமிழ் ஆயுதப் படைக்கு நேரடியாக உதவ வேண்டும் என்று அர்த்தமல்ல. ஆனால், ஏனைய நாடுகள் தமிழ் மக்கள் தங்கள் சுயநிர்ணய உரிமையைப் பெறுவதைக் கெடுக்கும் வகையில் சிறீலங்கா அரசுக்கு உதவக்கூடாது.



படிப்பகம்

www.padippakam.com



# விமானத்தில் கார்லோஸ்

'கார்லோஸ் கொலை!'

இலண்டன் பத்திரிகை ஒன்று தன் நெற்றியில் கொட்டை எழுத்தில் பொறித்திருந்தது.

ஒபேக் நாடுகளது பிரதிநிதிகள் பணயக் கைதிகளாக்கப்பட்டு விடுவிக்கப்பட்டபின்னர் கார்லோஸ் எங்கு போனான் என்று யாருக்கும் தெரியவில்லை.

தகவல் இல்லாதபோது ஊகங்களை வெளியிட்டன பத்திரிகைகள்.

நாலாய் மடித்து ரீப்போவில் பத்திரிகையை வீசினான் கார்லோஸ். வீசிய போது கார்லோஸ் இருந்தது அல்ஜீரியாவில்; தனியான சொகுசு பங்களாவில், அழகான பெண் துணையுடன்.

"பத்திரிகையில் என்ன கோபம்?" என்றாள்; என்றவள் மேல் சட்டையின் மேல் பட்டன்களை அலட்சியம் செய்திருந்தாள். மார்பின் பிரிவு கார்லோஸைச் சீண்டிக் கொண்டிருந்தது.

"அல்ஜீரியா பத்திரிகைகள்கூட கார்லோஸ் செத்துவிட்டதாக சத்தியம் பண்ணிக்கொண்டிருக்கின்றன" என்றான்.

"அதுதானே! நீ என்னையல்லவா தினமும் கொலை பண்ணிக்கொண்டிருக்கிறாய்" என்று கண்ணடித்தாள்.

"கொலையா?"

"யா! தினமும் குறைந்தது இரண்டு தடவை!"

"அப்படியா! இன்றைய முதலாவது கொலையை ஆரம்பிக்கலாமா?"

தொடையில் கிள்ளினான்.

"அங்கே கிள்ளாதே. அடிக்கடி கிள்ளி தொடர் வலியாகிவிட்டது." என்றவள் மெல்லச் சரிந்து கார்லோஸின் மடியில் கவிழ்ந்து கொண்டாள்.

கார்லோஸ் மறுத்தபோதும் அவனுக்காக தனியான பங்களா ஒன்று கொடுத்து, கவனிக்க ஒரு பெண்ணையும் கொடுத்திருந்தது அல்ஜீரியா அரசாங்கம்.

தனது குழுவினரை தளபதி வாடி ஹாட்டாட்டிடம் அனுப்பிவிட்டு, அல்ஜீரியா பங்களாவில் ஜாலியாகப் பொழுதை ஓட்டினான் கார்லோஸ்.

இரண்டு அமைச்சர்களையும் தப்பவிட்டதால் வாடி ஹாட்டாட் கடும் கோபத்தில் இருப்பார். கோபம் ஆறிய பின்னர் செல்லலாம் என்று அல்ஜீரியாவிலேயே தங்கிவிட்டான் கார்லோஸ்.

மடியில் கவிழ்ந்தவள் விஷமம் செய்தாள். விஷமம் செய்தவளின் தலைமுடிக்குள் கோதிக்கொண்டே, தளபதி வாடி ஹாட்டாட்டை எப்படி சமாளிப்பது என்று யோசித்தான் கார்லோஸ்.

→❤❤✕

'துரோகியாகிவிட்டானா?' என்று சீறினார் தளபதி வாடி ஹாட்டார்.

"அங்கேயே சுட்டுத் தள்ளியிருப்பேன். பொறுப்பாளரின் உத்தரவுக்கு கட்டுப்பட வேண்டும் என்று கண்டிப்பாக சொல்லியிருந்தீர்கள். அதனால் தப்பிவிட்டான்," என்றாள் குரோச்சியா.

தளபதி வாடி ஹாட்டாட் தனது மீசையை கட்டை விரலால் வருடிவிட்டுக் கொண்டார். இடைக்கிடையே வெள்ளி மயிர்கள் எட்டிப்பார்த்தன.

சதாம் உசேன் கோபப்பட்டு, கோபப்பட்டதால் ஒப்புக்கொண்ட பணத்தை அனுப்ப மறுத்ததும் வாடி ஹாட்டாடுக்கு கவலையாக இருந்தது.

'காரியத்தையே கெடுத்துவிட்டானே' என்று கார்லோஸ் மீது எரிச்சலாக இருந்தது.

☛ ➟ ✍

"அன்புக்கும் மதிப்புக்குமுரிய தளபதிக்கு.

வாழ்த்துக்கள்! கார்லோஸ் எழுதிக் கொள்வது,

என்னைப் பற்றிய தவறான, மற்றும் அப்பட்டமான கெட்டவார்த்தைகளை கேள்விப்பட்டிருப்பீர்கள். அதனால் கோபமாக இருப்பீர்கள்!

மறவுங்கள். என்னைப் பற்றிய சகல கெட்ட செய்திகளையும் மனதில் இருந்து உதறிப் போடுங்கள்.

சவுதி அரேபிய அமைச்சரையும், ஈரான் அமைச்சரையும் தீர்த்துக்கட்ட முடியாமைக்கு இந்த உலகிலேயே அதிகம் வருந்துபவன் நான்தான்.

ஆனால், தலைக்கு மேலே வெள்ளம். நாம் நினைத்ததை செய்து முடித்திருந்தால் நமது குழுவில் எவருமே தப்பியிருக்க முடியாது.

ஆகவேதான் அல்ஜீரியாவின் வலையில் விழுவதுபோல நடித்தேன்.

2 கோடி டொலர்கள் தரப்பட்டது உண்மை. அதொன்றும் எனக்காக மட்டும் பெறப்பட்ட தொகையல்ல. புரிந்து கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

நிற்க: என்னிடம் அருமையான திட்டம் ஒன்று இருக்கிறது. பொறுமையாக, அழகாக யோசித்து திட்டமிட்டிருக்கிறேன். நேரில் சந்தித்து விரிவாகப் பேசலாம்."

கார்லோஸின் கடிதத்தைப் படித்த வாடி ஹாட்டாட்டை, கார்லோஸ் இறுதியாக குறிப்பிட்டிருந்த இரண்டு விடயங்களும் கவர்ந்தன.

2 கோடி அமெரிக்க டொலர்கள் கிடைத்தால் பாலஸ்தீன போராட்டத்தில் பல சாதனைகளைப் படைத்துவிடலாம்.

'கார்லோஸை தண்டிப்பதைவிட அவனது திறமையைப் பயன்படுத்தலாம். உபயோகமாக இருக்கும்' என்று யோசிக்கத் தொடங்கினார் வாடி ஹாட்டாட்.

வியன்னாவில் ஒபெக் எண்ணெய் வளநாடுகளது அமைச்சர்களை பணயக்கைதிகளாக்கினான் கார்லோஸ். சவுதி அரேபிய எண்ணெய் வள அமைச்சரையும் ஈரான் எண்ணெய் வள அமைச்சரையும் தீர்த்துக் கட்டுவதே திட்டம். திட்டம் போட்டுக் கொடுத்தவர் ஈராக் உப அதிபர் சதாம் உசேன். (அன்று உப அதிபர்) பணய நாடகம் மத்தியில் பேரம் நடந்தது. கார்லோஸின் வங்கிக் கணக்கில் 2 கோடி டொலர்கள் பெறுவதாக அல்ஜீரியா வலை வீசியது. கார்லோஸ் உடன்பட்டான். அமைச்சர்கள் விடுபட்டனர். அத்தோடு தற்காலிகமாக கார்லோஸின் சாகசம் நிறுத்தப்பட்டிருந்தது. தொடருமாறு பல்லாயிரம் கடிதங்கள். முரசு வாசகர்களின் அபிமான ஹீரோ கார்லோஸ் மறுபடி வருகிறான்.

கார்லோஸுக்கு உடனே தகவல் பறந்தது. "அவசரம். புறப்பட்டுவா!"

★★★

"போகப்போகிறாயா?" என்றாள் குரலில் நூறு சத வீதப் போதையோடு.

பதில் சொல்லாமல் அவளை இறுக அணைத்துக்கொண்டு முத்தமிட்டான் கார்லோஸ். அவளுக்கு கார்லோஸை இழக்க மனம் இல்லை. அவனது மேல் உதட்டை தன் இதழ்களால் கௌவிக்கொண்டு, மூச்சு முட்டுவது போல இறுக்கிக் கொண்டாள்.

**மனித வெடிகுண்டு**



**தருவது— ரசிகன்**

"கொன்றுவிட்டுப் போ" என்றாள். கார்லோஸின் கண்களிலும் ஈரம்.

"என்னடா!" என்றாள். 'டா' போட்டது அன்புமிகுதியால்!

"வாடி" என்றான். ஒரு குழந்தை போல அவளைத் தூக்கியெடுத்து கட்டிலில் போட்டான். கைகளை அகலவிரித்து 'வாடா இனிய ராஸ்கல்" என்றாள். அழைப்பு ஏற்கப்பட்டது.

★★★

கார்லோஸ் தளபதி வாடி ஹாட்டாட்டை சந்தித்தபோது தயாராக வைத்திருந்த திட்டத்தை வெளியிட்டான்.

"ஐரோப்பிய நாடுகளது சிறைகளில் இருக்கும் பாலஸ்தீனப் போராளிகளை விடுதலை செய்யவேண்டும்."

"நல்லது. ஆனால், பெரிய விலை கொடுக்கவேண்டியிருக்கும்!"

கார்லோஸ் சிரித்தான்.

"விலை நாம் கொடுப்பானேன்? இஸ்ரேலிய நாய்கள் எதற்கு இருக்கிறார்கள்?"

"என்ன திட்டம்?"

"விமானக் கடத்தல்" என்றான் கார்லோஸ்; என்றதும் தளபதி வாடி ஹாட்டாட் யோசித்தார்.

இருவரும் நீண்ட நேரம் விவாதித்தார்கள். கார்லோஸ் மிகச் சுவையாக தன் திட்டத்தை விளக்க, விளக்க, தளபதி வாடி ஹாட்டாட் மயங்கினார்; உடன்பட்டார்.

"ஓ.கே. ஆனால் ஒரு சிக்கல்!"

"என்ன?"

"உன் நடவடிக்கைகள் தொடர்பாக நம் ஆட்களுக்குள் முணு முணுப்புக்கள் இருப்பது உனக்கே தெரியும்."

"ஆம்."

"ஆகவே, அதனால், இந்த நடவடிக்கைக்கு அன்ரன் பௌலியர் பொறுப்பாக இருக்கட்டும். அதனால் உனது முக்கியத்துவம் ஒன்றும் குறைந்துபோய்விடாது."

கார்லோஸ் தளபதி வாடி ஹாட்டாட்டை ஆழமான பார்வையால் தடவினான்.

"ஓ.கே. உங்கள் உத்தரவு. ஆனால் எக்கட்டத்திலும் என் தகுதிக்கு சேதம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளுங்கள். அன்ரன் பௌலியருக்கும் சொல்லி வையுங்கள்."

அநேகமாக சகல நாடுகளுமே விமான நிலையங்களை உஷாராக வைத்திருந்தன.

இஸ்ரேலிய விமானங்கள் பாதுகாப்பு விடயத்தில் உச்சபட்ச உஷாராக இருந்தன.

பாதுகாப்புக் குறைவான விமான நிலையங்கள் எவை, விமானங்கள் எவை? விபரங்கள் திரட்டப்பட்டன.

இறுதியாக எயார் ஃபிரான்ஸ் விமானம் தெரிவுசெய்யப்பட்டது.

இஸ்ரேல் தலை நகரான ரெல்-அவிவ் நகருக்குச் சென்று பயணிகளை ஏற்றிக் கொண்டு கிரேக்க நாட்டின் தலை நகரான ஏதன்ஸ் நகருக்கு விமானம் வந்து சேரும்.

விமானத்தில் இஸ்ரேலிய பயணிகளும் இருப்பார்கள். அவர்கள்தான் பலியாடுகள்.

ஏதன்ஸ் நகர் விமான நிலையத்தில் வைத்துத்தான் கார்லோஸ் குழுவினர் விமானத்தில் ஏறுவதாகத் திட்டம்.

சரியாக ஒருவாரம் விமானக் கடத்தலுக்கான பயிற்சி வழங்கப்பட்டது.

பயிற்சி முடிந்ததும் அதிரடிக் குழுவைச் சேர்ந்தவர்கள் தனித் தனியாக புறப்பட்டு ஏதன்ஸ் நகருக்குப் போய்ச் சேர்ந்தனர்.

ஏதன்ஸ் நகரில் இருந்த பாலஸ்தீன போராட்டத்திற்கு ஆதரவானவர்களது இல்லங்களில் சிலர் தங்கிக்கொண்டனர்.

கார்லோஸ் ஏதன்ஸ் நகரின் ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் தங்கிக் கொண்டான்.

ஜூன் 27ம் திகதிதான் விமானக் கடத்தலுக்கான நாள்.

கார்லோஸ் ஜூன் 20ம் திகதியே வந்து சேர்ந்துவிட்டான்.

வழக்கம்போல மது சுவைத்து, பெண்களை வரவழைத்து, அவர்களது எடையை அனுபவித்துக் கொண்டு, யாருக்கும் சந்தேகம் வராமல் கார்லோஸ் காத்திருந்தான்.

ஜூன் 27. ஏதன்ஸ் விமான நிலையத்தில் வந்து தரை தொட்டு முத்தமிட்டு, பயணிகளை வெளியேற்றி, உள்வாங்கி, மீண்டும் வானில் எழுந்து தவழ்ந்து கொண்டிருந்தது எயார் ஃபிரான்ஸ் விமானம். அதன் இலக்கம் 139.

இஸ்ரேலியர்கள், அரேபியர்கள், ஆங்கிலேயர்கள் உட்பட மொத்தம் 230 பேர் விமானத்தில் இருந்தனர்.

ஒரு சிலர் பத்திரிகைகளைப் புரட்டிக்கொண்டிருக்க, வேறு சிலர் ஜன்னலுக்கு வெளியே மேகங்களை விழிகளால் தொட்டு வருடித் தொடர,

பயணிகள் மத்தியில் இருந்து கார்லோஸ் எழுந்தான்.

வலது கரத்தில் பிஸ்டல் குந்தியிருந்தது.

பிஸ்டலைக் கண்ட பயணிகள், விபரீதம் ஆரம்பம் என்று மிக நிச்சயமாக நம்பத் தொடங்கியபோது:

"அனைவருக்கும் வாழ்த்துக்கள்! நான்தான் கார்லோஸ்!" என்றான்; என்றதும் பயணிகள் முகங்களில் அடர்த்தியாகத் திகில்.

இன்று காலையில்கூட கார்லோஸ் பற்றிய செய்தியை ஏதாவது ஒரு பத்திரிகையில் அநேகமாக அனைவருமே படித்திருந்தார்கள். ஆகவே பயந்தார்கள்.

"யாருமே பயப்படத் தேவையில்லை. நாங்கள் உங்கள் நண்பர்கள். எதிரிகள் வெளியே, தரையில் இருக்கிறார்கள். அவர்களோடு சில விஷயங்களைப் பேசி முடிக்க இந்த விமானமும், இதில் இருக்கும் நீங்களும் சிலதினங்களுக்குத் தேவை. அவ்வளவுதான். ஈ.ஸி...... ஈ.ஸி...... டேக் இட்ஈஸி."

கார்லோஸின் அதிரடிக் குழுவினர் அனைவரும் எழுந்து தயாராக நின்றனர்.

கார்லோஸ் நடந்து விமானிகளின் பகுதிக்குள் நுழைந்தான்.

"அன்புள்ள விமானிகளே! ஒருமுறை திரும்புங்கள். என் கரத்தில் என்ன இருக்கிறது என்று பாருங்கள்" என்றான்.

அதே நேரம் பயணிகள் மத்தியில் அந்த இளம்பெண் ஒரு முடிவோடு இருக்கைவிட்டு எழுந்து முன்னேறத் தொடங்கினாள்.

(பதட்டம் தொடரும்)

# தேவி தேவி பூலான் தேவி
## துணிச்சல்காரி சீமா பிஸ்வாஸ்

'பண்டிட் க்வின்' படத்தைப் பற்றித்தான் சொல்கிறோம்.

இந்தியாவின் சம்பல் பள்ளத்தாக்கு கொள்ளைக்காரி பூலான்தேவியின் கதையை சினிமாவுக்கு ஏற்ப ருசிகரமாக சொல்லும் படம் 'பண்டிட் க்வின்'.

நிர்வாணக் காட்சிகள் மீது தணிக்கைக் குழுவின் கத்தரி ஆவேசமாகப் பாய்ந்தது.

படத்தில் தனது வாழ்க்கையை சொன்ன முறை ஆபாசமாக இருக்கிறது என்று பூலான்தேவி போர்க்கொடி உயர்த்த, அதுவே பெரும் தடையாகியது.

எப்படியோ தடைகள் பலவற்றைக் கடந்து தற்போது திரைக்கு வந்துவிட்டது 'பண்டிட் க்வின்'.

பூலான்தேவியாக நடித்திருப்பவர் சீமா பிஸ்வால்.

பூலான் தேவியைவிட உண்மையில் துணிச்சல்காரி சீமா பிஸ்வால்தான்.

உடம்பில் பொட்டுத் துணிகூட இல்லாமல் பலநாட்கள் படப்பிடிப்பில் கலந்து கொண்டார்.

கிராமம் ஒன்றில், அந்த கிராம மக்கள் வாய்பிளந்து பார்த்துக்கொண்டிருக்க, உடம்பில் துணியில்லாமல் ஓடினார் சீமா பிஸ்வால்.

அது படப்பிடிப்பு என்று தெரியாத கிராம ஜனங்கள் அதிர்ச்சி ஒருபுறம், சீமாவின் உடல் வனப்பைக் கண்ட வியப்பு மறுபுறமுமாக திகைத்து நின்றார்களாம். அதனால் அக் காட்சி தத்ரூபமாக வந்துவிட்டது.

தனது காதலனுடன் பூலான்தேவி உறவு கொள்ளும் காட்சி ஒன்று பலத்த சர்ச்சையை கிளப்பியது. அக் காட்சியில் நடித்த போது தான் சீமா கொஞ்சம் தயங்கினாராம்.

அந்தக் காட்சி படத்தில் இடம்பெறுவதை கடுமையாக ஆட்சேபித்தார் பூலான் தேவி. "எனது காதலனுடன் நான் மேலே இருந்து உறவு கொண்டதுபோல சித்தரிப்பது அபாண்டம். அப்படி ஒருநாளும் நடக்கவில்லை" என்று சொன்னார் பூலான்தேவி. யாரும் அதை காதில் போட்டுக் கொள்ளவில்லை.

சில காட்சிகளில் மட்டும் சீமாவுக்குப் பதிலாக வேறு ஒரு நடிகையை 'டூப்பாக நடிக்க வைத்தார்கள். உண்மையாக சீமா நடித்த காட்சிகளையும் 'டூப்' நடிகைமீது போட்டுவிடலாம். சீமாவுக்கு சங்கடம் குறையும் என்று புத்திசாலித்தனமாக செய்த ஏற்பாடு அது.

படத்தில் இடம்பெறும் கற்பழிப்புக் காட்சி நேரடியாக படமாக்கப்பட்டது. சீமா தான் அதில் நடித்திருக்கிறார். அக் காட்சியில் நடித்துவிட்டு உடல் நோவில் பல நாட்கள் கிடந்தாராம் சீமா. காட்சி தத்ரூபமாக வருவதற்காக சீமாவை பிழிந்துவிட்டார்கள்.

இவையெல்லாம் போதாது என்று படத்தில் நிறைய கெட்ட வார்த்தைகள் வருகின்றன. பூலான்தேவி உருவான 'பந்தல் கண்டி' பகுதியில் பழக்கத்தில் உள்ள வார்த்தைகள் என்று வாதிட்டதால் தணிக்கைக்குழு வெட்டவில்லை.

இந்தப் படம் வெளியான பின்னர் இந்தியப் படத் தயாரிப்பாளர்கள் பலர் பூலான்தேவி போன்ற கதைகளைத் தேடி அலையத் தொடங்கி விட்டார்கள்.

ஆனாலும் படத்தின் இயக்குநர் சேகர் கபூருக்கு மட்டும் திருப்தியில்லை. "அருமையான காட்சிகள் பலவற்றை தணிக்கைக் குழுவில் சாப்பிட்டு விட்டார்கள்" என்று பொருமுகிறார். அந்த அருமையான காட்சிகளை காணமுடியாமல் போனதில் ரசிகர்களுக்கும் பேரிழப்புத்தான்.

சந்தேகமேயில்லை. துணிச்சலான முயற்சிதான். துணிந்தால் துக்கமில்லை. ரசிகர்கள் மாபெரும் ஆதரவு கொடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

# 80 வயது அப்பா

ஹொலிவூட் திரையுலகை ஒரு கலக்கு கலக்கியவர் அந்தனி குயின். அந்தனி குயின் நடித்த படங்களில் மாபெரும் புகழ் தேடிய படம் 'ஓமர் முக்தார்'

அந்தனி குயினுக்கு இப்போது 80 வயது. ஆனாலும் படு இளமையாக இருக்கிறார். துள்ளியாடும் இளைஞராக இருக்கிறார். அதனை உறுதிப்படுத்துவது போல சமீபத்தில் ஒரு குழந்தைக்கு தந்தையாகியும் இருக்கிறார்.



அந்தனி குயினின் மனைவியின் பெயர் இலாண்டா. தனது 32வது வயதில் அந்தனி குயின்மீது மையல் கொண்டார் இலாண்டா. இருவரும் மணம் செய்து கொண்டார்கள்.

அந்தனி குயினிடம் உற்சாகம் இருந்தது. அந்த உற்சாகத்தை பயன்படுத்தும் திறமை இலாண்டாவிடம் இருந்தது. விளைவு 80 வயதில் அந்தனி குயினின் கையில் குழந்தை சிரிக்கிறது.

"எல்லாம் என் இளம் மனைவி கொடுத்த அசாத்தியமான உந்துதல்தான் காரணம்" என்று அந்தனி குயின் கூறுவது உண்மையிலும் உண்மை. திறமையாகத்தான் ஊக்குவித்திருக்கிறார்.

**2/3/96** இல் இந்திய - இலங்கை கிரிக்கெட் போட்டியில் டெண்டுல்கரின் மட்டை வித்தை காட்டியது. மொத்தம் 5 சிக்ஸர்கள். வான வேடிக்கை! ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளில் ரசிக, ரசிகையர் எதிர்பார்க்கும் இன்ப அதிர்ச்சி அதுதான்.

டெண்டுல்கரை நம்பித்தான், இந்திய அணி உலகக் கோப்பையை இம்முறை வெல்லும் என்று பல்லாயிரம் பேர் பந்தயம் கட்டியிருக்கிறார்கள்.

பம்பாய் ஸ்போர்ட்ஸ் சஞ்சிகை ஒன்றுக்கு டெண்டுல்கர் அளித்த பேட்டியில் இருந்து ஒரு பகுதி.

**டெண்:-** அஸார், வினோத் காம்ளி, சஞ்சய் மஞ்ரேக்கர், சித்து என்று அடித்தாடக்கூடிய துடுப்பாட்டக்காரர்கள் எம்மிடம் இருக்கிறார்கள்.

**"இம்முறை உங்கள் ஆட்டத்தின் மூலம் அதிசயங்கள் நிகழ்த்துவீர்களா?"**

**டெண்:-** என்னைவிட சிறந்த வீரர்கள் பலர் களம்புகும் போட்டி இது. என்னால் முடிந்தளவு சரியாகச் செய்வேன். முன்னர் விட்ட தவறுகளை திருத்திக் கொண்டிருக்கிறேன்.

**"தவறுகளை எப்படி கண்டு பிடிக்கிறீர்கள்?"**



டெண்டுல்கர் துணைவியுடன்

# "என்னை மட்டும் நம்பவேண்டாம்"

**"இந்தியாவின் முழு நம்பிக்கையும் உங்கள் மீதுதானே இருக்கிறது. அதனை நீங்கள் பூர்த்தி செய்வீர்களா?"**

**டெண்:-** என்மீது மட்டும் நம்பிக்கை வைப்பதில் எனக்குள்ள பொறுப்பை அதிகமாக்கிவிடுகிறீர்கள். அதனால் என் கைகளை கட்டிப்போட்டுவிடுகிறீர்கள். அடித்தாட முடியாமல் பொறுமையாக ஒவ்வொரு பந்தையும் சந்திக்க வேண்டி இருக்கிறது. என் போக்கில் சுதந்திரமாக ஆடவே நான் விரும்புகிறேன். என்மீது நம்பிக்கை இருப்பது உற்சாகமான விஷயம்தான். ஆனால் என்மீது மட்டும் நம்பிக்கை வைத்திருப்பது சரியாக இருக்காது."

**"உங்களைவிட்டால் இந்திய அணியில் வேறுயார் ஓட்டங்களை குவிக்க முடியும்?"**

**டெண்:-** நான் விளையாடிய காட்சிகளை வீடியோவில் போட்டுப் பார்த்து, கூர்ந்து கவனிக்கிறேன். எனது சகோதரர் அஜித் கிரிக்கெட்பற்றி நன்கு தெரிந்து வைத்திருக்கிறார். இருவரும் சேர்ந்து நிறைய விவாதிப்போம். தவறுகளைத் திருத்திக்கொள்வேன்.

**"உலகக் கோப்பை யாருக்கு கிடைக்கும் என்று சொல்ல முடியுமா?"**

**டெண்:-** இந்த தடவை போட்டி கடுமையாக இருக்கும். இலங்கை அணி, பாகிஸ்தான், அவுஸ்ரேலியா, தென்னாபிரிக்கா, இந்தியா ஆகிய அணிகளுக்குள்தான் பலப்பரீட்சை. நம்மால் சாதிக்க முடியும் என்று நூற்றுக்கு நூற்றியொரு வீதம் நம்புகிறோம்.




படிப்பகம்

www.padippakam.com



## உருவத்தால் பெறும் புகழ்

'நுதலும் தன் வாயால் கெடும்' என்பார்கள். நுதலும் தன் உருவால் புகழ் பெறும் என்று யாராவது சொன்னார்களோ? சொல்லாவிட்டால் இனிமேல் சொல்லியாக வேண்டும். படத்தில் சிறுவனது தலையில் இருப்பதுதான் உலகில் மிகப் பெரிய நுதல், அதாவது தவளை. இதன் எடை; 8 இறாத்தல் 1 அவுன்ஸ். நீளம்; 21 அங்குலம். சுவீடன் நாட்டில் கால்ஸ்ராட் என்னுமிடத்தில் உள்ள பண்ணையொன்றில் இருக்கிறது. ஹாக்கல் ஃபோர்ஸ்பேர்க் என்பவர் இதனை வளர்த்து வருகிறார். அவர்தான் பண்ணையின் உரிமையாளர். அவரது மகனின் தலையில்தான் தவளையார் குந்திமிருக்கிறார். தவளையோடு சிறுவன் தோன்றும் இப் புகைப்படத்திற்கு என்ன தலைப்பிட்டு வெளியிட்டிருக்கிறார்கள் தெரியுமா?" அசிங்கமான இளவரசர்."



## பண விளைச்சல்

↓ பாடுபட்டு, வியர்வை சிந்தி உழைப்பது எதற்காக பணத்துக்காகத்தானே. அந்த பணத்தையே உற்பத்தி செய்துவிட்டால் என்ன? அப்படி குறுக்கு வழியில் சிந்தித்து கட்டுக்கட்டாக அமெரிக்க டொலர்களை அச்சடித்தது ஒரு கும்பல். எப்படியோ தகவல் கிடைத்து கனடிய பொலிசார் மடக்கிப்பிடித்தார்கள். பயங்கர அதிர்ச்சி. மொத்தமாக 12 கோடி ரூபாய் பெறுமதியான போலி அமெரிக்க டொலர்கள் கச்சிதமாக அச்சடிக்கப்பட்டு கட்டுக்கட்டாக வைக்கப்பட்டிருந்தனவாம். இதுவரை மாட்டிய போலி நோட்டுக்களில் மிகப் பெரிய தொகை இதுதான். மாட்டியிருக்காவிட்டால் கனடாவே கலங்கியிருக்கும்.

## குறும்பென்றால் குறும்பு

சிறுவயது என்றாலே குறும்புக்கு பஞ்சமில்லைத்தானே. அதிலும் சில குழந்தைகளது புத்திசாலித்தனமான குறும்பை வெகுவாக ரசிக்கலாம்.

படத்தில் பாருங்கள், சிறுவன் இருப்பது சின்ன வண்டி போல தெரிகிறதா? தப்பு! துணிபோட்டு வைக்கும் கூடையைத் தூக்கி, ஸ்கேட்டிங் சறுக்கல் விளையாட்டு பலகைமீது வைத்து, கூடையில் இருந்து ஜாலியான சவாரி. மைந்தனின் குறும்பைப் பார்த்துவிட்டு தந்தையார் கிளிக் செய்த படம்.

## ஷாஜகானின் பரிசு

ஷாஜகான் என்றதும் நினைவுக்கு வருவது தாஜ் மகால். ஷாஜகான் ஒரு வித்தியாசமான சக்கரவர்த்தி. காதலிக்காக காலத்தின் கரம் தீண்ட முடியாத தாஜ் மகாலை கட்டுவித்தான். ராஜபரம்பரையை சேர்ந்தவர்கள் மற்றும் முக்கியமான விருந்தாளிகளுக்கு விசேஷமான நாணயத்தை பரிசாக வழங்குவாராம் ஷாஜகான். அந்த நாணயங்களில் ஒன்று சமீபத்தில் கண்காட்சியொன்றில் வைக்கப்பட்டது. இந்தியாவில் கேரள மாநிலத்தில் நடந்த கண்காட்சியில்தான் அந்த நாணயம் காணப்பட்டது. இதிலுள்ள விசேஷம் யாதெனில் உலகிலேயே மிகப் பெரிய நாணயம் இதுதான். இதன் எடை மட்டும் இரண்டரைக் கிலோ இருக்கிறது. ஷாஜகான் மெகர் என்பது இதன் பெயர். ஷாஜகான் சரித்திர நாயகன்தானப்பா!



## செய்வதிலும் புதுமை செய்

செய்வதைத் திருந்தச் செய்வதும் முக்கியம். செய்வதை புதுமையாக விரும்பிச் செய்வதும் முக்கியம். அப்படியானால்தான் சலிப்பு வராது. அருகே படத்தில் இருப்பது என்னவென்று தெரிகிறதா? இங்கிலாந்தில் ஒரு வீட்டில் உள்ள பூங்காதான் இது. மார்ஷல் என்பவர் பாடுபட்டு கலாரசனையோடு அமைத்துள்ள வீட்டுப் பூங்கா. இதனைப் பார்வையிடவே தினமும் பல நூறுபேர் வருகிறார்களாம். பூங்கா வளர்த்தவர் பூரித்துப் போயிருக்கிறார். புதுமைக்கு மதிப்புண்டு.





# தகவல் பெட்டி

## வானத்தில் மன்னன்

இந்தியா தனது முஷ்டியை பலப்படுத்தி வருகிறது. ஏற்கெனவே தரைப்போரில் ஈடுபடும் அர்ஜின் டாங்கியை இந்தியா சொந்தமாக தயாரித்தது. அதனை நினைத்து இந்தியாவின் எதிரிநாடுகள் சற்றுக் கலக்கமடைந்துள்ளன. இப்போது மற்றொரு அதிர்ச்சியைக் கொடுத்திருக்கிறது இந்தியா. 21ம் நூற்றாண்டிற்கு ஏற்ற தொழில் நுட்ப வசதியோடு சண்டை விமானம் ஒன்றை உருவாக்கியிருக்கிறது.

இந்திய விமானப்படையில் தற்போது பாவிக்கப்படும் போர் விமானம் மிக் 21. அதனையெல்லாம் ஓரம் கட்டுமளவில் தயாராகியிருக்கிறது புதிய போர் விமானம்.

உலகிலேயே மிகவும் எடை குறைந்த விமானம் இதுதான். ஆக எட்டாயிரத்து ஐநூறு கிலோ. நீளம் 13.2 மீட்டர். இறக்கைகள் உட்பட இதன் அகலம் 8.2 மீட்டர். ஒரு விமானி மட்டும் அமர்ந்து செலுத்த இடமுண்டு. எதிரி விமானத்தை ஒரு கை பார்க்கும் ஏவுகணைகள், வானிலிருந்து தரை இலக்கைத் தாக்கும் ஏவுகணைகள், கப்பல்களை தொலைத்துக் கட்டும் றொக்கட்டுக்கள், ஏவுகணைகள் போன்ற சமாச்சாரங்கள் எல்லாம் இதற்குள் இருக்கும். 4000 எடை வரையான பாரத்தை சுமந்து செல்லும்.

ஐ.சி.ஏ (ICA) என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. சமீபத்தில் இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் இந்த விமானத்தின் வெள்ளோட்டத்தை ஆரம்பித்து வைத்திருக்கிறார்.

2020ம் ஆண்டுவரை உருவாகப் போகும் புதிய தொழில் நுட்ப முன்னேற்றங்களை கவனத்தில் கொண்டு இதனைத் தயாரித்துள்ளார்கள்.

**எடை குறைவு, ஆனால் ஏற்படுத்தும் தாக்கம் அதிகமாக இருக்கும். போர்க் களத்தில் புகுந்து விளையாடும்.**





படிப்பகம்

www.padippakam.com

# மகாபிரபு-பார்க்கலாம்

## சினிமா விமர்சனம்

நாட்டாமைக்குப் பின்னர் வந்த சரத்குமார் படங்கள் எதுவும் பெரிய வெற்றியைப் பெறவில்லை. அந்தக் குறையைத் தீர்க்க வந்துள்ள படம் மகாபிரபு.

25 நாட்களைத் தாண்டி தமிழ்நாட்டில் நல்ல வசூல் பார்த்துக்கொண்டிருக்கிறது 'மகாபிரபு!

காதல், வீரம், சோகம் மூன்றிலும் சரத்குமார் அமோக வாக்குகளை அள்ளும் வகையில் நடித்திருக்கிறார். அவரோடு கவுண்டமணியும் ஒட்டிக்கொண்டு கல கலக்கவும் வைக்கிறார்கள்.

சுகன்யாவும் கொடுத்த பாத்திரத்தை குறைவைக்காமல் செய்திருக்கிறார். பாடல் காட்சிகளில் அளவுக்கதிகமாகவே இமையை நெளித்திருக்கிறார்.

வினிதாவை உபயோகப்படுத்துவது எப்படியென்று தெரியாமல் விரயம் செய்துவிட்டார்கள் என்றாலும் செந்திலிடம் வினிதாவை உடற்பயிற்றி பெறவைத்து ரசிகர்களை திருப்தி செய்திருப்பது புத்திசாலித்தனம்.

வில்லனாக வரும் ராஜன் பி தேவ் அசத்துகிறார்.

மனோரமாவை அம்மாவாக நடிக்க வைத்துள்ள பட்டியல் நீண்டுகொண்டே போகிறது. வெகுசுலபமாக நடித்து, வில்லன் ஆட்களால் உயிர் பறிக்கப்பட்டு அனுதாப வாக்குகளை அள்ளிச் செல்கிறார். சுகன்யாவும் தீயில் கஸ்ந்து போவது மற்றொரு சோகம்.

இறுதியில் பழிக்குப் பழி. சென்சாரின் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு வன்முறைக் காட்சிகளை பயங்கரமாக படமாக்கியிருக்கிறார்கள்.

சரத்குமார் ரசிகர்களுக்கு இனிய விருந்து. பொழுது போக்கு, விறுவிறுப்பு இரண்டையும் விரும்புகிறவர்கள் பார்க்கலாம். ஏமாற்றாது. நம்மூரில் வீடியோ கொப்பிகள் வந்து விட்டன.

## சுமிதாவுக்கு தொல்லை

சில்க் சுமிதா கேரளாவில் ஒரு பங்களா வாங்கி குடியேறினார். இப்போது அங்கு குடியிருக்க முடியவில்லை. மலையாள அரசியல் பிரமுகர்களது தொல்லைகளைத் தாங்க முடியவில்லையாம்.

ரசிகர்களை படாதபாடு படுத்திய சில்க் சுமிதா இப்போது அரசியல் புள்ளிகளால் படாத பாடு படுகிறார்.

## ஓடுமா?

'முஸ்தபா' படத்தின் வசூல் நிலவரத்தை தினமும் கேட்டறிகிறார் நெப்போலியன். தற்போதைக்கு பரவாயில்லை நிலையில் படம் ஓடிக் கொண்டிருக்கிறது. நன்றாக ஓடினால் நெப்போலியன் மார்க்கெட் சூடாகி விடும்.

## காதோடு சொல்லுகி[...]

பழைய சம்பவங்களை அடிக்கடி மறந்து போய்விடுகிறேன் என்கிறார் 'வி' நடி[...] மனதில் வைத்துக் கொள்பவரல்ல என்பதால் அவரை நட்பாக வைத்திரு[...] ஹீரோக்கள். 'வி'நடிகை இளைய திலகத்தையும் கைக்குள் போடும் முயற்சியில்[...] பலிக்கவில்லையாம். 'வி' என்ற எழுத்தில் ஆரம்பித்து 'தா'என்ற எழுத்தோடு பெயர் [...] பிடித்துவிட்டீர்களா?

இந்தியில் சமீபத்தில் பிரபலமாகி தமிழிலும் ஒரு படத்தில் நடித்துக் கொண்டி[...] நடிகை. 'ஊர்'என்று பெயர் ஆரம்பிக்கும். மீசைக்கார இயக்குநர் நடிகைக்கு தூதுவிட்[...] சொல்லிவிட்டாராம் நடிகை. விஷயம் மூன்றெழுத்து 'க' நடிகருக்கும் தெரியவந்ததா[...] நடிக்கிறாய் அல்லவா, பயப்படாதே" என்று நடிகைக்கு ஆறுதல் சொன்னாராம் [...]

மறைந்த முதல்வரும், நடிகருமான 'ராவ்'வாயால் பாராட்டப்பட்டவள் என் மக[...] ஓயாமல் சொல்லிக் கொண்டிருக்கிறார். 'கனக'நடிகையின் தாய்க்குலம். அ[...] இருந்தபோது மட்டும் தாய்க்குலம் ஏன் இதனைச் சொல்லவில்லை? என்று கேட்கிறார்க[...] விஷயம் தெரிந்தவர்கள்.

மலையாளத்தில் இருந்து தமிழுக்கு வந்த 'ஜெ'யமான நடிகர் பல நடிகைகளோ[...] கிசு கிசுக்கப்பட்டவர். அவர் விரும்பும் நடிகையின் பெயர் 'ஷோ' என்று ஆரம்பித்[...] 'னா'என்று முடிகிறது. இடையில் உள்ளது ஒரே ஒரு எழுத்து மட்டும். கண்டுபிடியுங்கள்[...] இருவரும் நடித்த மலையாளப் படங்கள் சூப்பர் வெற்றியாம். அதுதான் நடிகருக்கு அவரில் மயக்கமாம். என்ன கண்டுபிடித்து விட்டீர்களா?

நீலக்கண் நடிகை என்று பெயரெடுத்தவர் தற்போது ஒரேயொரு தமிழ் படத்தில் மட்டும் நடிக்கிறார். தெலுங்கில் பெயரை மாற்றிக் கொண்டு வலம் வருகிறார். ரஞ்சனி என்று பெயர் முடிகிறது. அவருக்கும் தெலுங்கு நடிகர் ஒருவருக்கும் எக்கச்சக்கமான காதல். விரைவில் மேளச்சத்தம் கேட்கலாம்.



ஜெயராம்-சுகன்யா படம்: பரிவட்டம்



நெப்போலியன்-ரஞ்சிதா படம்: முஸ்தபா

## விசித்ரா விரும்பும் விஷயங்கள்

விசித்ராவைக் கவரும் ஆண்கள் எப்படியிருக்க வேண்டும்? அதனை விசித்ராவே பட்டியலிடுகிறார்.

1. பொறாமைப்படக் கூடாது.
2. சமமாக பெண்களை நினைக்கணும்.
3. ஜொள்ளுவிடாத ஆண்களே கிடையாது. எனவே ஜொள்ளுவிடலாம். புத்திசாலித்தனமான ஜொள்ளர்களாக இருக்க வேண்டும்.
4. பெண்டாட்டிமீது சந்தேகப்படக்கூடாது. கண்டிஷன்கள் போடக்கூடாது.
5. [...] என்று [...]
6. [...] களுக்கு [...] இருக்கா[...]
7. [...]
8. [...] இருந்து[...]
9. உ[...] கணும்.

என்[...] விசித்ரா[...]

## தபுவின் காதலர்

தபு இந்தியில் பிஸியான நடிகை. காதல் தேசம் படத்திலும் நடித்துக் கொண்டிருக்கிறார். அதன்பின்னர் தமிழிலும் பிரபலமாகி விடுவார்.

தபு முன்னர் சஞ்சய் கபூரை காதலித்தார். கனிந்து இனித்த காதல் பின்னர் கசக்கத் தொடங்கியது. இருவரும் பிரிந்துவிட்டனர்.

"அப்போது எனக்கு சிறுவயது. அதனால் என் காதலரைச் சரியாக புரிந்துகொள்ள முடியவில்லை. இருவருடைய கருத்துக்களும் வேறு பட்டவை என்பதை மெல்ல மெல்ல புரிந்து கொண்டோம்." என்கிறார் தபு.

"நீங்கள் எந்த மாதிரியான காதலரைத் தேடுகிறீர்கள்?" என்ற கேள்விக்கு தபு சொல்லியுள்ள பதில்:

"அவர் சினிமா உலகைச் சேர்ந்தவராகத்தான் இருக்க வேண்டும் என்பதில்லை. ரெயில்வே நிலையத்திலோ, தெருவிலோ கூட எனக்குப் பிடித்த மனிதரை நான் சந்திக்கக்கூடும்." என்கிறார் தபு. யார் அந்த அதிஷ்டசாலி?

✻

## கோவிந்தா—கோவிந்தா

இந்திப் படவுலகில் ஜாலியான நடிகர்களில் ஒருவர் கோவிந்தா. கவிதை எழுதவும் தெரியும். அவரது கூலி நம்பர் 1 படத்தில் பிரபலமான பாடல் ஒன்றின் வரிகளை செப்பனிட்டுக் கொடுத்தவர் கோவிந்தாதானாம்.

கஜோல், சோனாலி போன்ற நடிகைகளோடு அவர் கிசு கிசுக்கப்பட்டாலும், கோவிந்தாவுக்கு பிடித்த நடிகை மாதுரி டிக்ஷித்தான்.

கோவிந்தாவை ஆஹா ஓஹோ என்ற புகழும் நடிகைகள் இருவர். ஒருவர் நீலம். இன்னொருவர் பூஜா பத்ரா. கோவிந்தாவுடன் ஒரு முறை பழகினால் போதும் எந்தப் பெண்ணுக்குமே அவரைப் பிடித்துவிடும் என்கிறார் பூஜா பத்ரா.

## 7 கோடி வசூல்

ஜேம்ஸ் பொண்ட் படமான 'கோல்டன் ஐ' இந்தியாவில் மட்டும் முதல் ஒரு மாத வசூல் 7 கோடி. (இந்திய பணமதிப்புப்படி). 'கோல்டன் ஐ' திரையிடப்பட்டதால் பல இந்திப் படங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

ஜேம்ஸ் பொண்ட் படங்களில் 18வது படமாக வந்துள்ளது 'கோல்டன் ஐ'. உலகெங்கும் வசூலில் தூள் கிளப்பிவருகிறது. மீண்டும் ஜேம்ஸ் பொண்ட் அலை!

## அர்ஜுனுடன்

சுபாஷ் இயக்கத்தில் அர்ஜுன் நடிக்கும் படமொன்றில் நடிக்கப் போகிறார் அஜித்குமார், மணிரத்னம் வசனம் எழுதலாம் என்று தகவல்.



தபு படம்: காதல் தேசம்



அரவிந்தசாமி-ஸ்ரீதேவி படம்: தேவராகம்

## விழுங்கும் நடிகை

நடிகை ரம்யா கிருஷ்ணன் பற்றி தெலுங்குப் படவுலகில் தினம் ஒரு கிசு கிசு. இந்திப் பட தயாரிப்பாளர்கள் பக்கம் பார்வையைத் திருப்பியிருக்கிறார் ரம்யா கிருஷ்ணன். ரம்யாவின் உடலுக்காக பட வாய்ப்புக்கள் குவிகின்றன. என்பதுதான் லேட்டஸ்ட் கிசு கிசு.

அந்தக் கிசு, கிசு ரம்யாவின் காதிலும் விழுந்திருக்கிறது. "நான் தயாரிப்பாளர்களை விழுங்கும் நடிகையல்ல, எல்லோராலும் விரும்பப்படும் நடிகை" என்று சூடாகச் சொல்லியிருக்கிறார் ரம்யா கிருஷ்ணன்.

## மாண்புமிகு மாணவனின் காதலி

விஜய் நடிக்க அவரது அப்பா எஸ்.ஏ.சந்திரசேகரன் இயக்கிவரும் படம் 'மாண்புமிகு மாணவன்'. மகனுக்காக இந்தி நடிகை சப்னாபேடியை இறக்குமதி செய்துள்ளார் சந்திரசேகரன். இந்தியில் ஜாக்கி ஷெரப்புடன் 'பார்டர்' என்னும் படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார் சப்னா பேடி.

நக்மாபோல சிவந்த மேனி, கல்லூரி மாணவிபோல தோற்றம், கவர்ச்சியான கண்கள், கச்சிதமான உடல், பிடித்துவிட்டது சந்திரசேகரனுக்கு. சப்னா பேடியும் ஏமாற்றவில்லை. விஜய் கூட கூச்சப்படுமளவுக்கு நெருங்கி நடித்து சந்திரசேகரனின் எதிர்பார்ப்புக்களையும் பூர்த்திசெய்து வருகிறாராம். வித்தியாசமான காதலை படம்பிடித்து காட்டப் போகிறார் சந்திரசேகரன்.

சப்னா பேடி விஜய்யை காதலிப்பார். ஆனால் நேரில் சொல்லமாட்டார். விஜய்யை புகைப்படம் எடுத்துவைத்து, படத்தோடு காதல் மொழி பேசுவார். கட்டி முத்தம் கொடுப்பார். வீடியோ எடுத்து வைத்து விஜய்யை ரசித்து மயங்கி கனவில் மிதப்பார். அப்படிப் போகிறது கதை.

சப்னா பேடி பற்றி மற்றொரு தகவல். உயர் கல்வியை இலங்கையில்தான் படித்தாராம். இவருடைய குடும்பம் ரொம்பப் பெரிசு. கூடப்பிறந்தவர்கள் பன்னிரண்டு பேராம்.

## சிரஞ்சீவியோடு நக்மா

சிரஞ்சீவி இரட்டை வேடத்தில் நடிக்க அவருக்கு ஜோடியாக நக்மாவும், சவுந்தர்யாவும் நடிக்கும்படம் 'வீரபத்ரன்.' தெலுங்கில் 'ரிக்ஷாவாடு' என்ற பெயரில் வெளியான படத்தை தமிழில் மொழிமாற்றுகிறார்கள்.

ரிக்ஷாக்காரனாகவும், ஜமீன்தாரராகவும் இரட்டை வேடம் ஏற்றிருக்கிறார் சிரஞ்சீவி.

சிரஞ்சீவியின் படம் என்றாலே சண்டைக் காட்சிகளுக்கும், சரச காட்சிகளுக்கும் பஞ்சமிருக்காது. நக்மாவும், சவுந்தர்யாவும் போட்டி போட்டு சிரஞ்சீவியை புரட்டி எடுத்திருக்கிறார்களாம்.

அதுதவிர, ஒரு சண்டைக்காட்சிக்காக மட்டும் 500 பஸ்களை வைத்து படமாக்கினார்களாம். பஸ்கள்மீது தாவித் தாவி சண்டை போடுகிறார் சிரஞ்சீவி. மனோரமா, ஜெயசுதா ஆகியோரும் நடித்துள்ளனர்.

## ♣♠ ஊர்மிளாவால் தகராறு

நடிகை ஊர்மிளா ரங்கீலா படத்தோடு மளமளவென்று வளர்ந்துவிட்டார். அவர் வளர்ந்தது இருக்கட்டும், பல குடும்பங்களை பிளந்தும் விட்டார் என்பதுதான் வம்பான செய்தி.

இந்திப் பட தயாரிப்பாளர்கள் இருவரது குடும்பங்கள் ஊர்மிளாவால் பிரச்சனையில் சிக்கியிருக்கின்றன.

அந்த இரண்டு தயாரிப்பாளர்களுமே ஊர்மிளாவுக்கு நெருக்கமானவர்கள். நெருக்கம் நட்சத்திர விடுதியில் தனியறை போடுமளவுக்கு சென்ற சமாச்சாரம் அவர்களது இல்லத்தரசிகளுக்கு எட்டிவிட்டது. எள்ளும் கொள்ளும் வெடித்தது.

ஊர்மிளாவோடு கதை டிஷ்கஷன் என்று சொன்னால் நம்புவதற்கு தயாரிப்பாளர்களது மனைவிகள் ஒன்றும் குழந்தைகள் அல்லவே என்கிறார் பம்பாய் குறும்பர் ஒருவர்.

## இடைய[...]

மனிஷா கொ[...] உடம்பு விஷயத்தி[...] தாலும், கும்மாள[...] கட்டுக்குள் வைத்[...] தனம் உள்ளவ[...] டெல்லாம் இப்[...] காரணம், மனிஷா[...] விட்டதாம்.

மனிஷாவும் [...] கொள்கிறார். [...] தெல்லாம் என் [...] கிறது போல் [...] அதிகமாகிவிட்ட[...] பயிற்சி செய்ய[...] கிறார்.

## முகப்பில்

பார்த்திபன்
படம்:—அரவிந்தன்

சங்கீதா
படம்:—அம்மன்கோயில் வாசலிலே

சினி[...]



படிப்பகம்

www.padippakam.com

ராம்

...தையுமே ...ர்களாம் ...ங்கினார். ...ம். கண்டு

...பர் அந்த ...ம். 'நோ' ...ன்னோடு

...று வாய் ...டயிரோடு

## சங்கவிக்கு ஆண்களிடம் பிடித்தவை

சங்கவியை கவரக்கூடிய ஆண் எப்படியிருக்க வேண்டும்?

1. வெளிப்படையாகப் பேசுவது.
2. வசதியிருந்தாலும், உயர்ந்த அந்தஸ்து இருந்தாலும் தலைக்கனம் இல்லாமல் இருப்பது.
3. காதலித்த பெண்ணை கைவிடாமல் இருப்பது.
4. பெண்களை சமமாக நடத்துவது.
5. சகல துறைகளிலும் ஆர்வம் காட்டுவது.
6. வேகமாகக் கார் ஓட்டுவது.
7. ஸ்டைலாக சிகரெட் பிடிப்பது.

இத்தனையும் சங்கவி சொன்ன விஷயங்கள்தான் தகுதி இருப்போர் விண்ணப்பிக்கலாம்.




## மலையாளத்தில் தேவா



தமிழ்த் திரை இசையின் சிகரத்தை எட்டிப் பிடித்துக் கொண்டிருப்பவர் தேவா. இப்போது மலையாளப் படங்களுக்கும் இசையமைக்க ஆரம்பித்து விட்டார். எட்டு மலையாளப் படங்கள் கைவசம் வைத்திருக்கிறார்.

## மினி சினி

* 'பசும் பொன்' பட கதை, வசனகர்த்தாவான சீமான் முதன் முறையாக இயக்கி வரும் 'பாஞ்சாலங்குறிச்சி' படத்தில் பிரபுவுக்கு தங்கையாக நடித்து வருகிறார் 'கருத்தம்மா' மகேஸ்வரி.

* நாகிரெட்டியார் தயாரிப்பில், விக இயக்கிய 'மீண்டும் சாவித்திரி' தெலுங்கிலும் தயாரிக்கப்பட்டது. 'மீண்டும் சாவித்திரி'யின் தெலுங்குப் பெயர் என்ன தெரியுமா? 'நேட்டி சாவித்திரி.'

* 'கோழி கூவுது' படத்தில் அறிமுகமாகிய விஜிக்கு சரியான வாய்ப்புக்கள் இல்லை. 'சூரியன்' படத்திலும் 'வீட்ல விசேஷங்க' படத்திலும் கவர்ச்சி வேடத்தில் நடித்தார். தற்போது இவர் கே.டி.குஞ்சுமோன் தயாரிக்கும் 'சக்தி'யில் சிவகுமாருக்கு ஜோடியாக நடிக்கிறார்.

* தனது உதவியாளர்களில் ஒருவரான ஆர்.வி.விஸ்வம் இயக்கும் 'ஞானப்பழ'த்தில் நடித்து வரும் கே. பாக்யராஜ், அடுத்து தன்னிடம் உதவியாளராகப் பணிபுரிந்த வி.சேகர் அடுத்து இயக்கும் படமொன்றில் நடிக்கவுள்ளார்.

* 'அசுரன்' படத்தைத் தொடர்ந்து 'ராஜாளி' படத்தினை இயக்கி வருகிறார் வேலுபிரபாகரன். அடுத்து இவர் ஒரு இந்திப் படத்தை இயக்க ஒப்புக் கொண்டுள்ளார்.

*இந்தியில் புதிய படங்கள் கைவசம் இல்லையென்றாலும், இரண்டு தெலுங்குப் படங்களில் நடிக்கவுள்ளார் ஸ்ரீதேவி. இந்த இரண்டு தெலுங்குப் படங்களிலும் ஸ்ரீதேவிக்கு ஜோடியாக சிரஞ்சீவியும், நாகார்ஜுனும் நடிக் கிறார்கள்.

* விஜயகாந்த் நடிக்க கேயார் இயக்குவதாக இருந்த 'அலெக்ஸாண்டர் தி கிரேட்' படத்தின் பெயரையும், கதையையும் மாற்றியுள்ளனர்.

* சரத்குமார்-பார்த்திபன் இணைந்து நடிக்கும் 'அரவிந்தன்' படத்தில் பிரபல மலையாள நடிகர்களான திலகனும், நெடுமுடிவேணுவும் நடித்து வருகிறார்கள்.

* மலையாளத்தில் சுரேஷ்கோபி-விஜயசாந்தி நடிக்கும் 'யங் ட்ரக்' படத்தை இயக்குபவர் பத்ரன். இவர் மலையாளத்தில் பெருவெற்றி பெற்ற 'ஸ்படிகம்' (தமிழில் யுத்தம்) படத்தை இயக்கியவர்.

* இப்ராஹிம் ராவுத்தர் தயாரிக்கும் 'ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே' படத்தில் பாபி என்னும் புதிய வில்லனை அறிமுகப்படுத்துகிறார்கள்.

## பூஜாபட் கொடுத்த விருந்து

நடிகை பூஜாபட் பம்பாயில் ஒரு நட்சத்திர விடுதியில் பார்ட்டி நடத்தினார். தடபுடலான ஏற்பாடு. பெரிய புள்ளிகள் பலர் கலந்து கொண்டார்கள். இரவு தொடங்கிய விருந்துக் கேளிக்கைகள் விடிய விடிய நடந்தது.

பம்பாய் படவுலக நடிகைகள் பலரும் வந்திருந்தார்கள். பெரும் புள்ளிகளை ஒரே அமுக்காக அமுக்கிவிட்டார்கள்.


கூத்தும், கும்மாளமும் தாங்காமல் நட்சத்திர விடுதிக்காரர்கள் திண்டாடிப் போனார்களாம்.

## தயாராக உள்ள படங்கள்

சரத்குமார்-சுகன்யா நடித்த மகாபிரபு திரைக்கு வந்துவிட்டது.

சுகன்யா நடித்து அடுத்து திரைக்கு வரவுள்ள படங்களை அறிய விரும்பும் ரசிக, ரசிகைகளுக்கு இந்தத் தகவல்:

'ஞானப்பழம்', 'பரிவட்டம்', 'சேனாதிபதி', 'இந்தியன்' இதெல்லாம் சுகன்யா நடித்து விரைவில் திரைக்கு வரவுள்ள படங்கள். 96 இல் விட்டதை மீண்டும் பிடிப்பாரா சுகன்யா.




...கூடாது. தப்பு செய்தால் தப்பு ...படையாகச் சொல்ல வேண்டும்.
...ாக இருக்கணும். இப்போது பல ஆண் ...ம் காணாது. பயந்தாங்கொள்ளிகளா
...னவங்களா இருக்கணும்.
...வை உணர்வு சகல நேரங்களிலும் இருக்கணும்.
ரொம்ப கட்டுக்கோப்பாக வைத்திருக்
...டியலை நீட்டிக்கொண்டே போகிறார்

## திரையில் புதியவை

தமிழ்நாட்டில் புதிதாக திரைக்கு வந்துள்ள படங்கள்.

பூவே உனக்காக (விஜய்-சங்கீதா) முஸ்தபா (நெப்போலியன்-ரஞ்சிதா) அம்மன் கோவில் வாசலிலே (ராமராஜன்-சங்கீதா) கல்லூரி வாசல் (பிரசாந்த்-பூஜாபட்).

## உடையில் 24 வகை

'அரவிந்தன்' படப்பிடிப்பு மிக வேகமாக நடைபெற்று வருகிறது.

சரத்குமார்-நக்மா நடித்த ஒரு பாடல்காட்சி சமீபத்தில் பிரமாண்டமாக படமாக்கப்பட்டது.

"ஆல் த பெஸ்ட், ஆல் த பெஸ்ட் காதல், காதல்.." என்று தொடருகிறது அந்தப்பாடல். 24 விதமான உடைகளில் தோன்றி சரத்குமாரும், நக்மாவும் நடித்தனர்.

பார்த்திபன், திலகன், நெடுமுடி வேணு, ஆனந்தராஜ், பொன்னம்பலம், பிரகாஷ் ராஜ் என்று அசத்தலான நடிகர் பட்டாளமே படத்தில் உண்டு.

## நாசரின் கோபம்

நீங்கள் அரசியலுக்கு வருவீர்களா? என்று நாசரிடம் கேட்டுப் பாருங்கள், மனிதர் படபடவென்று வெடிப்பார்.

"ஏன் என்னிடம் கேட்கிறீர்கள். இதே கேள்வியை ஒரு டாக்டரிடம் கேளுங்கள். ஒரு என்ஜினியரிடம் கேளுங்கள். நான் நடிக்க வந்தவன். ...ார், பங்களா என்று சம்பாதிக்க வந்தவன்" என்று நெத்தியடியாய் பதில் வருகிறதாம். ...ல நிருபர்கள் சூடுபட்டு ...ிட்டார்கள்.

## ...எடை

...இருக்கிறாரே. ...வனம். குடித் ...லும் உடலை ...தில் கெட்டித் ...நப் பாராட் ...பொருந்தாது. ...டை பெரிதாகி

...ன ஒப்புக் ...சாப்பிடுவ ...கு போய்விடு ...து. எடையும் ...மேல் தேகப் ...றேன்" என்




விஜய்
படம்: மாண்புமிகு மாணவன்

## தழுவல் குழந்தை

வீட்டிலே வீடியோ இருப்பவர்கள் ஒரு தடவை எடுத்துப் பார்க்கக்கூடிய நல்ல படம் 'பேபீஸ் டே அவுட்'. சுட்டிப் பையனும், அவனை கடத்திச் செல்லும் மூன்று பேரும் அடிக்கும் கும்மாளத்தில் நேரம் போவதே தெரியாது. வசூலில் சக்கை போடு போட்ட படம்.

அந்தப்படத்தை கிட்டத்தட்ட தழுவி தெலுங்கில் உருவாகியுள்ள படம் சுட்டிக் குழந்தை. நாகார்ஜுன்-அமலா தம்பதியின் மோதக் குழந்தை அதில் நடித்துள்ள படம். தமிழில் சுட்டிக் குழந்தை என்ற பெயரில் திரைக்கு வரவிருக்கிறது. கதாநாயகனாக நாகார்ஜுன் நடிக்கிறார். பூஜாபட், தபு, ஆம்னி ஆகியோரும் நடிக்கின்றனர்.

## கலக்கவரும் கல்கத்தா அழகி

பம்பாயில் இருந்துதான் அழகிகளை இறக்குமதி செய்யவேண்டும் என்று சட்டமா என்ன? கல்கத்தாவில் இருந்து தமிழ் படவுலகை கலக்க வருகிறார் ஒரு அழகி. அவரது பெயர் ரஸ்னா. இதுவரை விளம்பரப் படங்களுக்கு போஸ் கொடுத்துக் கொண்டிருந்தவர். இப்போதுதான் சினிமா சான்ஸ் அடித்திருக்கிறது. அழகிப் போட்டியில் கலந்துகொண்டு இரண்டு தடவை மிஸ் கல்கத்தாவாக தெரிவு செய்யப்பட்டவர்.

இந்த அழகியோடு நடிக்கும் பாக்கியம் பெற்றிருப்பவர் கார்த்திக். பூவரசன் படத்தில் ஜோடி சேருகிறார்கள். படப்பிடிப்புக்கள் நடந்து வருகின்றன.

## வெற்றி நடை போடும் காதல் ஜோடி
## சங்கீதாவைத் துரத்தும் பார்த்திபன்

'சரிகமபதநி' படத்திலிருந்து ஆரம்பமானது பார்த்திபன்-சங்கீதா காதல்.

சரிகமபதநியில் சங்கீதாவுக்கு அமைதியான வேடம்தான். கமராவுக்கு பின்னால்தான் அமர்க்களமான விஷயங்கள் நடந்தன.

அமர்க்களத்தில் மூழ்கிப்போன பார்த்திபன் 'புள்ளகுட்டிக்காரன்' படத் தில் சங்கீதாவுக்கு நல்ல முக்கியத்துவம் கொடுத்தார்.

புள்ளகுட்டிக்காரன் படத்தோடு சேர்த்து இருவரது காதலும் வளர்ந்து, ஆல்போல் செழித்தது.

பார்த்திபனின் மனைவி சீதாவுக்கு விஷயம் கசிய, வீட்டில் பூகம்பம்.

'புதிய பாதை' படப்பிடிப்பில்தானே சீதா-பார்த்திபன் காதலும் மலர்ந்தது.

படப்பிடிப்பில் காதலிப்பது எப்படியென்பதில் கில்லாடியானவர் தனது கணவர் என்று சீதாவுக்கு தெரியும்தானே. அதுதான் பதறிப்போனார்.

சங்கீதாவை போனில் கூப்பிட்டு கிழி கிழியென்று கிழித்துவிட்டார் சீதா. இதெல்லாம் கடந்த ஆண்டில் நடந்த சங்கதிகள்.

பார்த்திபன், சங்கீதா காதல் இந்த ஆண்டும் வெற்றிகரமாகத் தொடர்கிறது.

உடலைக் காட்டி நடிக்காதே. என்று பார்த்திபன் கடுமையான அன்புக் கட்டளை போட்டிருக்கிறாராம் சங்கீதாவுக்கு.

பார்த்திபனின் அன்புக் கட்டளை காரணமாக தேடிவந்த வாய்ப்புக்கள் பலவற்றை இழந்துவிட்டார் சங்கீதா.

சங்கீதாவின் படப்பிடிப்பு வெளியூர்களில் நடந்துவிட்டால் போதும், நைசாக பின்தொடர்ந்து போய் படப்பிடிப்பு முடிந்ததும் சங்கீதாவை அழைத்துப் போய்விடுகிறார் பார்த்திபன்.

தற்போது இந்த விடயம் சீதாவுக்கு தெரிந்தாலும், முன்புபோல சத்தம் போடுவதில்லை. சத்தம் போட்டால் தன்னை கழற்றிவிட்டுப் போய்விடுவார் பார்த்திபன் என்று பயப்படுகிறார் சீதா.

ஆக, தடை பல தாண்டி வெற்றி நடைபோடுகிறது பார்த்திபன்-சங்கீதா காதல் ஜோடி.



படிப்பகம்

www.padippakam.com

# துணிகளை காப்பாற்றுங்கள்



● பட்டுச் சேலைகளைக் குறைந்தது 2 ஆண்டுகளுக்கொரு தடவையாவது தோய்த்து உலர்த்துங்கள். இல்லாவிட்டால் சேலைகள் வீணாகிவிடுகின்றன.

● சரிகைகள், பட்டு, ரேயான், எம்பராய்டரி துணிகளைப் பின்புறமாக இஸ்திரி செய்யுங்கள்.

● கஞ்சி போட்ட துணி இஸ்திரிப் பெட்டியோடு தூக்கிக் கொண்டு வந்தால் சூடு அதிகமாக்கப்படவேண்டும். அவ்வாறு வருவதைத் தவிர்க்கப் பழுப்புக் காகிதத்தில் (Brown Paper) கொஞ்சம் பாரபின் மெழுகு (Paraffin) போட்டு மடித்துத் துணியின்மேல் அதை வைத்துப் பெட்டியைத் தேய்க்கலாம்.

● பாவாடை மடிப்புக்களில் அடிப் பக்கம் சட்டைப்பின்களைச் சொருகி மேல் பக்கம் இஸ்திரி செய்தால் எளிதாக இருக்கும்.

● இஸ்திரிப் பெட்டியில் தேய்க்கும் பக்கம் பளபளப்பாக இல்லாவிட்டால் ஒரு பேப்பரில் சிறிது உப்புப் பொடியைத் தூவி அதன்மேல் பெட்டியைத் தேய்க்கவும். உடனே பளபளப்பாகி விடும்.

● கோப்பி, டீ, கோகோ, சொக்கலேட் போன்றவற்றின் கறைகள் நீங்க, அத்துணி களின்மேல் உயரத்திலிருந்து கொதிக்கும் நீரை விட்டுச் சோப்பு போட்டுக் கழுவுங்கள். அப்படியும் போகவில்லை என்றால் கொஞ்சம் ஹைட்ரஜன் பெராக்ஸைடு (Hydrogen Peroxide), சோடியம் பெர்பொரேட் (Sodium Perborate) (மருந்துக் கடைகளில் கிடைக்கும்) இவற்றைச் சிறிது கலந்து கறையின்மேல் போட்டுத் தேய்த்து ஊற வையுங்கள். பிறகு துவைத்துவிடுங்கள். கிளிசரினும் பயன்படுத்தலாம். சில கலர்த் துணிகளில் இவற்றைப் பயன்படுத்தினால் சாயம் போய்விடும். ஆகவே, சாயம் போகிறதா இல்லையா என்பதைப் பரிசோதித்துக் கொண்டு பிறகு பயன்படுத்துங்கள்.

● பழக்கறைகள், ஐஸ்கிரீம், இங்க் கறைகள் நீங்க எலுமிச்சம்பழச்சாறு சேர்த்துக் கசக்குங்கள்.

● கோதுமைப் பசைக் கறைகள் நீங்க இளம் வெந்நீரில் ஊறவைத்துத் துவையுங்கள்.

● எண்ணெய், கிரீஸ் கறைகள் மற்ற இடங்களில் பரவாதபடி கடலை மாவு போட்டு சோப்பில்லாத ஷாம்பூவினால் கழுவுங்கள். மண்ணெண்ணெயும் உபயோகிக்கலாம்.

● இரும்புத் துரு உள்ள துணிகளில், கறையின்மேல் உப்புப் பொடி தூவி, எலுமிச்சம்பழத்தின் சாற்றைத் தடவி, வெய்யிலில் காய வைக்கவேண்டும். திரும்பவும் ஒன்றிரண்டு தடவை அப்படியே செய்து அலசுங்கள்.

● தக்காளிச் சாறு, பூட் பாலிஷ் கறைகள் நீங்க, கறைபட்ட இடத்தில் கிளிஸரின் தடவி அரை மணி நேரத்திற்குப்பின் சோப்புப் போட்டுத் துவைக்கவும்.

● பெயிண்ட், வார்ணிஷ் இவை நீங்க ரேர்ப்பன்டைன் விட்டுச் சுத்தம் செய்து அலசி எடுங்கள்.

● இரத்தக்கறை நீங்க அத்துணியை முதலில் குளிர்ந்த தண்ணிரில் நனையுங்கள். பிறகு சோப்புக் கலந்த வெந்நீரில் துவையுங்கள். அப்படியும் போகவில்லை என்றால் வீட்டு அமோனியா இரண்டு ஸ்பூன் அல்லது கொஞ்சம் உப்பை நீரில் கலக்கி அதில் துணியை அலசுங்கள். கடைசியாக வெந்நீரில் போட்டு அலசுங்கள்.

● பொதுவாகத் துணிகளில் உள்ள எந்தவிதமான கறையையும் போக்கும் சக்தி எலுமிச்சம்பழத்திற்கு இருக்கிறது. ஆகவே, எப்பொழுதும் எலுமிச்சம்பழம் கைவசம் இருப்பது நல்லது.

● புத்தகங்களில் உள்ள இங்க் கறையை நீக்கச் சிறிது ஒக்ஸாலிக் அமிலத்தை (Oxalic Acid) தடவித் துடையுங்கள்.

● டெலிபோன் வைத்திருப்பவர்கள் அதைத் தினமும் ஒரு துணியில் சிறிது டெட்டால் ஊற்றித் துடைத்துவையுங்கள். கிருமிகள் பரவாமல் இருக்கும்.

# சிக்கனமான யோசனைகள்



★ பொதுவாகப் பணத்தை வீணடிக்காமல் நல்ல முறையில் செலவழித்து முடிந்த வரை சேமித்துவையுங்கள்.

★ நாளைய சமையல் திட்டத்தை இன்றே தீர்மானித்து விடுங்கள்.

★ ரவை நிறைய இருந்தால் அதை வெறும் வாணலியில் சிறிது சிவப்பாக வறுத்துப் போத்தலில் போட்டு வைத்தால் அதிக நாட்கள் புழு, பூச்சிகள் வராமல் இருக்கும்.

★ கருவேப்பிலை நிறைய கிடைக்கும் காலங்களில் வெயிலில் காயவைத்து ரஸப் பொடியோடு கலந்து வைத்தால் ரஸத்திற்குத் தனியாகக் கருவேப்பிலை போட வேண்டாம்.

★ சீனி டப்பாவைச் சுற்றி மஞ்சள் பொடியைத் தூவி வைத்தால் எறும்பு வராமல் இருக்கும்.

★ புளியை வாங்கும்போது வெயிலில் காயவைத்தவுடன் உடனுக்குடன் கொட்டை நீக்கி, சேமித்துவைக்கவும். கொட்டையுடன் வைத்தால் பூச்சி சேர்ந்துவிடும்.

★ தேங்காய் மூடியைத் தண்ணீரில் போட்டு வைத்தால் இரண்டு, மூன்று நாட்கள் கெடாமல் இருக்கும். தினமும் நீரை மாற்றவும். உபயோகிக்குமுன், நல்ல தண்ணீரில் கழுவவும்.

★ பச்சைக் காய்கறி கூடைமீது ஈரத்துணியால் மூடினால் வாடாமல் இருக்கும்.

★ மிஷினில் மாவு அரைத்து வந்தவுடன், சூடு ஆறும்வரை திறந்துவைத்து பிறகு மூடவும். மாவு அரைத்து வந்தவுடனே, அந்த சூட்டோடு பட்சணங்கள் செய்தால் சிவந்துவிடும்.

★ மிளகாய் அரைத்தபின் கையில் எரிச்சல் ஏற்பட்டால் நல்லெண்ணெய் தடவி, சோப்பினால் கழுவவும்.

★ கருணைக்கிழங்கு நறுக்கும்போது கை அரிக்கும். புளி நீரைக் கையில் தடவிக் கழுவினால் அரிப்பு நிற்கும்.

★ கருணைக்கிழங்கைக் கழு நீரில் (அரிசி களைந்த நீர்) வேகவைத்தால் அரிக்கும் தன்மை நீங்கும்.

★ தோசை வார்க்கும்போது சுண்டிப் போனால் தோசைக் கல்லில் ஒரு ஸ்பூன் எண்ணெய்விட்டு அரை ஸ்பூன் உப்பு போட்டு, கல் முழுதும் தேய்த்துவிட்டுப் பிறகு வார்த்துப் பாருங்கள்.

லேடீஸ் ஸ்பெஷல்

# காய்கறிகள் வாங்குவது எப்படி?



★ வெண்டிக்காயின் காம்பு ஒடிந்தால் தான் அது பிஞ்சு. இல்லாவிட்டால் அது முற்றல் என்று அர்த்தம்.

★ கத்தரிக்காயை வாங்கும்போது காம்புடன் கூடிய தோல் மூடியபடி இருக்கும் காயாகவும், சொத்தையில்லாததாகவும் பார்த்து வாங்க வேண்டும்.

★ முருங்கைக்காயைக் கையில் சுழற்றிப் பார்க்க வேண்டும். சுழலும் காய் பிஞ்சாக இருக்கும்.

★ வாழைத்தண்டு, சுரைக்காய் முதலியவற்றில் நகம் வைத்தால் உள்ளே போவது போல் இருக்க வேண்டும். அதுதான் பிஞ்சு.

★ கீரைத்தண்டு வாங்கும் போது குட்டையாகவும், கிளைகள் நிறைய இருப்பதாகவும் இருக்க வேண்டும். அதுதான் நார் இல்லாமல் இளசாக இருக்கும்.

★ முட்டைக்கோவா அழுத்தமாகக் கெட்டியாக இருக்க வேண்டும்.

★ கருணைக்கிழங்கு உள்ளே சிவப்பாக இருந்தால்தான் சுவை மிகுந்ததாக இருக்கும்.

★ புடலங்காய், பீர்க்கங்காய் ஒடித்தால் ஒடியவேண்டும். சிறிது வாயில் போட்டால் இனிப்பாக இருக்க வேண்டும்.

★ தக்காளியைக் கெட்டியாகப் பார்த்து வாங்க வேண்டும்.

★ வாழைக்காய் சிறிது கூட மஞ்சள் நிறமாக இல்லாமல் பச்சை நிறமாக இருப்பதைப் பார்த்து வாங்க வேண்டும்.

# முரசின் பரிசு



முரசின் பட்டுச் சேலைப் பரிசுப் போட்டியில் அதிஷ்டசாலிகளில் ஒருவர் இல.88, நாகொல்ல வீதி, மாத்தளையைச் சேர்ந்த திருமதி.தேவி திருநாவுக்கரசுவுக்கு முரசின் உதவி ஆசிரியர்களில் ஒருவரான கலைமணி இரா. பத்மநாதன் பரிசினை வழங்குகிறார்.

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? பதுளை வாசகிக்கு அதிஷ்டம்

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி

இவர்தான். எம். தெய்வீகரஞ்சனி. தெல்பெத்த, மேல்பிரிவு, பதுளை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?

இவ்வாரம் பரிசுக்குரியவர் மார்ச் 25ம் திகதிக்கு பின்னர் முரசு அலுவலகத்தில் காலை 12 மணி முதல் 4 மணிக்கு முன்னர் வந்து (ஞாயிறு, புதன் தவிர) பட்டுச்சேலையை பெற்றுச் செல்லலாம்.

முகவரி: இல 5, காவிந்த பிளேஸ், கிருலப்பனை, கொழும்பு-06.

# வாசிம் அக்ரமும் காது வளையமும்



பாகிஸ்தான் கிரிக்கெட் அணி கப்டன் வாசிம் அக்ரம் புதுப் பிரச்சனை ஒன்றில் மாட்டியிருக்கிறார். அவரது காதில் உள்ள வளையம்தான் பிரச்சனைக்கு காரணம்.

வாசிம் அக்ரம் காது வளையம் போட்டிருப்பதைக் கண்டித்து பைசல் என்னும் பாகிஸ்தானியர் நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தார்.

அவர் தனது மனுவில் பின்வருமாறு கூறியுள்ளார்: "வாசிம் அக்ரம் வளையல் போடுவதில் பிரச்சனை இல்லை. ஆனால், பெண்கள் மட்டுமே வளையம் அணியும் வழக்கம்தான் பாகிஸ்தானில் இருக்கிறது. எனவே வாசிம் அக்ரம் வளயம் (தோடு) போடாமல் தடுக்கவேண்டும்" என்று கேட்டிருக்கிறார்.

# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

## மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கபடுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** E

பெயர்:..............................

முகவரி:..............................

..............................

கையொப்பம்:..............................


உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 16-03-1996

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

# கிரிக்கெட் உலகின் புருனே மன்னன்



சச்சின் டெண்டுல்கர் ரன்களை குவிப்பது ஒரு புறமிருக்க, மறுபுறம் கோடி கோடியாக பணம் குவித்துக்கொண்டிருக்கிறார்.

டெண்டுல்கர் என்ற பெயருக்கு பயங்கரமான மரியாதை. டெண்டுல்கரின் முகத்தைக் கண்டால் போதும் கிரிக்கெட் இரசிக, இரசிகையர்கள் பைத்தியமாகிவிடுகிறார்கள்.

அதனைப் பயன்படுத்தி தமது பொருட்களுக்கு விளம்பரம் தேடுவதில் குறியாக இருக்கிறது வர்த்தக உலகம்.

ஆக்ஷன் ஷூஸ், பூஸ்ட், பெப்சி, விசா, கில்லட், பஜாஜ் ஸ்கூட்டர் போன்றவற்றின் விளம்பரங்களில் தோன்றுவது மூலமாக வருடம் தோறும் சுளையாக 5 கோடி ரூபாய்கள் வருமானமாகக் கிடைக்கிறது. (5 கோடி என்பது இந்திய பண மதிப்பில்)

இதைத் தவிர சச்சின் டெண்டுல்கரை கிரிக்கெட் உலகின் புருனே மன்னராக்கும் புதிய விளம்பரம் ஒன்றும் கிடைத்திருக்கிறது. 'வொர்ல்ட் டெல்' என்னும் நிறுவனம் தனது வியம்பரங்களில் டெண்டுல்கர் தோன்றுவதற்கு 5 வருட ஒப்பந்தம் செய்திருக்கிறது. 5 வருடத்திற்குரிய தொகையாக 15 கோடி (இந்திய மதிப்பு) டெண்டுல்கருக்கு கொடுக்கப்படுகிறது.

இதுதவிர விளையாடும்போது தமது நிறுவன சின்னத்தை அணிந்து விளையாடினால் பல லட்சங்ளை தள்ளிவிட முன்வந்துள்ளன-பிரபல வியாபார நிறுவனங்கள்.

இம்முறை உலகக் கோப்பையை இந்தியா வெற்றி பெறுகிறதோ இல்லையோ, டெண்டுல்கர் என்ற நட்சத்திரம் தோற்கப் போவதில்லை.

அதிக ரன்களை குவித்து, 96 உலகக் கோப்பை தொடரின் அதிரடி ஆட்டக்காரராக மாறக்கூடிய வாய்ப்பு டெண்டுல்கருக்கு கிடைத்திருக்கிறது.

இதுவரை நடைபெற்றுள்ள போட்டிகளின் நிலவரப்படி இந்திய அணி பெற்றுள்ள புள்ளிகள் போதாது. ஆனால் டெண்டுல்கர் தனியாக அடித்துப் பெற்றுள்ள ரன் தொகை ஏனைய அணி வீரர்களைவிட அதிகம். அந்தளவில் இந்திய அணியின் கௌரவத்தை தூக்கி நிறுத்தியிருக்கிறார் டெண்டுல்கர்.

ஆசிய நாட்டில் உலகக் கோப்பைக் கிரிக்கெட் போட்டிகள் நடைபெறுவதையே சகிக்க முடியாத அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு பாடம் புகட்ட வேண்டும்.

இந்தியா, பாகிஸ்தான், இலங்கை ஆகிய மூன்று நாடுகளில் ஒன்று உலகக் கோப்பையை வெல்வதன் மூலம்தான் பாடம் புகட்டலாம்.

அவுஸ்திரேலிய வீரர் மார்க் வோ போன்றவர்களை விட ஆசிய நாட்டு வீரர்கள் ரன்களை குவித்துக் காட்டுவதும் முக்கியம். இம்முறை அந்த வாய்ப்பு டெண்டுல்கருக்கு கிடைத்திருக்கிறது. அவசரப்படாமல் தொடர்ந்து ஆடுவாரேயானால் டெண்டுல்கரால் முடியும்.

90 ரன் தாண்டியவுடன் அவசரப்படும் பலவீனத்தை களைந்து போட்டால் சதம் அடிப்பது டெண்டுல்கருக்கு சாதாரண காரியம்தான்.

இம்முறை டெண்டுல்கர் படைக்கும் சாதனையைப் பொறுத்து, தனிப்பட்ட ரீதியிலும் அவருக்கு அமோக இலாபம் அறுவடையாகும்.

# அவசர யுகத்தில் ஒருநாள் போட்டிகள்

இது அவசரயுகம். 50 இனிய கானங்களைக் கொண்ட படங்களை இன்று பார்க்கும் பொறுமை இல்லை. சினிமா பெண்மணிகளின் உடைகள் கூட முழத்திலிருந்து செ.மீட்டருக்கு குறைந்துவிட்டது. அவசரமான கவர்ச்சிகள். இப்படியான காலகட்டத்தில் கிரிக்கெட் டெஸ்ட் போட்டிகளை மூன்றுநாள் அமர்ந்து இரசிக்கும் பொறுமை தொலைந்துவிட்டது.

மூன்றாம் நாள் கடைசி ஓவரில் வெற்றி தோல்வியின்றி நகரும் டெஸ்ட் போட்டிகள் பெரிய அவஸ்தை.

வேகம், பரபரப்பு, ஆச்சரியம், அசத்தல், சட்டென்று ஏற்படும் உச்சக்கட்ட வியப்பு, வெற்றி தோல்வி இரண்டில் ஒன்று விரைவாக வெளிப்படல் என்பவைதான் இன்றைய காலத்திற்கு பொருத்தமானது.

அதுதான் ஒருநாள் கிரிக்கெட் போட்டி உருவாகக் காரணமானது.

உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகளை நாம்தான் நடத்த வேண்டும் என்று இங்கிலாந்தும், அவுஸ்திரேலியாவும் ஒற்றைக் காலில் நின்றன.

எல்லோருக்கும் வாய்ப்பு தரவேண்டும் என்று வாதிட்டது இந்தியா. போட்டி நடத்தும் உரிமையை ஏலத்தில் விடலாம் என்றது இங்கிலாந்து. இந்தியா அதற்கு ஒப்புக்கொண்டது. உடனே இங்கிலாந்து கட்சி மாறியது. சுழற்சி முறையில் போட்டி நடத்தும் உரிமையை வழங்கலாம் என்கிறது இங்கிலாந்து.

எப்படியோ இம்முறை உலகக் கோப்பை போட்டி நடத்தும் வாய்ப்பு இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் கூட்டணிக்கு கிடைத்திருக்கிறது.

அவுஸ்திரேலியாவுக்கு இதில் பொறாமைதான்.

இலங்கையில் குண்டு வெடித்ததை சாக்காக வைத்து தனது வெறுப்பைக் காட்டிவிட்டது அவுஸ்திரேலியா.

உலகக் கோப்பை போட்டியில் அதிகாரபூர்வமான பானம் கொக்கோ கோலா. அந்த உரிமையைப் பெற பல கோடிகளை கொட்டியது கொக்கோ கோலா.



அதுபோல உலகக் கோப்பை போட்டியின் அதிகாரபூர்வமான சூயிங்கம் 'சென்டர் ஃபிரெஷ்'. அந்த உரிமையைப் பெற இந்திய பண மதிப்பில் 40 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டது. கிரிக்கெட் போட்டிகள் எந்தளவுக்கு ஜனரஞ்சகமாகின்றனவோ, அந்தளவுக்கு கிரிக்கெட்மீது பணமழையும் பொழிந்து கொண்டிருக்கும்.



படிப்பகம்

## பைங்கிளியின் நினைப்பு

வாழ்வென்றால் ஆண்பெண்ணின் இணைப்பு-
வற்றாத சுகம் நல்கும் பிணைப்பு.
பாழ்பட்டுப் போனாலும்
பைங்கிளியே உந்தனுடன்
வாழ்ந்திடுதல் எந்தனது நினைப்பு!

♣♥"

நீயன்று சிரித்திட்ட சிரிப்பு-
நீத்திலமே முல்லைப் பூ விரிப்பு.
தீயென்னும் காமத்தைத்
தினந்தினமும் அணைக்கின்ற
நீ மேகம்: வரி செல்லா அணைப்பு!

♣♥"

தாவுகின்ற எனது மனம் குரங்கு
தளிருனக்கு வாழை நிகர் குரங்கு
பாவடிக்கும் கவிஞனுன்னைப்
பற்றிடவே துடிக்கின்றேன்!
ஆதலினால் எழிலே நீ இரங்கு!

♣♥"

குட்டையிலே வாழ் மீன்கள் கண்கள்
குத்தியதால் உள்ளத்தில் புண்கள்
'எட்பூ'வின் நாசியினாள்
என்காதல் ராணியிவள்,
மட்டு,மொழி சிந்திடவோ பண்கள்!

♣♥"

ஆடைகளை முற்றாகக் களைந்து
ஆசையுடன் அவளுடலை அளைந்து
இடை, மலை சமவெளிகள்
இவவொன்றாய் காண: கண்-
சாடைபுரிவா ளவளும் குழைந்து!

♣♥"

நிசியினிலே சந்திக்கும் நேரம்
நெருக்கந்தான் சற்றுமில்லை தூரம்
பசி தீர்த்துப் பலமணிகள்
படுக்கையிலே சயனிக்க
விசிறிதுணை தேவை: உடல் ஈரம்!

♣♥"

ஆண்மைக்கு என்றுமில்லை ஓய்வு
ஆதலினாற்றான் தேகம் காய்வு
காண்கின்ற அத்தனையும்
கலவியிலே கண்டுவிட
வேண்டுமென்ற தீராத ஆய்வு!

♣♥"

பின்னழகு சுரைக்காயின் பாதி
பேசதற்கு ஏதுமில்லை மீதி
முன்னழகு பங்கயத்தின்
மொட்டாகும்! கைப்பிடித்த-
என்னவளோ "இல்லத்தின் ஜோதி!"


அ. கௌரிதாசன்- ஆலங்கேணி கிழக்கு.

## மௌனம் பேசும் என் மத்தாப்புக் காரிக்கு....

சமாதானத்தைப்போல
இழுபறியாக
இருக்கிறதுன்
சம்மதம்.
**
இன்னும்
பாவிக்கப்படாத
ஏவுகணையை போல
மௌனத்தில்
ஜீவிக்கின்றன
உனது விழிகள்.
**
நாணப்பதுங்கருக்குள்
மறைந்து கொண்டும்
என் மனவீதியை
எட்டியும் பாராத
போராளியாக நீ!
**
உன்னை வளைக்கும்
பாதுகாப்பு படையாக
தினமுன் பின்னால்
ரோந்து போகும்
எனது ஆத்மா!
**
ரத்தம் சிந்தாமல்
முத்தம் சிந்த,
யுத்தம் செய்யாமலே
ஒழிந்து திரியும்
உனக்காக
எதிர்பார்ப்பு முகாமில்,
உன் ஞாபகத்
துப்பாக்கியைத்
தூக்கிக் கொண்டு
காவலுக்கு நின்று,
மனக்கால்கள்
சோர்ந்து விட்டன.
**
என்
எண்ணத்தாளில்
வரையப்பட்ட –
உன்னிதய தேசத்தை
எவருக்கும்
பிரித்துக் கொடுக்கும்
உத்தேசம் என்
உயிருக்கு இல்லை.
**
பௌர்ணமியே...
உன் கண்களைத்
தூக்கிக் கொண்டு
என்னுடன்
போருக்கு வா.
**
உன்னோடு
தோற்றுப்போவதற்கான
போரில்
எதிராளியான நான்
என் உடல், பொருள்,
ஆவியென்ற
அத்தனை ஆயுதங்களையும்
உன் காலடியில்
போட்டு விட்டு
உன் மடியில்
சரணடைந்து
விடுகின்றேன்.
**
உன் இதயச்சிறையில்
என்னை மட்டும் நீ
ஆயுட்கைதியாக்குவாயா?

பூண்டுலோயா- மெய்யன் நட்ராஜ்.

## புயலைத் தந்தவர்கள்



இந்திய கிரிக்கெட் உலக இளம்புயல் டெண்டுல்கரின் அம்மாவும்—அப்பாவும்.

## தேன் கிண்ணம்

### நீ தந்த சாபம்

உணர்வுகளில்
பொங்கியெழும்
பலநூறு சோகங்கள்
கண்ணீர்க் கோடுகளில்
ஊர்வலம் போகின்றன!
–•–
எனது
காதலைப் புதைத்த
சமாதிமேடையை
உன் வாழ்க்கைக்குச்
சிம்மாசனமாக்கிக் கொண்டாய்!
–•–
எனது தூய அன்பை
உனக்குள்
பத்திரமாகப்
பாதுகாக்க முடியவில்லை;
யுவதிகளின்
யௌவனச் சிரிப் பொலியில்
எனது கண்ணீரின் ஓலம்
உனக்கு மறந்து போனது!
மோகனப் பார்வைகளில்
மயங்கிய உனக்கு
எனது வாடிய வதனம்
வேண்டாமற் போனது!

உன்னிடம்
மரநிழலை யாசித்து
முன்வைக்கப்பட்ட
எனது கரங்களில்
எதற்காக
மாளிகைகளின்
முகவரிகளால்
முடிச்சிட்டாய்?
–•–
இன்று
தங்கக் கூட்டினுள்
துடிதுடிக்கிறேன்:
சிறகுகள் வெட்டப்பட்ட
சிட்டுக் குருவியாக!
–•–
சுட்டெரிக்கும்
சஹாராவாக– என்
வாழ்க்கையை
வடிவமைத்தாய்!
இன்று
இன்னொரு ஆபிரிக்காவாக
இருண்டு போனேன் நான்!
–•–
செல்வி.பஹீமா ஜஹான்,
தெமட கொல்ல, மெல்சிரிபுர.

### யுத்தம்

உரிமைகளைப்
பெறுவதற்கு என்றது.
ஒரு தரப்பு–
உங்களைக்
காப்பாற்ற என்றது
மறுதரப்பு–
இரு தரப்புக்களும்
போராட
பணம் கேட்டன–
யுகங்களாக நீண்ட
யுத்தத்தின் முடிவில்
செத்துப்போனார்கள்–
பணம் கொடுத்தவர்கள்!

அ.டக்ளஸ் ஜெயசேகரன்- வவுனியா.

### நானும்

நானும்;
சிறகுகள் செய்வேன்
"சூரியனுக்குள்"
இறங்குவேன்...!
oo
மூளை கொதித்து
மண்டை வெடிக்க
"வெடிகுண்டுகள்"
உற்பத்தி செய்வேன்...!
oo
ரத்தத்தை ஆவியாக்கி
"வதை" முகாம்களுக்கு
விடுதலை பருக்குவேன்..!
oo
தாய்மைகளின்
கருப்பைகளுள் புகுந்து
"சிசு"க்களுக்கு
ஆயுதப் பயிற்சி
கொடுப்பேன்...!
oo
பூமியை பிளந்து
இறந்தவர்களை உசுப்புவேன்;
அவர்களுக்கு
"உயிர்தானம்" செய்வேன்...!
oo
மீண்டும்
இந்த மனிதர்களுக்கு
உலக "சமாதானத்தை"
உரிமையாக்குவேன்...!

ஸாபிறா ஏ. மஜீத்,
அக்கரைப்பற்று–01.

## எப்படி எப்படி வந்தது எப்படி?

ஜேம்ஸ் பொண்ட் 007 படங்கள் இதுவரை 17 வந்துவிட்டன. இறுதியாக வெளிவந்துள்ள 007 படம் 'கோல்டன் ஐ'. செமர்த்தியான வசூல்.

007 என்று ஏன் பெயர் வந்தது? 006. 005. 015 என்றெல்லாம் ஏன் பெயர் வைக்கவில்லை? ஏதோ ஒரு காரணம் இருக்கும் அல்லவா? இருக்கிறது.

ஜேம்ஸ் பொண்ட் 007 பாத்திரத்தை வைத்து கதைகள் எழுதியவர் இயான் :பிளேமிங்.

அவர் தினமும் மதுபான விடுதிக்கு செல்லுவார். மதுபான விடுதியின் பெயர் 'டக்—இன்'. அந்த விடுதிக்குச் செல்லும் பஸ்ஸின் ரூட் நம்பர் 007. தனது கதையில் வரும் கதாநாயகனுக்கு ரகசிய எண் வைத்தால் நன்றாக இருக்குமே என்று நினைத்தார் இயான் :பிளேமிங்.



தான் தினமும் செல்லும் பஸ் ரூட் நம்பர்தான் நினைவுக்கு வந்தது. வைத்துவிட்டார்.

## படித்ததில் பிடித்தது

:பான்டெனல் என்பவர் :பிரான்சு நாட்டுத் தத்துவஞானி. அவரிடம் அழகான ஒரு பெண் வந்து: "எனக்கும் கடிகாரத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன?" என்று கேட்டாள்.

"கடிகாரம் நேரத்தை ஞாபகப்படுத்துகிறது. ஆனால் நீ நேரத்தையே மறக்கும்படி



செய்துவிடுவாய்" என்றார் தத்துவ ஞானி.

## நீ போட்ட வேலி

அடி... முக்காட்டு நிலாவே!
உன் கடைவிழிப் பார்வைகளால்
என் இளமை
காயப்பட்டுக் கிடக்குதடி!
•••
உனக்குப் புரியவில்லையா–
உன் வாழ்க்கையின்
நடுவீதியில் வைத்து
துகிலுரியப்பட்ட
என் ஜீவனின் அவஸ்த்தை?
•••
உன் முந்தானை ஓரத்தை
இறுக்கிப் பிடித்துக் கொண்டு
வரும்...
என் இதயத்தை
குனிந்து பார்!
•••
அடியே...!
உன் தரிசனத்திற்காய்
ஏங்கும்
என் விழிச்சோலைகளுக்கு
கொய்யா மரத்தடியுடன்
வைத்து...
விடை கொடுக்கப் போகிறாயா..?
•••
விண்ணப்பங்கள்
நிராகரிக்கப்பட்டாலும்,
என் காதல்
உன்னை நோக்கி நீளும்...
பிச்சைப் பாத்திரமாய்!
•••
பேசாமப் போறவளே...!
இமைகள் ஒட்டிக் கொள்ள
மறுக்கும் ராவுகளில்...
நகத்தை கடித்து
என் இளமையை
துப்பிக் கொண்டிருக்கிறேன்!
•••

சி.பி. எம்ஜஸம். நகீம்,
பொத்துவில்–2

## பாலைவன நாடு

கனவுகள்+உணர்வுகள்
காய்ந்து
பாலைவனமான தேசம்.
★★
நிசத்தை தொலைத்து
நிழலுக்கு அலையும்
"புண்ணியர்" பூமி
★★
கடலால் சூழ்ந்தும்
ஜனநாயகம் தப்பிய
"திரு நாடு"
★★
முகமூடி
மனிதரின்
வாழ்க்கைத் தலம்.
★★
நியாயங்கள்
மனிதருக்கு
பயந்து
பதுங்கு குழியுள்!
மதங்களால்
மட்டுமல்ல,
மனங்களாலும்
வேறுபட்ட மனிதபூமி!
★★
நாட்டு நடப்பால்
இலவச மரணம்!
★★
ஆண்டவன் தமிழனாய்
பிறக்க
பயப்படும் தேசம்!

சுபா, கண்டி

## இந்த வாரம் உங்கள் பலன்

( 10.03.96 முதல் 16.03.96 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| கும்பம் | - சூரியன், செவ்வாய், சனி, புதன். |
| மீனம் | - கேது. |
| மேடம் | - வெள்ளி. |
| கன்னி | - இராகு. |
| தனு | - வியாழன். |

சந்திரன்– விருட்சிகம், தனு, மகரம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.
★ 14-03-96ல் மீனச் சூரியன்.

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரியானுகூலம். | காலை | 6 மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, மனக்கலக்கம். | பகல் | 12 மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, கௌரவம். | காலை | 6 மணி |
| புதன்- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பி.ப. | 2 மணி |
| வியாழன்- வீண் முயற்சி, பணச் செலவு. | காலை | 6 மணி |
| வெள்ளி- தொழில் விருத்தி, மனக்குறை நீங்கும். | பகல் | 12 மணி |
| சனி- புதிய முயற்சி, பணக் கஷ்டம். | காலை | 7 மணி |

அதிஷ்டநாள்- புதன், அதிஷ்ட இலக்கம்-4

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், செலவு மிகுதி. | காலை | 6 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, அந்நியர் உதவி. | பி.ப. | 2 மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், உயர்ந்த நிலை. | பி.ப. | 1 மணி |
| புதன்- வீண் மனஸ்தாபம், மனச் சஞ்சலம். | காலை | 7 மணி |
| வியாழன்-அந்நியர் உதவி, கௌரவம். | பகல் | 12 மணி |
| வெள்ளி- துயர் நீங்கும், மனமகிழ்ச்சி. | காலை | 6 மணி |
| சனி- பொருள் வரவு, ஆடம்பரச் செலவு. | பி.ப. | 2 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, பணவரவு. | பகல் | 12 மணி |
| திங்கள்- வீண் கவலை, பெரியோர் உதவி. | காலை | 7 மணி |
| செவ்வாய்- பெரியோர் பகை, மனக் கஷ்டம். | பி.ப. | 2 மணி |
| புதன்- செலவு மிகுதி, மனப்பயம். | காலை | 6 மணி |
| வியாழன்- புதிய முயற்சி, மனக்குறை நீங்கும். | பகல் | 12 மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, பணக் கஷ்டம். | காலை | 6 மணி |
| சனி- உயர்ந்த நிலை, மனப்பயம். | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்-ஞாயிறு, அதிஷ்ட இலக்கம்-6

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், முயற்சி தடை. | காலை | 6 மணி |
| திங்கள்- பொருள் நஷ்டம், அந்நியர் பகை. | காலை | 7 மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், பொருள் வரவு. | பகல் | 12 மணி |
| புதன்- வீண் முயற்சி, பணக் கஷ்டம். | மு.ப. | 9 மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 மணி |
| வெள்ளி- இனசன நன்மை, அந்நியர் உதவி. | காலை | 7 மணி |
| சனி- புதிய முயற்சி, பணவரவு. | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் கஷ்டம், பணச் செலவு. | பி.ப. | 1 மணி |
| திங்கள்- உறவினர் பகை, மனக் கலக்கம். | காலை | 7 மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, மனக்குறை நீங்கும். | பகல் | 12 மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, அந்நியர் சகவாசம். | காலை | 6 மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. | 1 மணி |
| வெள்ளி- இனசன நன்மை, கௌரவம். | பகல் | 12 மணி |
| சனி- தொழில் விருத்தி, உயர்ந்த நிலை. | காலை | 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் உயர்ச்சி, உயர்ந்த நிலை. | பகல் | 12 மணி |
| திங்கள்- வீண் மனஸ்தாபம், செலவு மிகுதி. | காலை | 7 மணி |
| செவ்வாய்- உறவினர் உதவி, மனமகிழ்ச்சி. | பி.ப. | 2 மணி |
| புதன்- தொழில் மந்தம், பணச் செலவு. | காலை | 6 மணி |
| வியாழன்- பயனுள்ள செயல், பெரியோர் உதவி. | பகல் | 12 மணி |
| வெள்ளி- தொழில் கேடு, மனக் கலக்கம். | பி.ப. | 1 மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, அந்நியர் சகவாசம். | காலை | 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-2

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரியானுகூலம். | பி.ப. | 2 மணி |
| திங்கள்- வெளிவிடப் பயணம், தொழில் மந்தம். | பகல் | 12 மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, மனக் கலக்கம். | காலை | 7 மணி |
| புதன் - வீண் மனஸ்தாபம், பயனுள்ள செயல். | பி.ப. | 2 மணி |
| வியாழன்- புதிய முயற்சி, மன மகிழ்ச்சி. | காலை | 7 மணி |
| வெள்ளி- அந்நியர் சகவாசம், பணச் செலவு. | பகல் | 12 மணி |
| சனி- உறவினர் உதவி, கௌரவம். | பி.ப. | 1 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-6

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பணவரவு. | காலை | 7 மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, முயற்சி பலிதம். | பகல் | 12 மணி |
| செவ்வாய்- வீண் மனஸ்தாபம், வெளியிட வாழ்க்கை. | மு.ப. | 9 மணி |
| புதன்- இனசன நன்மை, மனக் கலக்கம். | பி.ப. | 2 மணி |
| வியாழன்-புதிய முயற்சி, பயனுள்ள செயல். | மு.ப. | 9 மணி |
| வெள்ளி- செலவு மிகுதி, துயர் நீங்கும். | பகல் | 12 மணி |
| சனி- வெளியிடப் பயணம், மன மகிழ்ச்சி. | காலை | 8 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-3

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் உயர்ச்சி, பணவரவு. | காலை | 7 மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, மன மகிழ்ச்சி. | பகல் | 12 மணி |
| செவ்வாய்- வீண் முயற்சி, செலவு மிகுதி. | காலை | 8 மணி |
| புதன்- மனக்குறை நீங்கும், பொருள் வரவு. | பி.ப. | 1 மணி |
| வியாழன்-வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பகல் | 12 மணி |
| வெள்ளி- மனக் கலக்கம், தொழில் மந்தம். | காலை | 7 மணி |
| சனி- உறவினர் பகை, செலவு மிகுதி. | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### விருச்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் பிரச்சனை, இனசனப் பகை. | பகல் | 12 மணி |
| திங்கள்- மனப் பயம், அந்நியர் உதவி. | காலை | 8 மணி |
| செவ்வாய்- உயர்ந்த நிலை, தொழில் சிறப்பு. | பி.ப. | 1 மணி |
| புதன்- புதிய முயற்சி, கௌரவம். | காலை | 7 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், முயற்சி மேன்மை. | மு.ப. | 10 மணி |
| வெள்ளி- பொருள் வரவு, காரியானுகூலம். | பி.ப. | 2 மணி |
| சனி- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | காலை | 7 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், முயற்சி தடை. | பி.ப. | 1 மணி |
| திங்கள்- வீண் மனஸ்தாபம், பணச் செலவு. | காலை | 7 மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, பண வரவு. | பகல் | 12 மணி |
| புதன்- புதிய முயற்சி, இனசன நன்மை. | காலை | 6 மணி |
| வியாழன்- அந்நியர் சகவாசம், கௌரவம். | பி.ப. | 2 மணி |
| வெள்ளி- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | பி.ப. | 1 மணி |
| சனி- பயனுள்ள செயல், மனமகிழ்ச்சி. | காலை | 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-2


### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பகல் | 12 மணி |
| திங்கள்- வீண்குறை கேட்டல், பணக்கஷ்டம். | காலை | 7 மணி |
| செவ்வாய்- பயனுள்ள செயல், பணவரவு. | பகல் | 12 மணி |
| புதன்- பொருள் வரவு, பெரியோர் உதவி. | காலை | 7 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், இனசன நன்மை. | பி.ப. | 1 மணி |
| வெள்ளி- மனக் கலக்கம், புதிய முயற்சி. | காலை | 8 மணி |
| சனி- தொழில் கஷ்டம், மனக் கலக்கம். | பி.ப. | 2 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-7





## எனது பூந்தோட்டத்திலே.......

வாடா மல்லிகை மலர்ந்திருக்கும்,
வாசல் எல்லாம் மணம் பரப்பும்-
கொட்டும் முட்கிளை ஒன்றினிலே
கொத்தாய் ரோசா பூத்திருக்கும்!

கண்டவர் மனதைக் கவர்ந்திழுக்கும்,
கனகாம்பரப் பூ செழித்திருக்கும்;
அழகாய் நிலவு தோன்றும்வரை,
அல்லியும் அங்கே காத்திருக்கும்!

செவ்விதழ் தாமரை விரிந்திருக்கும்,
செவ்வந்தி பூத்துச் சிரித்திருக்கும்;
சூரியன் போகும் திசை பார்த்து
சூரியகாந்தி முகம் திருப்பும்!

வண்ண மொட்டுகள் அவிழ்ந்திருக்கும்,
வண்டுகள் அங்கே மொய்த்து வரும்;
மலர்ந்த என்பூந் தோட்டம் கண்டால்,
மனதில் மகிழ்ச்சி மொட்டவிழும்!

மிருதுபாஷினி-பதுளை.

சைகையில் பொருளுணர்! சொல்வது
தெளிந்து சொல்!
சோதிடந் தனை இகழ்! சௌரியம்
தவறேல்!
ஞமலி போல் வாழேல்! ஞாயிறு போற்று!
ஞிமிரென இன்புறு! நெகிழ்வது அருளின்!
-சுப்பிரமணிய பாரதியார்.

# எது அழகு?

### பாப்பா முரசு சிறுகதை

ஒரு காட்டில் கம்பீரமான உடலமைப்புக் கொண்ட கலைமான் ஒன்று இருந்தது. அது மிகவும் உல்லாசமாக அந்தக் காட்டில் சுற்றித் திரிந்தது.

ஒருநாள் வயிறு நிறைய இலைதழைகளைச் சாப்பிட்டுவிட்டு தண்ணீர் குடிக்க ஒரு நீரோடைக்கு வந்தது. நீர் குடிக்கும் போது, தண்ணீரில் பிரதிபலித்த தன் உருவத்தை ஒரு முறை பார்த்தது.

கலைமான் தன் உருவத்தைத் தண்ணீரில் பார்ப்பது இது முதன் முறை அல்ல. தினமும் சாப்பிட்டு விட்டு நீர் குடிக்கும் போதெல்லாம் பார்ப்பது தான். ஆனால் இன்று ஏனோ தன் உடலமைப்பைச் சற்றுக் கவனம் எடுத்துப் பார்த்தது.

'நான் எவ்வளவு அழகு. என் கொம்புகள் எனது கம்பீரத்தை வெளிப்படுத்துவதாக இருக்கின்றன. கண்களில் கூட காந்தம் போன்ற ஓர் ஈர்ப்பு சக்தி இருப்பதும் தெரிகிறது. ஆனால் இந்த நான்கு கால்களும் என் உடலமைப்புக்குப் பொருத்தமாகவே இல்லை. இப்படி ஒல்லியாக இருக்கின்றனவே! என் கால்களைப் பார்க்கவே எனக்குப் பிடிக்கவில்லை. ஒரே அருவருப்பாக இருக்கிறது,' என்று குறைப்பட்டுக் கொண்டது கலைமான்.

அப்போது-

அதன் பின்னே மெலிதாக ஏதோ நடந்து வரும் ஓசையைக் கேட்கவே திரும்பிப் பார்த்தது.

அங்கே-

கலைமானின் மேல் பாய்வதற்குத் தயாராக, வாயைத் திறந்தபடி சிங்கம் ஒன்று நின்று கொண்டிருந்தது.

அவ்வளவுதான். அடுத்த கணம் கலைமான் ஒரு துள்ளுத்துள்ளி, வில்லில் இருந்து புறப்பட்ட அம்பு, போல் பாய்ந்து ஓடத்துவங்கியது.

அதன் கால்கள் அசுர வேகத்தில் இயங்க, மான் காட்டை நோக்கிப் பறந்தது.

மானின் அசுர வேகத்திற்கு சிங்கமும் ஈடுகொடுத்தது.

சிறிது நேரத்தில் கலைமான் காட்டிற்குள் நுழைய சிங்கமும் நுழைந்தது.

அடர்த்தியான மரங்களின் இடையே புகுந்து புகுந்து கலைமான் ஓடியது. ஓடிக்கொண்டே ஒரு வினாடி பின்னால் திரும்பிப் பார்த்தது. அப்போது-

கலைமான் ஒரு மரத்தின் மீது மோத, அடர்த்தியாக இருந்த மரத்தின் கிளைகளில், அதன் கொம்புகள் மாட்டின.

தனது கொம்புகளை மரத்தின் கிளைகளில் இருந்து விடுவிக்க முயன்றது. ஆனால் அது எவ்வளவு முயன்றும் அதனால் மரத்தில் சிக்கிக் கொண்ட தன் கொம்புகளை உருவி எடுக்க முடியவில்லை.

அது இந்தப் போராட்டத்தில் இருந்த போது, சிங்கம் அதன் மீது பாய்ந்தது.


கலைமான் மரணிக்கும் தறுவாயில்,

'எனது கால்களை எத்தனை மோசமாய் நானே நினைத்து விட்டேன். என்னை சிங்கத்திடமிருந்து இவ்வளவு தூரம் காப்பாற்றியது இந்தக் கால்கள் அல்லவா? இவற்றைப் போய் கேவலமாக நான் நினைத்து விட்டேனே. பாழாய்ப் போன இந்தக் கொம்புகளை அழகு என்று வர்ணித்தேன். ஆனால் இந்தக் கொம்புகள் தானே எனக்கு மரணத்தைத் தேடித் தந்தன. இந்தக் கொம்புகள் மட்டும் இல்லாமல் இருந்திருந்தால் இந்தச் சிங்கத்திடமிருந்து என் கால்கள் என்னை நிச்சயம் காப்பாற்றியிருக்கும்', என்று நினைத்தபோது அதன் உயிர் பிரிந்தது.



# வாரம் ஒரு நாடு

## மலாவி



**தலைநகர்** – லிலோங்வே
**பரப்பு** – 1,18,784 சதுர கிலோ மீட்டர்.
**மக்கள் தொகை** – 1.07 கோடி
**மொழி** – ஆங்கிலம், சிசேவா, லோம்வே, யாவ்.
**எழுத்தறிவு** – 25%
**சமயம்** – கிறிஸ்தவம், பழங்குடி சமயம், இஸ்லாம்.
**நாணயம்** – குவாச்சா
**தனிநபர் வருமானம்** – 200 டொலர்.

**அமைவிடம்:**

மலாவி, தான்சானியா, மொஸாம்பிக், ஸாம்பியா ஆகிய நாடுகளால் சூழப்பட்டுள்ளது. ஏரி மற்றும் மலைகள் சூழ்ந்த நாடான மலாவி குன்றா அழகினையுடையது. அதனால் சுற்றுப் பயணிகளின் சொர்க்கம் எனப்படுகிறது.

**வரலாறு:**

முன்பு நியாஸாந்து என்றழைக்கப்பட்டது. பிரிட்டனிடமிருந்து 1964இல் சுதந்திரம் பெற்றது. 1966 இல் குடியரசானது. ஒரே கட்சி ஆட்சி. கட்சியின் பெயர் மலாவி காங்கிரஸ் கட்சி.

**பொருளாதாரம்:**

மலாவி ஒரு விவசாய நாடு. நாட்டு வருமானத்தில் 43% விவசாயத்தின் மூலமே கிடைக்கிறது. என்றாலும் விவசாயம் பிழைப்புக்கு மட்டுமேயுள்ளது. இதன் முக்கிய பணப்பயிர்கள் புகையிலை, கரும்பு, தேயிலை, பருத்தி போன்றவையாகும்.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் என்னை!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 16.03.1996.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 132
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 130

பரிசுக்குரியவர்:
செல்வன். எஸ். மணிவண்ணன்
நீர்கொழும்பு வீதி, வத்தளை.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| செல்வி. புஸ்பராஜு வினோதா. நஸ்ரியா மகா வித்தியாலயம், சிலாபம். | பாத்திமா சஹாரா சிராஜ். மகா வித்தியாலய மாவத்தை, கொழும்பு-13. |
| எஸ். அருண்குமார். அஞ்சலக வீதி, மஸ்கெலியா. | ஜெ. கீதன். இரத்தினபுரி தமிழ் மகா வித்தியாலயம், பலாங்கொடை. |
| பாத்திமா நஸ்மிளா உவைஸ். துபலியத்த, வரக்காபொல. | செல்வி.எஸ். ஷோபா. நாகொல்ல வீதி, மாத்தளை. |
| செல்வி. துஷ்யந்தி கருப்பையா. அப்புத்தளை தமிழ் மகா வித்தியாலயம், அப்புத்தளை. | செல்வி.இ. தர்ஷினி. வின்சென்ட் மகளிர் மகா வித்தியாலயாம், மட்டக்களப்பு. |
| ரி. சபேசன். சேத்தூர், மட்டக்களப்பு. | எஸ். இந்துஜா. ஸ்ரீ குணானந்த மாவத்தை, கொழும்பு-13. |

# சிங்கம்



சிங்கத்தின் கம்பீரமான உருவம் மற்றும் பலத்தை வைத்து சிங்கத்தை விலங்குகளின் அரசன் என்று கூறுகிறார்கள். ஆபிரிக்கா, சகாரா பாலைவனத்தின் தென்பகுதி மற்றும் இந்தியாவின் குஜராத்தி மாநிலத்தில் உள்ள கீர் காடுகளில் சிங்கங்கள் அதிகம் வசிக்கின்றன.

தனது கால் பாதத்தின் ஒரே அடியால் வரிக்குதிரை போன்ற மிருகங்களின் கழுத்தை முறித்துவிடும் பலம் கொண்டது சிங்கம். அதன் பெரிய பலமான பாதங்கள் வளைந்து கூராக இருக்கும். மிருகங்களைப் பாதங்களுக்கு இடையே பிடித்து வைத்துக்கொள்ளும். பெரிய மாமிசத் துண்டைச் சாப்பிடும்போது அதனைப் பாதங்களில் உள்ள நகங்களால் கிழித்துவிடும். கால் நகங்களைத் தேவைப்படும்போது வெளியே நீட்டிக் கொள்ளவும், மற்ற நேரங்களில் சுருக்கிக் கொள்ளவும் தெரியும்.



ஒரே நேரத்தில் சிங்கத்தால் முப்பத்தி நான்கு கிலோ இறைச்சியைச் சாப்பிடமுடியும். வயிறு முட்ட சாப்பிட்ட பின்னர் பலநாள் சாப்பாடு இல்லாமல் இருக்கும். சிங்கம் பசி எடுக்கும்போது மட்டுமே மிருகங்களைக் கொல்லும். சிங்கம் வயிறு நிறையச் சாப்பிட்ட பின்னர் தலை நிமிர்ந்து நடக்கும். அப்போது சிங்கத்தைப் பார்த்து மற்ற மிருகங்கள் பயப்படாது. ஆனால் சிங்கம் தலைகுனிந்து நடக்கும்போது மற்ற மிருகங்கள் உயிரைக்காப்பாற்றிக் கொள்ளத்தலைதெறிக்க ஓடும். அப்படித் தலைகுனிந்து, உடலைக் குறுக்கிக் கொண்டு நடந்தால் சிங்கத்திற்குப் பசி என்று அர்த்தம்.



பெண் சிங்கம் ஒரே நேரத்தில் இரண்டு, மூன்று குட்டிகளைப் போடும். பிறந்த சிங்கக் குட்டி அரைக்கிலோ எடை இருக்கும். முப்பது சென்ரி மீட்டர் நீளம் இருக்கும். இரண்டு வாரங்களுக்குப் பின்னர்தான் அதன் கண்கள் திறக்கும். மூன்று வாரங்களுக்குப் பின்னர் பல் முளைக்க ஆரம்பிக்கும். ஆறாவது மாதத்தில் தாயுடன் வேட்டையாடும். ஒரு வருடத்தில் தனியாக வேட்டையாடத் தொடங்கிவிடும்.

காட்டில் வாழும் சிங்கம் பத்து ஆண்டுகள் வரை உயிர் வாழும். ஆனால் மிருகக்காட்சி சாலைகளில் உள்ள சிங்கம் இருபது ஆண்டுகள் வரை வாழும்.

### ஒரு வரிச் செய்தி

* நெருப்பைப் பயன்படுத்தக் கற்று 5 இலட்சம் வருடங்களாகின்றன.
* முதல் குறுக்கெழுத்துப் போட்டி 1913 ல் வெளியாயிற்று.
* பெல்ஜியம் நாட்டில் திரைப்படங்களுக்குத் தணிக்கை கிடையாது.
* சூரியனின் மையப்பகுதியின் வெப்பம் 1.5 கோடி பாகை.
* இங்கிலாந்தில் விவசாயிகள் 2.5 சதவீதம் தான் உள்ளனர்.
* அமெரிக்காவில் உள்ள நியூயோர்க் நகரில் 30 மொழி பேசுவோர் வசிக்கின்றனர்.
* பத்திரிகைகள் அதிகம் படிப்பவர்கள் பல்கேரிய மக்கள்.
* நீலத் திமிங்கிலம் ஒரு நாளைக்கு 3 தொன் உணவு சாப்பிடும்.
* குதிரையின் கண் எதிரெதிர் திசைகளில் அசையும்.
* பாலூட்டிகள் வெப்ப இரத்தம் உள்ளவை.

### சவ்வரிசி

**★ சவ்வரிசி எவ்வாறு தயாரிக்கப்படுகிறது?**
சில வகை பனை மரங்களின் தண்டுப் பகுதியினுள் உள்ள மாவுப் பொருள் சவ்வரிசியாகத் தயாரிக்கப் படுகிறது.



**★ இது எப்படி எடுக்கப்படுகிறது?**
பனை மரம் வளர்ந்து 15 ஆண்டுகளானதும், அது பூக்கத் தொடங்கும் சமயத்தில் மரம் வெட்டப்படும். அதன் தண்டு பிளக்கப்பட்டு அதிலுள்ள மாவுப் பொருள் எடுக்கப் பட்டுத் தூளாக்கப்படும். இதை அப்படியே தூளாகவும் பயன்படுத்தலாம். அல்லது சிறு சிறு உருண்டைகளாகவும் செய்து பயன்படுத்தலாம்.

**★ ஒரு மரத்திலிருந்து எவ்வளவு மாவுப் பொருள் எடுக்கலாம்?**
சுமார் மூன்றாயிரத்து அறுநூறு கிலோ மாவுப்பொருள் எடுக்கலாம்.

**★ இது எதற்குப் பயன்படுத்தப்படுகிறது?**
பாயாசம்,கஞ்சி போன்ற பலவகை உணவுகள் செய்யப்பயன்படுகின்றது. துணிகளுக்குக் கஞ்சி போட்டு மொட மொடப்பாக்குவதற்கும் பயன்படுகிறது.

**★ இந்த வகை பனைமரங்கள் எங்கு அதிகமாக வளர்கின்றன?**
இந்தியா, இலங்கை, பர்மா ஆகிய நாடுகளில் அதிகம் வளர்கின்றன.

www.padippakam.com

## இதுவரை

பழைய பங்களா ஒன்றில் பெண் பிணம், அதன் உடலில் ஆறு குண்டுகள். கொல்லப்பட்டது யார், கொன்றது யார்? பொலிஸ் விசாரணை நடக்கிறது. மற்றொரு கொலை, ரயில் பாதையருகே இன்னொரு பிணம். அது ஒரு ஆண்பிணம் என்பது மட்டும் தெரிகிறது. அடையாளம் தெரியவில்லை. விசாரணை தொடர்கிறது. இதற்கிடையே இன்பவல்லி என்னும் பணக்கார சீமாட்டி வீட்டில் பிறந்தநாள் விருந்து நடக்கிறது. அதில் நான்கு இளைஞர்கள் கலந்து கொள்கின்றனர். விருந்தில் கலந்து கொள்ளும் ஜோதி என்ற பெண் தாராளமானவள். நன்கு குடித்திருந்தாள். அந்த நான்கு இளைஞர்களுடன் ஜாலியாக காரில் புறப்பட்டுச் செல்கிறாள். இடை நடுவே மதுவெறியில் அவள் புலம்பல் அதிகமாகிறது. பயந்து போன இளைஞர்கள் திறந்திருந்த ஒரு வீட்டில் அவளைக்கிடத்திவிட்டு காரில் பறந்துவிடுகின்றனர். அந்த வீட்டுக்கார இளைஞன் அரசன் திடீரென்று முளைத்த பெண்ணைக்கண்டு திகைத்துப் போகிறான். இனி.....

# திகில் 4

# நீ! நீ யார்!

**மர்மக்கதை மன்னன் ராஜேந்திரகுமார்**





வியப்பு, அச்சம், கலக்கம் என்று மாறி மாறி வந்தது அரசனுக்கு.

டீ வாங்கி வரப் போன பத்து நிமிஷத்துக்குள் அறையில்– அதுவும், என் படுக்கையில் திடீரென முளைக்கிறாள் ஒரு பெண். அதுவும் முழு அளவு போதையோடு– உளறலோடு.

மெல்ல திரும்பி அச்சமாகப் பார்த்தான். வீட்டுக்காரருக்குத் தெரிந்தால் அவ்வளவுதான்.

பெட்டியை எடுத்து வெளியே வைத்து இவனையும் தூக்கி எறிந்து விடுவார். ஓட ஓடத் துரத்துவாரே!

மெல்ல நெருங்கிப் பார்த்தவனுக்கு அவளை அடையாளம் தெரிந்தது.

இவன் வேலை பார்க்கும் அதே வங்கியில் கணக்கு வைத்திருக்கிறாள். அடிக்கடி அட்டகாசமாக வருவாள். பார்த்திருக்கிறான். இவள் எப்படி?

கைக்கடிகாரத்தைப் பார்த்தான்.

மணி இரண்டை நெருங்கிக் கொண்டிருக்கிறது. சரியாக ஐந்து மணிக்கு எழும் வீட்டுக்காரர் முதல் வேலையாக காலை வந்தனம் சொல்வதாக சாக்கு வைத்து வந்து அறையை ஆராய்வார். நோட்டமிடுவார். அதற்குள்–

இவளை அப்புறப்படுத்தியாக வேண்டும்! சட்டைப்பை-பர்ஸ்-மேஜை இழுப்பறை எல்லாம் சோதித்து ஏகமாய் ரூபாய் நாணயங்களை சேகரம் பண்ணிக் கொண்டு மறுபடியும் வெளியேறி நடந்தான்.

தெருமுனையிலிருந்த பப்ளிக் பூத்தைத் திறந்து போய் போனைத் திருகினான்.

ரூபாய் நாணயங்கள் ஒவ்வொன்றாக நிறையத்தரம் வீணாக்கியபின் தொடர்பு கிடைத்தது.

"ஆ..ஆ..அவ்" என்ற கொட்டாவிக்குப் பிறகு "ஹலோவ் ஜென்னி பேசறேன்" என்றது குரல்.

"மேடம், ராஜா இல்லே?"

"தூங்கறார். யார் பேசறது?"

"நான்தான் மேடம்– அரசன்."

"சொல்லு அரசன்! என்ன இந்த நேரத்தில போன்? விடிந்ததும் பேசிக்கலாம் குட் நைட்."

"போனை வைச்சிடாதீங்க மேடம்! ப்ளீஸ். எனக்கு உடனே உங்க உதவி தேவைப்படுகிறது."

"என்ன உதவி?"

"நீங்களும் ராஜாவும் இங்கே உடனே வரணும். ரொம்பவும் அவசரம்."

"அதில பாரு தம்பி. ராத்திரி நேரம் அவசரம்னா டாக்டர்களைத்தான் கூப்பிடுவாங்க. துப்பறியும் நிபுணர்களையில்லே. வச்சிடு."

"ஓ! நோ! வைச்சிடாதீங்க. இது ரொம்பவும் முக்கியமான விஷயம். உயிர்ப் பிரச்சினை: மானப் பிரச்சினை."

"என்ன பேசறேன்னு புரியல்ல. அவரை எழுப்பறேன். இரு."

ராஜா வந்தான். குரல் ஒலித்தது. "என்ன அரசு, டி.வி.லோன் விஷயமா? காலையிலே பேசலாமே."

"அய்யோ அதில்லே சார்! இது வேற சங்கதி. சங்கடமான சங்கதி."

"சுருக்கமாகச் சொல்லு. அவசியம் வரவேணும்னு மனசிலபட்டா உடனே கிளம்பி வரேன்."

"படிக்கிறச்ச தூக்கம் வந்ததுன்னு டீ வாங்கி வர கிளம்பினேன்." என்று ஆரம்பித்தவன்– "இப்ப என்ன பண்ணறதுன்னே தெரியல்லையே" என்று முடித்தான்.

"சிக்கலாகத்தான் தெரிகிறது. உடம்பிலே ஏதாவது சுத்திக்கிட்டு கிளம்பு."

"சார்." என்றான் அலறலாக.

"நான் இங்கே ஜென்னியைச் சொன்னேன். அதுக்கேன் இந்த அலறல் அலர்றே?"

"எப்ப வருவீங்க சார்?"

"அரை மணியில வர்றோம். பறக்காதேப்பா. பறக்காதேப்பா."

இவர்கள் போய்ச் சேரும் போது வாசலிலேயே காத்திருந்தான் அவன். அமைதியே இல்லாமல் தவிப்புடன்.

"எங்கே அந்தப் பெண்?"

கூட்டிப் போய்க் காட்டினான். இன்னமும் மல்லாந்த நிலையில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள்.

"ஏய் அரசா! இது ஒண்ணும் வம்பு சமாச்சாரமா தெரியல்ல. களைச்சுத் தூங்கற மாதிரியில்லேயிருக்கு. களைப்பு எப்படி வந்தது உன்னாலா? உன் வேலையா?"

"சார், அதெல்லாமில்லே சார்! நம்புங்க."

"நான் நம்பறதிருக்கட்டும். எழுந்து வந்தா வீட்டுக்காரர் நம்புவாரா?"

"கொன்னுடுவார்."

"அப்ப கத்தாம இரு. மெதுவாகச்சொல்லு, இது யாருன்னு தெரியுமா?"

"தெரியும்"

"சொல்லேன் பின்னே? ஒவ்வொண்ணும் கேட்டு கேட்டுத் தானா பதில் சொல்லுவே? ஹர்ரியப் மேன்!"

"திருமதி சரஸ்வதியம்மாள்னு ஒரு பெரிய கோடீஸ்வரி விதவை இருக்காங்க."

"சரி."

"அவங்க ஒரே மகள் தான் இந்தப் பெண். பெயர் சரியாக தெரியாது. ஜோதின்னு தான் நினைக்கிறேன். அந்த கோடீஸ்வரி, இந்தப் பெண், இவங்க அண்ணன் அண்ணின்னு எல்லாருக்குமே எங்க பாங்கில் தனித்தனியாக கணக்கு உண்டு. அடிக்கடி வருவாங்க. அதிலும் பாதுகாப்பு பெட்டகமே வாடகைக்கு எடுத்திருக்கு. அடிக்கடி நகைகளை எடுக்கவோ வைக்கவோ வரும். போகும்."

"தெரிந்த பெண். அடிக்கடி பார்த்த பெண். ராத்திரி நேரத்தில் தேடி வந்து கட்டில்ல படுத்திருக்கிறாள். ஆனால் அது எப்படின்னு உனக்குத் தெரியாது."

கண்களில் சலிப்புக்காட்டி ஜென்னியைப் பார்த்தான். "ஜென்னி இதை நீ நம்பறே?"

சுட்டுவிரலை அசைத்தாள். "ஏதோ சில்மிஷம் நடந்திருக்குன்னு தான் நினைக்கத் தோணுது பாஸ்."

"நோ" என்றவன்–

"ஸ்ஸு" என்று அடக்கியதும்,

"நோ" என்றான் அடக்கமான குரலில். "அந்தப் பெண்ணோட நான் பேசினதே கிடையாது. இந்த நிமிஷம் வரை."

"நம்பறேன். சரி. எதுக்கு எங்களை வரவழைச்சே? என்ன உதவி தேவை? யாருன்னு கண்டுபிடிக்கிற வேலையுமில்லை. உனக்கே தெரியும் அவளை."

"இவளை உடனே அப்புறப்படுத்தணும். அதுக்கு உங்க உதவி வேணும்."

"இது நல்லாயிருக்கே! அவ என்ன செத்த பிணமா? அப்புறப்படுத்த? எழுப்பி போடின்னா போயிடறா."

"இல்லே ஜென்னி! செமர்த்தியா குடிச்சிருக்கிறாள் போல தெரியுது. எழுப்பப் போய் ஏதாவது பெரிசா கூச்சல் போட்டு கலாட்டா பண்ணிட்டால்? உங்களோட வந்த பெண் மாதிரி கூட்டிட்டுப் போயிருங்களேன். வீட்டுக்காரர் பார்த்தாலும் உங்களோட வந்த பெண்ணுன்னு நினைச்சுப்பார்."

"அதுவும் சரி தான். ஜென்னி நீ தலைப் பக்கமா தூக்கு. நான் கால் பக்கமாக தூக்கறேன். காருக்கு கொண்டு போயிடலாம்."

"நோ. நீங்க தலைப்பக்கம் பிடிங்க."

"ஓ.எஸ்." என்று அவன் கிளம்பிய அவசரத்தை பார்த்ததும் சந்தேகம் வந்தது ஜென்னிக்கு. "கையிடுக்கு வழியாகத் தான் பிடிக்கணுமா? நீங்க ஆளே வேணாம். சிறுவனே! நீயே தூக்கிட்டு காருக்கு கொண்டு வா."

தனியாக அப்படியே தூக்கி நடந்து போனான் அந்த அரசன்.

"ராஜாவே! என் கணவரே! ஒரு நாளாவது இவ்வளவு லாகவமாக என்னைத் தூக்கிட்டு போனதில்லை நீங்க."

"இதே மாதிரி நினைவில்லாம இருந்தால் கண்டிப்பாக தூக்கிட்டுப் போவேன்."

பின் சீட்டில் அவளைப் படுக்க வைத்து, தள்ளி நின்று வழியனுப்பக் காத்திருந்தான் அந்த அரசன். "நானும் வரணுமா என்ன? படிக்கணுமே."

"நாசமா போச்சு உன் படிப்பு. நீ பாட்டுக்கு வண்டி ஏற்றி விட்டால் போச்சா? எங்களுக்கு அவள் வீடு தெரியாதே."

"ஓ. ஆமாம்." என்றவன் முன்ஸீட்டிலேயே தொற்றிக் கொண்டான்.

"எங்கே போகணும்?"

"நேரே ஓட்டுங்க சொல்றேன்." என்றான். அவன் பயம் அவன் கதவை அறைந்து சாத்தியதால் வீட்டுக்காரர் விழித்திருப்பாரா? என்பதுதான்.

"அதோ அந்த ரெண்டு தூங்கு மூஞ்சி மரமிருக்கே அந்த வீடு தான்."

"வீடா அது? பங்களா– அரண்மனை!"

உள்ளே போவதிலேயே சிரமமிருந்தது. இரும்பு கேட்டை திறக்க மறுத்து துரத்தும் கூர்க்காவை சமாளிப்பதே பெரிய பாடாக இருந்தது. பின் ஸீட்டில் அவன் சின்ன எஜமானியைக் காட்டிய பின்தான் கேட்டைத் திறந்து விட்டான்.

இண்டர்காம் தொலைபேசியில் அந்த சரஸ்வதியம்மாவை எழுப்பி விபரம் சொல்ல– அந்தம்மாள் போனிலேயே இவர்கள் ஜாதகத்தையே அறிந்து தெரிந்து கொண்ட பிறகு தான்– தூக்கக் கண்களோடு கீழே இறங்கி வந்து கதவைத் திறந்தாள்.

"இவ வேற ரோதனை? என்ன ஆச்சு? ஏன் தூக்கிட்டு வர்றீங்க செத்துப் போயிட்டளா?" என்று கேட்ட கேள்வியில் மெலிதான ஆர்வமிருப்பதாக பட்டதும் எரிச்சல் வந்தது ராஜாவுக்கு. ஜென்னிக்கும், "இந்த நேரத்தில ஏன் எழுப்பித் தொல்லை தருகிறீங்க? உங்க வீட்டிலேயே படுக்க வைச்சு காலையிலே துரத்தி விடறதுக்கென்ன? இடியட்ஸ்"

"அதிலே பாருங்கம்மா; சில நிமிஷம் நேரம் தந்தால் விளக்கமாகச் சொல்ல முடியும்."

"இதுவே தொல்லை. இன்னும் ராமாயணம் பாரதம் வேற கேட்கணுமா? கெட் `அவுட் மேன்."

"என்னம்மா இது? பொண்ணை இந்த நிலையிலே பார்த்து கொஞ்சம் கூட பயப்படற மாதிரி காணோமே. உங்கள் மகள்தானே?"

"அதானே பாஸ். கொஞ்சம் கூட நன்றியில்லாம என்ன இது?"

"இதபார் பெண்ணே! தூக்க மாத்திரை தின்னு படுத்தவளை பாதியிலே எழுப்பி ஏன் உயிரை வாங்கறீங்க? நன்றி தானே? காலையிலே வாங்க. வண்டி வண்டியாக சொல்றேன். இல்லே போன் நம்பரைக் கொடுத்துட்டுப் போங்க. போனிலேயே சொல்றேன்."

"அதுதானே! அவங்க தாங்க்ஸ் வாங்கறதுக்காக நாம மறுபடியும் வரணுமா பாஸ்! பேசாம ஒரு விஸிடிங் கார்டை கொடுங்க."

கொடுத்துவிட்டான்– அதனால் விளையப் போகும் பின்விளைவுகள்– பயங்கரங்களை உணராமல் அவன் செய்த தப்பு அது.

காரில் திரும்பும்போது ஜென்னி சொன்னாள், "பேசாம தெருவிலயே இழுத்துப் போட்டுட்டு போயிருக்கணும் பாஸ்! கொண்டு வந்து விட்டோமே அதுதான் நாம செய்த தப்பு."

"அதானே. பாரேன். எவ்வளவு பெரிய விபரீதத்திலேர்ந்து அவங்க மகளைக் காப்பாற்றியிருக்கோம்."

"உண்மைதான் மிஸ்டர் ராஜா! அவள் என் வீட்டிலையிருந்த நிலைக்கு நானே அவளை கண்டபடி கற்பழிச்சிருக்கலாம். அப்படியில்லாம முழுசாக கொண்டு வந்து விட்டதற்கு கொஞ்சமாவது நன்றி இருக்கா பாருங்களேன்."

"நன்றியை விடு அரசா! கொஞ்சமாவது நாகரிகமாய் பேசியிருக்கலாம். கழுத்தைப் பிடிச்சு வெளியே தள்ளாத குறையாக அனுப்பறதுன்னா இதென்ன கொடுமை?"

"அதானே கேட்க ஆளில்லாம போச்சு போலிருக்கு."

"சரி. விடு. மரியாதை எல்லாம் கேட்டு வாங்கற சங்கதி இல்லே. அது தானாக வரணும். இப்ப என்ன? வீட்டுக்கு கொண்டு விடவா? இல்லே எங்க பங்களாவுக்கே வருகிறாயா?"

"வேணாம். என்னை வீட்டிலேயே விட்டுடுங்க. கதவு திறந்தேதான் இருக்கும். போய் சாத்திக்கணும். இல்லேன்னா ஹவுஸ் ஓனர் கத்துவார்."

"ஆனாலும் ரொம்பத்தான் பயப்படற." ஜென்னி கேட்டாள். "தெரியாமதான் கேட்கிறேன்; அவர் என்ன ஹவுஸ் ஓனரா? இல்லே உங்க மாமனாரா?"

அவனை வீட்டில் இறக்கி விட்டு தங்கள் வீட்டுக்கு போய் சேர்ந்தபோது மணி ஐந்தடிக்கத் தயாராக இருந்தது.

காலை மணி ஆறடிக்கும் போது–

கிணு கிணுவென்ற ஓசைக்கு– கண்களைத் திறக்காமல் கையைத் துழாவி அலாரம் கடிகாரத்தின் தலையில் ஒன்று வைத்தான் ராஜா.

கிணு கிணு கிணு–

"இந்த பால்காரன் வேற நேரம் காலம்புரியாம" என்று எழுந்து போய் கதவைத்திறந்தவன் யாருமில்லாதிருக்கவே திரும்பும்போதுதான் புரிந்தது.

போன் ஒலிக்கிற ஓசை அது. ஜலதோஷக் குரலில் கிணுகிணுத்தது.

"ஜென்னி! போன் ஒலிக்கிறது. எழுந்து பாரேன்," என்று புலம்பிப் பார்த்து, அவள் அசைய மறுக்கவே–

அவனே எடுத்தான். "ஹலோ ராஜா ஸ்பீக்கிங்."

"ராத்திரி வந்தது நீங்க தானே?" என்ற பெண் குரலுக்கு கோபம் வர–

"யாரும்மா அது? நானா? ராத்திரியா? வந்தேனா? நான் ஏகபத்தினி விரதன், ஜென்னியைத் தவிர வேறு யாரையும்–"

"ஹலோ நான் சரஸ்வதியம்மா பேசறேன். ராத்திரி நீங்கதானே என் பொண்ணைக் கூட்டிட்டு வந்து வீட்டில விட்டுட்டுப் போனிங்க?"

"ஓ! புரியுது! நன்றி சொல்ல போன் பண்ணப் போகிறதாகச் சொன்னீங்க இல்லே. அதுக்கு இவ்வளவு சீக்கிரமாகவா எழுப்பணும்? அடிமுட்டாள்தனம். சொல்ற நன்றியை எட்டு மணிக்கு மேலே சொல்ல முடியாதா? கூடாதா?"

"நான் நன்றி சொல்றதுக்காக கூப்பிடல்ல."

என் பெண்ணைக் கூட்டிட்டு வரப்போ அவள் கைப்பையை–"

"கூடவே கொண்டு வந்துட்டோமே. குட்டை மேஜையைப் பாருங்க."

"அது இருக்கு. ஆனால் அதுக்குள்ளே இருந்த வைர நெக்லஸைக் காணல."







"என்னது?"

"வைர நெக்லஸ். அதை ஒழுங்கா திருப்பி தருகிறீங்களா? இல்லே போலீஸில புகார் சொல்லவா?"

கோபம் வந்தது ராஜாவுக்கு.

(தொடர்ந்து வரும்)


## பேனா நண்பர் அரங்கம்

பெயர்: பி. கோபி.
வயது: 22
முகவரி: 34, த அல்விஸ் இடம், தெஹிவளை.
பொழுது போக்கு: பேனா நட்பு, ரீ.வி.

பெயர்: ஏ. கமலேஸ்வரி.
வயது: 19
முகவரி: தங்கநகர், கிளிவெட்டி.
பொழுதுபோக்கு: புத்தகம் படித்தல்.

பெயர்: எஸ். ராஜன்.
வயது: 26
முகவரி: P.O.BOX 25809, SAFAT-13119, KUWAIT.
பொழுது போக்கு: பத்திரிகை, ரீ.வி.

பெயர்: எம். றிஸ்வான்.
வயது: 22
முகவரி: 9, ஒச்சாட் வத்தை, ஹொரகொல்ல, நிட்டம்புவ.
பொழுது போக்கு: பத்திரிகை, நண்பர்தொடர்பு.

பெயர்: எம். பளீல்.
வயது: 24
முகவரி: கல்பிட்டி வீதி, ஆண்டாங்கனி, ஏத்தலை.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: முகமட் பைசர்.
வயது: 25
முகவரி: P.O.BOX - 173, RIYADH- 11411, K.S.A.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: நாஸீர் அகமட்.
வயது: 15
முகவரி: மாணவர் விடுதி, நத்தியகல்லூரி, கெலிஓயகல்லை, குருநாகல்.
பொழுது போக்கு: பத்திகை, கதைப்புத்தகம்.

பெயர்: எம்.நாபிர்
வயது: 40
முகவரி: 43,கும்புக்கந்துறை, தெல்தெனிய, கண்டி.
பொழுது போக்கு: ரீ.வி. பத்திகை.

பெயர்: கே.வசந்த்
வயது: 30
முகவரி: CENTRAL STR-8, 6003 LUZERN. SWITZERLAND.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: வி. இராஜேந்திரன்
வயது: 30
முகவரி: வன்னியார் வீதி, களுதாவளை-01 களுவாஞ்சிக்குடி.
பொழுது போக்கு: பத்திரிகை.

பெயர்: பி. கணேசன்
வயது: 21
முகவரி: 3, புதிய வீடமைப்புத்திட்டம், மாவலிக்கலத்தை கிராமம், ரோசல்ல.
பொழுது போக்கு: பத்திரிகை.

பெயர்: எம். பைசல்
வயது: 22
முகவரி: P.O.BOX-25032, AL-RIYADH-11466, K.S.A.
பொழுது போக்கு: பத்திரிகை




படிப்பகம்

**மக்சிம் கார்க்கி**

# தாய்



**தனது** இதயத்தை அழுத்திக் கொண்டிருக்கும் பெரும்பார உணர்ச்சியிலிருந்து விடுபடுவதற்கு முயன்றவாறே அவள் பெருமூச்செறிந்தாள்.

"கடவுளே! அருமை ஏசு நாதரே! நானும் கூடவா இப்படி இருப்பேன்....?"

அவர்கள் இடுகாட்டை அடைந்தார்கள். சமாதிகளுக்கு மத்தியில் செல்லும் ஒடுங்கிய நடைபாதைகளைச் சுற்றி வளைத்து நடந்து, கடைசியாக, சிறு வெள்ளை நிறச் சிலுவைகளாகக் காணப்படும் ஒரு பரந்த வெட்டவெளிக்கு வந்து சேர்ந்தார்கள். சவக்குழியைச் சுற்றி அவர்கள் மௌனமாகவே குழுமினார்கள். சமாதிகளுக்கு மத்தியிலே வந்து சேர்ந்த அந்த உயிருள்ள மனிதர்களின் ஆழ்ந்த மௌனம், வெகு பயங்கரமாகத் தோன்றியது. இந்தப் பயங்கரச் சூழ்நிலை தாயின் இதயத்தை நடுக்கியது. அந்தச் சிலுவைகளுக்கு ஊடாக காற்று ஊளையிட்டு, இரைந்து வீசிற்று; சவப் பெட்டியின் மீது கிடந்த கசங்கிய மலர்களை உலைத்தெறிந்தது.

பொலிஸ்காரர்கள் அணிவகுத்து நின்று தங்கள் தலைவனையே பார்த்தவாறு நின்றார்கள். கரிய புருவங்களும், நீளமான தலைமயிரும், நெடிய தோற்றமும் கொண்ட ஒரு வெளிறிய வாலிபன் சவக்குழியின் தலைமாட்டருகே போய் நின்றான். அதேசமயத்தில் அந்தப் போலீஸ் அதிகாரியின் முரட்டுக்குரல் சத்தமிட்டது.

"பெரியோர்களே..."

"தோழர்களே!" என்று அந்தக் கரிய உருவமுடைய இளைஞன் தெளிந்த உரத்த குரலில் பேசத் தொடங்கினான்.

"ஒரு நிமிஷம்" என்றான் அதிகாரி; "இங்கு நீங்கள் எந்த விதமான பிரசங்கமும் செய்ய நான் அனுமதிக்க முடியாது. எனவே உங்களை எச்சரிக்கிறேன்."

"நான் ஒரு சில வார்த்தைகள் மாத்திரம் கூறிமுடித்து விடுகிறேன்" என்று அந்த இளைஞன் அமைதியாகச் சொன்னான். பிறகு பேசத் தொடங்கினான்: "தோழர்களே! நம்முடைய நண்பனும் நல்லாசிரியனுமாக விளங்கிய இந்தத் தோழனின் சமாதியருகே நாம் ஒரு பிரதிக்ஞை செய்வோம். அவனது கொள்கைகளை நாம் என்றும் மறக்கமாட்டோம். நாம் அனைவரும், நம்மில் ஒவ்வொருவரும் நமது தாய்நாட்டின் சீர்கேட்டுக்கெல்லாம் மூலகாரணமான இந்தத் தீமையை, இந்த அடக்குமுறை ஆட்சியை, எதேச்சாதிகார ஆட்சியை சவக்குழி தோண்டிப் புதைப்பதற்கே நமது ஆயுட்காலம் முழுவதும் என்றென்றும் இடையறாது, போராடிப் பாடுபடுவோம்!"

"அவனைக் கைது செய்!" என்று அதிகாரி கத்தினான்; ஆனால் அவனது குரல் அப்போது எழுந்த கோஷப் பேரொலியில் முங்கி முழுகிவிட்டது:

"ஏதேச்சாதிகாரம் அடியோடு ஒழிக!"

பொலிஸ்காரர்கள் ஜனக்கூட்டத்தைப் பிளந்துகொண்டு அந்தப் பிரசங்கியை நோக்கிச் சென்றார்கள். அவனோ தன்னைச் சுற்றிச் சூழ்ந்து நெருங்கி நின்று தனக்குப் பாதுகாப்பளித்துக் கொண்டிருக்கும் ஜனக்கூட்டத்துக்கு மத்தியிலிருந்து கைகளை வீசியாட்டிக் கோஷமிட்டான்:

"சுதந்திரம் நீடூழி வாழ்க!"

தாய் ஒரு புறமாக நெருக்கித் தள்ளப்பட்டாள். அவள் பயத்தால் ஒரு சிலுவையின் மீது போய்ச் சாய்ந்து ஏதோ ஓர் அடியை எதிர்நோக்கி கண்களை மூடி நின்றாள். குழம்பிப்போன குரலோசை அவளது காதுகளைச் செவிடுபடச் செய்தது. பூமியே அவளது காலடியை விட்டகன்று செல்வதாக ஒரு பிரமை. பயத்தினால் அவளுக்கு மூச்செடுக்கவே முடியாமல் திக்குமுக்காடியது. பொலிஸ் விசிலின் சப்தம் ஆபத்தை அறிவித்து ஒலித்தது; முரட்டுக் குரல்கள் உத்தரவு போட்டன; பெண்களின் கூச்சல் பீதியடித்துக் கதறின; வேலிக் கம்பிகள் முறிந்து துண்டாயின; கனத்த புட்ஸ்காலடிகள் வறண்ட பூமியில் ஓங்கியறைந்து ஒலித்தன. இந்தக் களேபரம் அதிக நேரம் நீடித்தது; எனவே அவள் இந்தப் பயபீதியால் அஞ்சி நடுங்கிப்போய் கண்களை மூடியவாறே அதிக நேரம் நின்றுகொண்டிருக்க இயலவில்லை.

அவள் ஏறிட்டுப் பார்த்தாள்; கூச்சலிட்டுக் கொண்டும், தன் கைகளை முன்னே நீட்டிக் கொண்டும் பாய்ந்து ஓடினாள். கொஞ்ச தூரத்தில், சமாதிக் குழிகளுக்கு இடையே யுள்ள குறுகிய சந்தில், பொலிசார் அந்த நீண்ட கேசமுடைய இளைஞனைச் சுற்றி வளைத்துக்கொண்டு நின்றார்கள். அவனைக் காப்பாற்றுவதற்காக நாலா புறத்திலிருந்தும் சாடி முன்னேறி வரும் ஜனங்களை அடித்து விரட்டிக் கொண்டிருந்தார்கள். உருவிய வாள்கள் மனிதத் தலைகளுக்கு மேலாகப் பளபளத்து மின்னி, திடீரெனக் கூட்டத்தினர் மத்தியில் குதித்துப் பாய்ந்தன. ஒடிந்த வேலிக் கம்பிகளும், கம்புகளும் ஆயுதங்களாகப் பயன்படுத்தப்பட்டன. கூச்சலிடும் ஜனங்கள் வெளுத்த முகமுடைய அந்த இளைஞனைச் சுற்றிலும் வெறியாட்டம் ஆடிக்கொண்டு குமைந்து கூடினார்கள். இந்த வெறியுணர்ச்சிக் களேபரப் புயலுக்கு மத்தியில் அந்த இளைஞனது பலம் வாய்ந்த குரல் ஓங்கி ஒலித்தது:

"தோழர்களே! உங்கள் சக்தியை ஏன் விரயம் செய்கிறீர்கள்?"

அவனது வார்த்தைகள் தெளிவு தருவனவாக ஒலித்தன. ஜனங்கள் தங்கள் கைகளிலிருந்த கழிகளையும் கம்புகளையும் விட்டெறிந்துவிட்டு, ஒருவர் பின் ஒருவராக ஓட ஆரம்பித்தார்கள். ஆனால் தாயோ ஏதோ ஒரு தடுக்க முடியாத சக்தியால் தூண்டப்பெற்று முன்னோக்கி முண்டிச் சென்றுகொண்டிருந்தாள். பின்னால் சரிந்துபோன தொப்பியோடு நிகலாய் இவானவிச் அந்த வெறிகொண்ட ஜனக்கூட்டத்தை விலக்கித் தள்ளிக் கொண்டிருப்பதை அவள் கண்டாள்.

"உங்களுக்கு என்ன பைத்தியமா? அமைதியாயிருங்கள்!" என்று கத்தினான் அவன்.

அவனது ஒரு கை செக்கச் சிவந்து காணப்படுவதாகத் தாய்க்குத் தோன்றியது.

"நிகலாய் இவானவிச்! இங்கிருந்து போய்விடுங்கள்" என்று அவனை நோக்கி ஓடிக்கொண்டே கத்தினாள் தாய்.

"நீங்கள் எங்கே போகிறீர்கள்? அவர்கள் உங்களைத் தாக்குவார்கள்!"

அவளது தோள்மீது ஒரு கரம் விழுந்தது. திரும்பினாள்; அவளுக்கு அடுத்தாற்போல் தலையிலே தொப்பியற்றுக் கலைந்து போன தலைமயிரோடு சோபியா நின்றுகொண்டிருந்தாள்; அவள் ஒரு பையனைத் தன் கையில் பிடித்துக்கொண்டு நின்றாள். அந்தப் பையன் இன்னும் வாலிப வயதை எட்டிப் பிடிக்காத, பால்மணம் மாறாதவனாயிருந்தான். அவன் தன் முகத்திலுள்ள இரத்தத்தைத் துடைத்துக் கொண்டே, துடிதுடிக்கும் உதடுகளால் முணுமுணுத்துக் கொண்டிருந்தான்:

"என்னைப் போக விடுங்கள்..... எனக்கு ஒன்றுமில்லை..."

"இவனைப் பார்த்துக்கொள்ளுங்கள், நம் வீட்டுக்குக் கொண்டுபோங்கள். இதோ கைக்குட்டை; அவன் முகத்தில் ஒரு கட்டுப் போடுங்கள்" என்று படபடத்துக் கூறினாள் சோபியா. பிறகு அவள் அந்தப் பையனின் கையைத் தாயின் கையில் பிடித்து ஒப்படைத்து விட்டு ஓடினாள். ஓடும்போதே சொன்னாள்:

"சீக்கிரமாகப் போய்விடுங்கள். இல்லையென்றால் அவர்கள் உங்களைக் கைது செய்து விடுவார்கள்!"

இடுகாட்டின் நாலாபுறங்களிலும் ஜனங்கள் சிதறியடித்து ஓடினார்கள்; பொலிஸ்காரர்கள் சமாதி மேடுகளின் மேலெல்லாம் ஏறிக் குதித்து ஓடினார்கள். அவர்களது நீண்ட சாம்பல் நிறச்சட்டைகள் முழங்கால் வரையிலும் தொங்கி, முட்டிக்கால்களைத் தட்டின; அவர்கள் தங்கள் வாள்களைச் சுழற்றிக் கொண்டும், வாய்க்கு வந்தபடி சத்தமிட்டுக் கொண்டும் தாவித் தாவிப் பின் தொடர்ந்தார்கள். அந்தப் பையன் அவர்களை உர்ரென்று முறைத்துப் பார்த்தான்.

"சீக்கிரம், சீக்கிரம், புறப்படு" என்று அவனது முகத்தைக் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டே கத்தினாள் தாய்.

"என்னைப்பற்றிக் கவலைப்படாதே- இது ஒன்றும் வலிக்கவில்லை" என்று முணுமுணுத்துக்கொண்டே அவன் வாயிலிருந்த இரத்தத்தைக் கக்கினான். "அவன் வாளின் கைப்பிடியால் என்னை ஓர் அடி கொடுத்தான். ஆனால் பதிலுக்கு என்னிடம் அவனும் வாங்கிக் கட்டிக்கொண்டான். நான் ஒரு கழியினால் அவனை ஒரு விளாசு விளாசினேன்; பயல் கதறி ஊளையிட்டான். நீங்கள் கொஞ்சம் பொறுங்கள்" என்று அவன் தனது இரத்தம் தோய்ந்த முஷ்டியை உலுக்கியாட்டிக் கொண்டே கத்தினான். "வரப்போகிற சண்டையை நினைத்துப் பார்த்தால், இது என்ன பிரமாதம்? நாங்கள்- தொழிலாளர்களாகிய நாங்கள்-அனைவரும் கிளர்ந்தெழும்போது, உங்களையெல்லாம் சண்டை போடாமலே துடைத்துத் தூர்த்து விடுகிறோம்!"

"புறப்படு சீக்கிரம்!" என்று அவனை அவசரப்படுத்திக் கொண்டே, இடுகாட்டின் வேலிப்புறமாகவுள்ள சிறுவாசலை நோக்கி நடந்தாள் தாய். வெளியேயுள்ள பரந்த வயல் வெளியில் பொலிஸ்காரர்கள் பதுங்கிக் காத்திருந்து, ஜனங்கள் இடுகாட்டை விட்டு வெளியே வந்ததும், பாய்ந்து தாக்குவதற்குத் தயாராக இருப்பார்கள் என்று அவளுக்குத் தோன்றியது. ஆனால், அவள் அந்த வாசலுக்கு வந்ததும், ரொம்பவும் ஜாக்கிரதையோடு இலையுதிர் காலத்தின் இருள் போர்வை போர்த்திருந்த வெளியைப் பார்த்தாள். அங்கு யாரையும் காணோம்; மௌனமே நிலவியது. அவளுக்குத் தைரியம் வந்தது.

"சரி, இப்படி வா. முகத்தில் ஒரு கட்டுப்போடுகிறேன்" என்று சொன்னாள் தாய்.

"அதைப்பற்றிக் கவலைப்படாதீர்கள்- இதைக் கண்டு நான் ஒன்றும் வெட்கப்படவில்லை" என்றான் அவன். "இது ஒரு சரியான நேர்மையான சண்டை. அவன் என்னை அடித்தான்; பதிலுக்கு நானும் அவனை அடித்துவிட்டேன்!"

ஆனால் தாய் விறுவிறென்று அவனது முகத்திலிருந்த காயத்துக்குக் கட்டுப் போட்டாள். இரத்தத்தைக் கண்ணால் கண்டதும் அவள் மனத்தில் ஓர் அனுதாப உணர்ச்சி ஏற்பட்டது. அவளது கைவிரல்கள் வெதுவெதுப்பான அந்தச் செங்குருதியின் பிசுபிசுப்பை உணர்ந்தபோது, அவளது உடம்பெல்லாம் ஒரு குளிர்நடுக்கம் பரவிச் சிலிர்த்தோடியது. அவசர அவசரமாக, வாயே பேசாமல் அவள் அந்தச் சிறுவனை வயல் வெளியின் குறுக்காக இழுத்துக் கொண்டு ஓடினாள்.

"தோழரே, என்னை எங்கே கொண்டு போகிறீர்கள்?" என்று தன் வாயின் மீது போட்டிருந்த கட்டை அவிழ்த்துக் கொண்டே கிண்டலாகக் கேட்டான் அவன். "உங்கள் உதவியில்லாமலே, நான் போய்விடுவேனே." ஆனால் அவனது கரங்கள் நடுநடுங்குவதையும், கால்கள் பலமிழந்து தடுமாறுவதையும் அவள் கண்டாள். பலமற்ற மெல்லிய குரலில் அவன் பேசிக்கொண்டும் கேள்விகள் கேட்டுக் கொண்டும் விரைவாக வந்தான்; தான் கேட்கும் கேள்விகளின் பதிலுக்காகக் கூட அவன் காத்திராமல் பேசினான்:

"நீங்கள் யார்? நான் ஒரு தகரத் தொழிலாளி. என்பேர் இவான். இகோர் இவானவிச்சின் கல்விக்குழாத்தில் நாங்கள் மூன்றுபேர் இருந்தோம். மூன்று பேரும் தகரத் தொழிலாளிகள்; ஆனால் நாங்கள் மொத்தத்தில் பதினொருபேர். எங்களுக்கு அவர்மீது ஒரே பிரியம். அவரது ஆத்மா சாந்தியடையட்டும்-எனக்குக் கடவுள் நம்பிக்கை இல்லாவிட்டாலும் கூட..."

ஒரு தெருவுக்கு வந்ததும் தாய் ஒரு வண்டியை வாடகைக்கு அமர்த்தினாள். இவானை அதில் ஏற்றி உட்காரவைத்தவுடன் அவள்: "இனிமேல் ஒன்றும் பேசாதே" என்று மெதுவாகச் சொல்லிவிட்டு மீண்டும் அந்தக் கைக்குட்டையால் அவனது வாயில் ஒரு கட்டுப் போட்டாள்.

அவன் தன் கையைத் தன் முகத்துக்குக் கொண்டு போனான். அந்தக் கட்டை அலைத்து அவிழ்க்கச் சக்தியற்று மீண்டும் தன் கையை மடிமீது நழுவ விட்டான். இருந்தாலும் அந்தக் கட்டோடேயே அவன் முணுமுணுத்துப் பேசத் தொடங்கினான்:

"அருமைப் பயல்களா, இதை மட்டும் நான் மறந்து விடுவேன் என்று நினைக்காதீர்கள்... முன்னால் தித்தோவிச் என்ற ஒரு மாணவர் எங்களுக்கு வகுப்பு நடத்தினார்... அரசியல் பொருளாதாரத்தைப் பற்றிப் பாடம் சொன்னார்... பிறகு அவர்கள் அவரையும் கைது செய்து விட்டார்கள்..."

தாய் இவானைச் சுற்றித் தன் கரத்தைப் போட்டு, அவனது தலையை இழுத்து மார்போடு அணைத்துக் கொண்டாள். திடீரென அந்தப் பையன் கிறங்கி விழுந்து மௌனமாகிக் கிடந்தான். பயபீதியால் செய்வது இன்னதென்று அறியாமல் திகைத்தாள் தாய். ஒவ்வொரு பக்கத்திலும் பார்த்துக் கொண்டாள், எங்கோ ஒரு மூலையிலிருந்து கிளம்பி, பொலிஸ்காரர்கள் தன்னைப்பின் தொடர்ந்து வருவதாக அவளுக்குத் தோன்றியது. அவர்கள் ஓடோடியும் வந்து, இவானின் கட்டுப்போட்ட தலையைப் பிடித்து இழுத்துப்போட்டு அவனைக் கொல்லப்போவதாகத் தோன்றியது.

"குடித்திருக்கிறானா?" என்று வண்டிக்காரன் தன் இடத்தை விட்டுத் திரும்பி புன்னகை செய்து கொண்டே கேட்டான்.

"ரொம்ப ரொம்பக் குடித்துவிட்டான்!" என்று பெருமூச்சோடு சொன்னாள் தாய்.

"இது யார் உங்கள் மகனா?"

"ஆமாம். ஒரு செருப்புத் தொழிலாளி. நான் ஒரு சமையற்காரி."

"கஷ்டமான வாழ்க்கைதான், இல்லையா?"

அவன் தன் சாட்டையை ஒரு சுண்டுச் சுண்டி வாங்கினான். மீண்டும் அந்த வண்டிக்காரன் திரும்பவும் பேசினான்:

"கொஞ்ச நேரத்துக்கு முன்னால் இடுகாட்டில் நடந்த கலவரத்தைப் பற்றிக் கேள்விப்பட்டீர்களா? அவர்கள் யாரோ ஓர் அரசியல்வாதியை, அதிகாரிகளுக்கு எதிராக வேலை செய்த ஓர் அரசியல்வாதியைப் புதைக்கச் சென்றார்கள் போலிருக்கிறது. அங்கு அவர்களுக்கும் அதிகாரிகளுக்கும் சண்டை. அந்த அரசியல்வாதியைச் சேர்ந்த நண்பர்கள் தாம் அவனைப் புதைக்கப் போனார்களாம். அப்படித்தான் சொல்லிக் கொள்கிறார்கள். 'மக்களை ஏழைகளாக்கும் அதிகாரிகள் ஒழிக' என்று அவர்கள் கத்தினார்களாம். உடனே பொலிஸார் வந்து, அவர்களை அடிக்கத் தொடங்கினார்களாம்.

(தொடர்ந்து வரும்)

> ❝ தோழர்களே! நம்முடைய நண்பனும் நல்லாசிரியனுமாக விளங்கிய இந்தத் தோழனின் சமாதியருகே நாம் ஒரு பிரதிக்ஞை செய்வோம். அவனது கொள்கைகளை நாம் என்றும் மறக்கமாட்டோம். நாம் அனைவரும் • நம்மில் ஒவ்வொருவரும் நமது தாய் நாட்டின் சீர்கேட்டுக் கெல்லாம் மூலகாரணமான இந்தத் தீமையை • இந்த அடக்குமுறை ஆட்சியை • எதேச்சாதிகார ஆட்சியை சவக்குழி தோண்டிப் புதைப்பதற்கே நமது ஆயுட்காலம் முழுவதும் என்றென்றும் இடையறாது • போராடிப் பாடுபடுவோம்! ❞

**67**

# இளமை

**மதுரா**



**அ**ந்தக் கல்லூரியின் மரங்கள், மலரைத் தூவி அவனை வரவேற்பதைப் போலிருந்தது. வராண்டாவில் தன் குதிஉயர் செருப்புத் தாளம், சங்கீதக் கச்சேரிக்கு நட்டுவாங்கம் போல் ஒலிக்க ஒரு அரபி குதிரையின் அழகுடன் நடந்து சென்றாள்.

பின்னாலிருந்து ஒரு குரல் அந்த கச்சேரியை தடைசெய்தது. "ப்ரீதி நில்லு."

நின்று திரும்பினாள். கூப்பிட்டவன் ஒரு கணம் தடுமாறினான். அவளின் கண்களில் இருந்த ஏதோ ஒன்று அவனை அப்படிச் செய்திருக்க வேண்டும்.

"என்ன?" என்றாள்.

"நான் கேட்டதற்கு பதில் என்ன? சொல்ல மாட்டாயா?"

"ராஜா நான் பதிலை என்றோ கூறி விட்டேன். இதெல்லாம் நடக்காத ஒன்று. நீ நிறைய சினிமா பார்க்கிறாய் என நினைக்கிறேன்."

"ஏன் நடக்காது? உன் வீட்டில் ஒப்புக்கொள்ள மாட்டார்கள் என்று பயப்படுகிறாயா?"

"இல்லை, என் வீட்டில் எனக்கு முழு சுதந்திரம் உண்டு."

"பின் ஏன் தயக்கம்?" என்று கேட்டான்.

"ராஜா, இந்த வயதில் உனக்கு எந்தப் பெண்ணை பார்த்தாலும், அப்படித்தான் தோன்றும். யாராவது உன்னை மதித்து ஒரு வார்த்தை பேசினாலே அது காதல் தான்னு தோணும்."

"இல்லை, அப்படி இல்லை, எனக்குப் புரிகிறது. இது காதல்தான்."

'கலகல' வென சங்கீத சலங்கையாய்ச் சிரித்தாள் ப்ரீதி.

"போனவாரம் ஃபெஸ்ட் இயர் படிக்கும் காயத்ரிக்கு கொடுத்த கிப்ட், என்ன சகோதரா பாசத்திற்கு அடையாளமா?"

> "இந்த வயதில் உனக்கு எந்தப் பெண்ணைப் பார்த்தாலும் அப்படித்தான் தோன்றும்"

"அது... அது... நான் தவறு செய்து விட்டேன். உண்மையில் அது தான் நீ சொல்லும் அடலசன்ஸ் புரொப்ளம்!"

"இதே.. இதே தான் நீ நாளையும் உணரப்போகிறாய். அவள் உன்னை 'இன்சல்ட்' செய்ததும், அவள் மீது இருந்த 'இன்வோல்வ்மெண்ட்' குறைந்துவிட்டது. இதே போல் தான் நானும். ஆனால், நான் உன்னை 'இன்சல்ட்' செய்யப்போவது இல்லை. ஏனெனில், ஒரு நல்ல நண்பனின் திறமைகள் என்னால் வீணடிக்கப்படுவதை நான் விரும்பவில்லை."

"ப்ரீதி. நீ ஏன் புரிந்துகொள்ள மறுக்கிறாய்? நீ இல்லை என்றால் என்னால் உயிர் வாழவே முடியாது."

"அப்படியா! எங்கே உன் உயிரை விடு பார்க்கலாம்," நிதானமாக, புன்னகை தவழ கூறினாள் ப்ரீதி.

"ராஜா! பிராக்டிக்கலா யோசித்துப் பார்! உன் பெற்றோர் உன்னைப் பற்றி எத்தனை கனவுகளை தங்கள் மனதில் தேக்கி வைத்திருப்பார்கள். உனக்கு உயிரையும், உணர்வையும் கொடுத்தவர்கள் அவர்கள். அவர்களுக்கு பயன்படாமல் உன் உயிரை விடுகிறேன் என ஏன் உளறுகிறாய்?"

ஏதோ புரிந்தவனாய் ராஜா மலைத்து நிற்கிறான். அவள் குரல் எங்கோ ஒலிப்பதைப் போன்ற தொனியில் "இத்தனை தத்துவார்த்தமாக பேசுகிறாயே நீ மட்டும் 'அடலசன்ஸ் ஸ்டேஜில்' இல்லயா? உனக்கு எப்பவுமே இப்படி தோன்றியது இல்லயா?"

இதமான புன்னகையுடன், "நான் வளர்ந்த சூழல் என்னை பக்குவப்படுத்தியுள்ளது. எங்கள் வீட்டில் என் நியாயமான வாதங்கள் மதிப்புப்பெறும். ஏன், நான் யாரையாவது காதலித்தால் கூட அதை ஏற்றுக்கொள்வார்கள். என் மீது நம்பிக்கை அதிகம்." - என்றாள்.

"என் பேரன்ற்ஸ், என் சிந்தனையை வளர்த்தனர்."

"ஆனால், நீ இளமை என்றால் 'லவ்' தான் என்னும் மயக்கத்தில் இருக்கிறாய். இன்று நான் இல்லையெனில் வேறு ஒரு சீமாவின் பின் போவாய். நம் உணர்வினை நாம் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டாமா?"

"நான் கேட்கிறேன். உன் எண்ணத்தில் இளமை என்றாலே 'லவ்' தானா? இளமை என்பது நம் முதுமையில் எண்ணி இறுமாப்பெய்துவதாய் அமைய வேண்டும். நம்மை எதிர் கால சமூகத் தூண்கள் என்கிறார்களே. நாம் அதற்கு அருகதையாக வேண்டாமா?"

"நம் திறமைகள் இந்நாட்டிற்கு, வீட்டிற்கு அவசியம். உன் சிந்தனையை வேறு ஒரு நல்ல காரியத்திற்கு செலவிட்டுப்பார். உலகம் போற்றும் நிலையை அடைவாய்.

"ஒரு ஃபிரண்ட் என்ற முறையில் தான் உனக்கு இப்படி 'அட்வைஸ்' செய்கிறேன். தப்பாக நினைத்துக் கொள்ளாதே. புரிந்துகொள்வாய் என நினைக்கிறேன். பிறகு சந்திப்போம் என்று கூறிவிட்டு அங்கிருந்து நகர்ந்தாள்." ●



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

சி று க தை

## “கௌதமின் நெற்றிப்பொட்டில் நரம்புகள் புடைத்துக்கொண்டு விண்ணென்று தெறித்தன.”

# துரோகம்

கௌதம், அலுப்புடன் சோபாவில் விழுந்தான்! மேஜை இழுப்பறையைத் திறந்து 'டன்ஹில்' எடுத்துப் பற்ற வைத்தான். புகையை ஆழமாக உள்ளுக் கிழுத்து உதடுகுவித்து வளையம் வளையமாய் மின்விசிறியை நோக்கி வெளியேற்றினான்.

“இதுதான்...! டேனி,- என்னைக் கொல்லாமல் கொல்லும் பிரச்சனை இது தான்..?”

டேனி, தன் அம்மைத் தழும்பு முகத்தை வெளி உலகிற்குக் காட்டவிரும்பாமல், அதை அடர்ந்த தாடிக்குள் ஒளித்திருந்தான். அந்த இரவு நேரத்தில், தனி அறையின் மங்கலான விளக்கொளியில் உட்கார்ந்திருக்க நேர்ந்ததும், கறுப்புக் கண்ணாடியை முகத்தோடு விட்டு வைத்திருந்தான்.

“அவகிட்ட பல ஆதாரங்கள் இருக்கு! ஹோலிடே இன்னில் நாங்க ரூமெடுத்துத் தங்கியதை அவளால் நிரூபிக்க முடியும். மேலும், காதலின் ஆரம்பவேகத்தில் நான் கைப்பட எழுதிய கடிதங்கள்-இருவரும் எடுத்துக் கொண்ட புகைப்படங்கள்-எல்லாவற்றிற்கும் மேலாக, அவளுக்கு 'அபோர்ஷன்' நடந்த கிளினிக்கில், நான் அவளுடைய கணவன் என்று கைப்பட எழுதித்தந்த ஒப்புதல் வாக்குமூலம்!...”

“இவ்வளவும் செட்-அப் என்று, திறமையான ஒரு சட்டத்தரணியைக் கொண்டு கோர்ட்டில் உன்னால் நிரூபிக்க முடியும். உன் காசை விட்டெறிந்தால், முன்னணி சட்டத்தரணிகள்' வரிசையில் வந்து நிற்பார்களே..! அதை விட்டுட்டு, ஏன் கொலை அது இதுன்னு...?”

டேனி முதல் தடவையாகப் பேசினான்.

“புரியாமப் பேசறே, டேனி! என் அப்பாவோட உயில்படி, என் திருமணம் முடியும் வரை, என் நடத்தையின் பேரில் எந்தவிதக் களங்கமும் வரக்கூடாது. அப்பத்தான் சொத்து முழுவதும் எனக்கு வந்து சேரும். அதை மீறி-கோர்ட், கேஸ், விளம்பரம் என்று எங்ககுடும்பப் பெயர் அடிபட்டால், எல்லாச் சொத்தும் அநாதை ஆசிரமங்களுக்கும், ஆராய்ச்சி மையங்களுக்கும் போய்ச் சேர்ந்துவிடும்!”

“ஐஸி!....”- டேனி தன் கையிலிருந்த தோல் பையைத் திறந்து, கறுப்புக் கண்ணாடியை உள்ளேவைத்தான். சில விநாடிகள் துழாவலுக்குப்பின் 'சூயிங்கம்' ஒன்றை வெளியில் எடுத்தான்.

“கண்ணைத் திறந்து கொண்டு கிணற்றில் விழுந்து இருக்கிறாய்.. இல்லையா கௌதம்?” சூயிங்கம் மென்றபடி வினவினான் டேனி.



— ரஞ்சனா —

“பாஸ்ட் இஸ் பாஸ்ட்! என்னையே பிளாக்மெயில் பண்ணத்துணிஞ்ச உஷா இனி உயிரோடு இருக்கக் கூடாது!..”

இரண்டு நூறு ரூபாய்க் கட்டுக்களை மேஜை மீது வைத்து டேனியின் பக்கம் தள்ளிய கௌதம், எழுந்து நின்றான்.

“இது அட்வான்ஸ்! உஷாவோட மரணச் செய்தி கிடைக்கிற அந்த நிமிஷமே, மீதி முப்பதாயிரத்தை உன் வங்கிக் கணக்கில் சேர்த்துடறேன். இது அவளோட புகைப் படம்! பின்பக்கத்துல அட்ரசும்.... ஃபோன் நம்பரும் இருக்கு...”

♣♣♣

கௌதம் சந்தோஷமாய் உணர்ந்தான். லாவண்யா, எதிர்பார்த்ததைவிட அழகாகவே இருந்தாள். அவள் அங்கங்களைப் போலவே, அவள் தந்தையின் சொத்து நிலவரங்களும் திருப்திகரமாகவே இருந்தன.

அவனுக்கென்றிருந்த ஒரே சொந்தம் - மாமா சிவராம்தான். இந்த பெண் பார்க்கும் படலத்திற்காக வேண்டி, அவரை காரில் அழைத்து வந்திருந்தான்.

அவரும் கூடிய மட்டும் தங்கள் குலப் பெருமையைப் பேசி, பெண் வீட்டாரை மயக்கிவிட்டிருந்தார்.

அடுத்த முகூர்த்தத்திலேயே திருமணம் நிச்சயிக்கப்பட்டு, அப்பொழுதே வரதட்சணையும், ரொக்கமும் நிர்ணயிக்கப்பட்டாயிற்று.

மிகுந்த பூரிப்புடன் கௌதம் தன் பங்களாவிற்குத் திரும்பினான்.

○○○

“தம்பி!... ஒரு ஆளு இதை உங்ககிட்ட கொடுத்திடச் சொன்னார்..”

சாப்பிட்டு எழுந்த கௌதமிடம் சமையல்காரன் ஒரு கனமான கவரை நீட்டினான்.

'யாராக இருக்கும்...?' கேள்விக் குறியுடன் தன் படுக்கை அறைக்குள் நுழைந்தான். கவரை உடைக்க உள்ளே ஒரு கடிதமும், புத்தம் புது-ஆடியோ கஸட்டும் அவனைப் பார்த்துச் சிரித்தன.

ஓ...டேனி!

கௌதம் எரிச்சலுடன் கடிதத்தைப் பிரித்தான்.

“உன் மாஜி காதலி உஷாவை பல துண்டுகளாகச் சிதைத்து மூட்டை கட்டி வைத்திருக்கிறேன். ஒரு சின்ன வேண்டுகோள்: நீ முன்னால் சொன்னபடி, மீதிப் பணத்தை என் கணக்கில சேர்க்க வேண்டாம்...!”

'என்னவாயிற்று இவனுக்கு...?' படித்துக் கொண்டு இருந்ததை பாதியில் நிறுத்தி வியந்தான் கௌதம். அடுத்த விநாடியே அலட்சியமாய்த் தோள்களைக் குலுக்கிவிட்டுக் கடிதத்தைத் தொடர்ந்தான்.

“...அதற்கு பதில், பத்து லட்சம் ரூபாய் மதிப்பிற்கு நான் சொல்லும் ஷேர் சேர்டிபிகேட்களை வாங்கி, என் குடும்ப சட்டத்தரணியிடம் சேர்த்துவிடு. இருபத்திநாலு மணி நேரத்துக்குள் இதை நீ செய்யத் தவறினால், உஷாவின் அழுகிய பிணத்துண்டுகளுடன், நான் பொலிஸில் சரணடைந்து விடுவேன். என் சட்டத்தரணியின் முகவரி...”

கௌதமின் நெற்றிப் பொட்டில் நரம்புகள் புடைத்துக் கொண்டு, விண்ணென்று தெறித்தன.

“லோ லைஃப் பாஸ்டர்ட்!” அவனை அறியாமல் வாய் முணுமுணுத்தது. அவன் பார்வை மீண்டும் கடிதத்தில் பதிந்தது.

“...என் கோரிக்கை நிறைவேறாமல் போனால், உன் கதி என்னவாகும் என்பதை, அந்த காஸட் உனக்குத் தெளிவுபடுத்தும்!”

பின் குறிப்பு: 'எப்பொழுதும் என் சந்திப்புகளை டேப்ரிக்கார்டர் சகிதம்தான் வைத்துக் கொள்வேன்-ஒரு முன் எச்சரிக்கையாக....!'

கௌதம் வெறுப்புடன் அந்த காஸட்டை தன் டேப்ரிகார்டரில் சுழலவிட்டான். டேனியுடன் நேற்று அவன் நடத்திய உரையாடல் ஆதிமுதல் அந்தம்வரை அதில் சுத்தமாகப் பதிவாகியிருந்தது!- அதுவரை தொற்றிக் கொண்டிருந்த சந்தோஷம் காணாமல் போக.... கௌதம் பயங்கரமான அதிர்ச்சியோடு சோபாவில் விழுந்தான்!

# அம்மாவை மீறி....!

“ஏங்க! நேற்று நம்ம பொண்ணைப் பாத்திட்டுப் போனாங்களே, அந்த மாப்பிள்ளை வந்திட்டுப் போனார்! பொண்ணை அவருக்கு ரொம்பவும் பிடிச்சிருக்காம்! ஆனா.... அவரோட அம்மாவுக்கு அஞ்சு பவுன் குறைஞ்சதிலே கொஞ்சமும் இஷ்டமில்லையாம். அதனால நீங்க விரும்புற எந்த நாள்லயும் தாலி கட்டத் தயார்னு சொல்லிட்டுப் போறார்! நம்ம பொண்ணுக்கு அதிஷ்டம் தேடி வருது பார்த்தீங்களா?”

“அந்த சம்மந்தம் நமக்கு வேண்டாம் பரிமளம்!” மணியத்தாரின் பதிலால் அதிர்ந்தாள்.

“ஏங்க?”

“அஞ்சு பவுன் குறைச்சுப் போட்டு அனுப்புறதால மாமியாருக்கு நம்ம பொண்ணை என்றைக்குமே பிடிக்கப் போறதில்லை! ஒரு வேளை மாப்பிள்ளை தனிக் குடித்தனம் வைச்சாலும் அங்கே நம்ம



எஸ். கோவர்த்தன்

பெண் சுகப்படப்போறதில்லை.

காரணம் தன்னோட அம்மாவை சமாதானப்படுத்தாம, அவர்களை மீறி கல்யாணம் பண்ற மாப்பிள்ளை, புதுப்பாசம் தீர்ந்தப்புறம் தன் மனைவியைச் சந்தோஷமா வச்சுக்க மாட்டான்.”

கணவனின் வார்த்தைகளின் உண்மையை உணர்ந்தவளாய் நிதானத்திற்கு வந்து கொண்டிருந்தாள் பரிமளம்.

# அழகு

“முடியாது முடியாது” இரண்டு காதுகளையும் பொத்திக் கொண்டு உரக்கக் கத்தினாள் உஷா.

“நீ என்னடி சொல்றே?” அம்மா ஆத்திரத்தோடு கேட்டாள்.

“எனக்கு இந்தக் கலியாணம் பிடிக்கல”...

“பிடிக்கலியா?”...

“ஆமா பிடிக்கல, பிடிக்கல”...

மாடியில் இருந்து இறங்கி வந்த சபேசன் “உஷா அங்கே என்ன கலாட்டா?” என்றார்.

அம்மா முந்திக் கொண்டாள். “உங்க மகளுக்கு இந்தக் கலியாணம் பிடிக்கலியாம்”.

“ஏனாம்?”

“கறுப்பைக் கட்டிக்க யாருக்கப்பா



ரூபராணி

பிடிக்கும்?” துணிச்சலோடு கேட்டுவிட்டாள் உஷா.

சபேசனின் மீசை துடித்தது. ஓங்கியகையைக் கட்டுப்படுத்திக்கொண்டார். “இவளோட என்ன பேச்சு? யாரென்ன சொன்னாலும், இந்தக் கலியாணம் நடந்தேதீரும்” உறுதியாகச் சொன்ன சபேசன், வாசல் கதவைப் 'படீர்' என்று சாத்திவிட்டுப்புறப்பட்டுப் போனார்.

உஷா அறையில் தனியாக உட்கார்ந்து தன் வாழ்க்கையே நாசமாகி விட்டதுபோல் அழுதாள். நேற்று தன்னைப் பெண்பார்க்க வந்த முரளியின் நிறம், தோற்றம் எதுவுமே அவளுக்குப் பிடிக்கவில்லை. அருவருத்துக் கொண்டாள். யன்னலுக்கு வெளியே கரைந்து கொண்டிருந்த காகங்கள் இரண்டும் அவளுக்கு எரிச்சலூட்டின. அழகான ஒருவனைக் காதலிக்க வேண்டும். கலியாணஞ் செய்து ஊர் கோலம் போக வேண்டுமென்ற ஆசைகள் தூசுகளாய்க் காற்றில் பறக்குமென்று உஷா எதிர்பார்க்கவில்லை.

உஷா சபேசனின் ஒரே பெண். இரசாயனப் பரிசோதனை ஆய்வு கூடமொன்றில் வேலைபார்ப்பவள், சிவந்த மேனியும் வட்டக்கரு விழிகளும் அவளின் அழகுக்கு மெருகு. உஷாவுக்குப் பார்த்த நாலு வரன்களும் வரதட்சணைக் கெடுபிடியில் தட்டிப்போயிற்று. சமயத்தில் கை கொடுத்து உதவியவர் மாதா கோயில் பாதிரியார் லோரன்ஸ். முரளிக்குப் பெற்றவர்களைத் தெரியாது. பாதிரியாரின் வளர்ப்பு மகன். அவனுக்கு அறிவூட்டி ஆளாக்கி உத்தியோகம் பார்க்க வைத்தவரும் அவரே.

“முரளி தங்கமானபையன், வரதட்சணை என்று எதுவுமே வாங்கமாட்டான். அடக்கமும் அன்பும் அவனோடு கூடப்பிறந்தவை. முரளியைக் கணவனாக அடையும் பெண் உண்மையிலேயே அதிஷ்டம் செய்தவள் அவன் ஆயிரத்தில் ஒருவன். அவனைப்பற்றி நானே புகழ்வது...?”

பாதிரியாரின் வார்த்தைகள் சபேசனுக்குக் கசக்குமா என்ன?..

திருமண ஏற்பாடுகள் எவ்வித தடங்கலுமின்றி நடந்து கொண்டிருந்த சமயம் அந்தத் துயர சம்பவம் சபேசன் குடும்பத்தை நிலை குலையவைத்தது. இரசாயனப்பரிசோதனைக் குழாய் வெடித்துப் பறந்ததில் உஷாவின் அழகிய முகத்தில் திட்டுத்திட்டாய் எரிகாயங்கள்.: கருகியதோல்கள்....

கண்ணாடியில் தெரிந்தமுகம் உஷாவுக்குத் திகிலூட்டியது. இந்தமுகம்தானா அந்த முகம்...? அவளால் நம்பமுடியவில்லை. வேதனையின் விளிம்பில் உஷா வெந்துகொண்டிருந்தாள்.

'ஜீசஸ்.. முரளியைப் பழித்ததுக்கு எனக்கு இவ்வளவு பெரிய தண்டனையா?'

கழுத்துச் செயினில் தொங்கிய சிலுவையை இறுகப்பற்றிக் கொண்டு விம்மினாள் உஷா,

முரளி சபேசனிடம் சொன்ன வார்த்தைகள் அவள் காதில் ஆலய மணியாய் ஒலித்தன.

“முகம் மாறிப் போனால் என்ன? நான் மனம் மாற மாட்டேன்!”

கண்களில் நீருடன் உஷா நிமிர்ந்தாள்... அழகின் அர்த்தம் அவளுக்குப் புரிந்து விட்டது.

# பேரம்

## “நீங்கள் வீட்டையும் காணியையும் விட்டிட்டு வந்திருக்கிறியள், அதனால...... அதனால......”

பக்கத்துத் திண்ணையில் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்த தன் கணவன் வல்லிபுரத்தை தட்டி எழுப்பினாள் கனகம்மா.

“இஞ்சேருங்கோ எழும்புங்கோ,.... எழும்புங்கோ, விடிய வெள்ளணவல்லே சிவமண்ணை வரச்சொன்னவர், அந்தாள் கொஞ்சம் பிந்தினாலும் எங்கையேன் போய்த்துலைஞ்சிடும். எழும்புங்கோ.”

திடுக்கிட்டு எழுந்த வல்லிபுரம் தன் பழுத்தகைகளை பாயில் ஊன்றியவாறு, “உம்.... என்ன செய்யிறது? எனக்கென்றால் பெரிசா நம்பிக்கை இல்லை. அவை அந்தப் பேச்சை எடுக்கிற மாதிரியே இல்லை.”

“சும்மா பல்லி சொன்ன மாதிரி விசர்க்கதை கதைக்காதைங்கோ, கெதியாய் பல்லை மினுக்குங்கோ, நான் தேத்தண்ணி வைக்கிறேன்.”

உடம்பு அலுப்பை முறித்தபடி, வல்லிபுரம் பாயில் இருந்த குறைச்சுருட்டை வாயில் வைத்துக் கொண்டு தீப்பெட்டியைத் தட்டினார். “என்ன குறுக்காலை போன குச்சி; ஒண்டும் பத்துதில்லை. பனியிலை நல்லா இளகிப் போச்சு போலை” என்று முணுமுணுத்தார்.

ஆனாலும் முயற்சி தொடர்ந்தது. அவருக்கு இப்படிப்பட்ட முயற்சிகள் புதியவையல்ல.

மூத்த மகளுக்கு கலியாணம் பேச வெளிக்கிட்ட வல்லிபுரத்துக்கு, மூன்று வருடமாகியும் இன்னமும் முடிவுக்கு வரவில்லை. இன்றும் அதற்காகத்தான் சிவத்தாரைச் சந்திக்க புறப்படுகிறார்.

“என்னப்பா, யோசிக்கிறியள்? நான் தேத்தண்ணி போட்டுட்டேன். இன்னும் பல்லு மினுக்கையில்லைப் போலை, இந்தாங்கோ கரி.”

“இல்லைக் கனகம், இதை முதலே செய்திருக்கலாம். இப்ப நாங்கள் இடம் பெயர்ந்து வந்திருக்கிறோம். இனி அவை கேட்ட மூண்டு இலட்சத்துக்கும் என்ன செய்யிறது? ஊரிலை எண்டால் அந்த



தோட்டக்காணியை வித்திருக்கலாம்.”

“அவைக்கு எல்லாம் விளங்கும். அவை பிழைவிட மாட்டினம். நீங்கள் வெளிக்கிடுங்கோ.”

முகம் கழுவி தேனீர் குடித்த வல்லிபுரத்தார் புறப்படத் தயாரானார்.

“அப்ப... நான் போட்டு வாறேன். பிள்ளை எங்கே? சின்னவள் இரண்டு பேரையும் உங்காலை அந்தத் தென்னைக்கை வெள்ளணப் போய் மட்டையை பொறுக்கச் சொல்லு.”

“சரி,சரி. வடிவாய் நேந்துநாவிப் போங்கோ. கதைச்சு எப்பிடியும் இந்த மாதத்துக்குள்ளை நாளை வைக்கச் சொல்லுங்கோ”

★★★★

வல்லிபுரம் சிவத்தாரையும் அழைத்துக் கொண்டு மாப்பிள்ளை வீட்டுக்கு வந்து சேர்ந்தார்.

“வாங்கோ, வாங்கோ, நானும் உங்களை காணவேணுமெண்டு வெளிக்கிட்டனான். ஆனால் இப்ப நீங்கள் இருக்கிற இடம் தெரியயில்லை.”

“நாங்கள் உதிலை கிட்டத்தான் இருக்கிறோம். ” என்றார் வல்லிபுரத்தார் சிரித்தபடி..

“சுகமாய் இருக்கிறியளே?”

“அதுக்கென்ன குறைச்சல்”

“நேற்றுத்தான் தம்பியின்ரை கடிதமும் கொழும்பிலை இருந்து வந்தது. நாங்கள் விபரமாய் எல்லாம் எழுதினனாங்கள். பிரச்சனை இல்லை.”

“தெரியும் நீங்கள் பிழைவிடமாட்டியள் எண்டு, அது தான் ஒருக்கா....நல்ல நாளை பாத்து...”

“அது பிரச்சனை இல்லை. இந்த மாதத்திலை இரண்டு மூண்டு நாள் இருக்கு. ஆனால்....”

“என்ன...கொஞ்சக் காலம் செல்ல.....”

“இல்ல, இப்ப வீட்டையும் காணியையும் விட்டுட்டு வந்திருக்கிறியள். இனி அதெல்லாம்.... அதால கொஞ்சம் காசாலை கூட்டித் தரவேணும்.”

வல்லிபுரத்தாருக்கு தலை சுற்றத் தொடங்கியது.

“அண்ணை! முதல் கேட்டதே பெரிய கஷ்டமாயிருக்கேக்கை இப்ப நீங்கள்.....”

“இல்லை நீங்கள் ஒரு பத்து லச்சம் தந்தால் காணும். நாங்கள் பெரிசா எதிர் பாக்கையில்லை.”

“அண்ணை நாங்கள் வீடு வாசல விட்டுட்டு வந்திருக்கிறோம். ஒரு தோட்டம் செய்யக் கூட இடமில்லை. எங்களிட்டை நீங்கள் இப்படிக் கேக்கிறது நியாயமோ?.”

“அப்படி எண்டால், நான் வேறு ஆக்களுக்கு “ஓம்” எண்டு சொல்லப் போறேன்.”

வல்லிபுரத்தார் சிவத்தாரின் கையைப் பிடித்துக் கொண்டு மெல்ல எழுந்தார். சுவரில் தொங்கிய பாரதி அவரைப் பார்த்து பரிதாபமாகப் புன்னகைத்துக் கொண்டிருந்தார்.

யாழ். ஞானகணேசன்


படிப்பகம்

www.padippakam.com

# இலக்கிய நயம்

## முதல் எதிரி

தருவது கீதன்

தன் காதுகளையே நம்பமுடியவில்லை அமைச்சர் ஆளவந்தாருக்கு.

"என்ன யோசிக்கிறீர் அமைச்சரே! கப்பம் தர வேண்டும் கம்ப நாட்டு மன்னன்! மடல் அனுப்பிவிடும் மடல்! தர மறுத்தால் படை அனுப்பப்படும் என்று ஒரு குறிப்பையும் பொறித்து அனுப்பும்!

அமைச்சர் தயங்கினார். செழித்து நரைத்திருந்த தலைமுடி போல அவர் அனுபவமும் பழுத்திருந்தது.

"கடம்ப மன்னன் நமக்கு பல தடவைகள் பயனுள்ள உதவிகள் பல செய்திருக்கிறான்!"

"தெரியும்!"

"நாடு இழந்து மீண்டும் வெல்ல நாம் படை திரட்டியபோது பக்க பலமாய் இருந்தவனும் அவனே!"

"நேற்று நடந்தது நேற்றோடு போனது. இன்று நடந்தது இன்றோடு போகும். நாளை நடப்பதை யாரறிவார்? நான் சொல்வதை நீர் செய்யும்!"

"மறப்பது தேவைதானா?"

"மன்னனின் கட்டளையை மறுப்பது முறைதானா?"

"ஆனாலும்.."

"விளக்கம் தேவையில்லை: முடிவை மாற்றுவது என் பழக்கமும் இல்லை. சொன்னதைச் செய்யும். அவன் செய்ததைச் சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம்."

அமைச்சர் தோற்றுப்போனார்.

→○○

"யார் நீர்?"

என்று கேட்ட மன்னனை நெற்றியில் ஆச்சரிய ரேகைகள் வெளிப்பட நோக்கினார் புலவர் பூங்குன்றனார்.

"என்னையோ யார் என்று கேட்டாய்?"

"கேட்டால் குற்றமோ?"

"இல்லை மன்னா, குற்றமல்ல, துக்கம்! சேரனின் படைகளிடம் நீ தோற்றோடிய போது, உன்னை தோளில் வைத்து கூத்தாடிய புலவர் பலர் தூற்றினார்கள். வீழ்ந்தாய் இனி எழமாட்டாய் என்று இகழ் பாடினார்கள்! பொன் பெற்றவர்கள், உன்னிடம் பொருள் பெற்றவர்கள், நீ மண் இழந்தாய், மா புகழ் இழந்தாய் என்றதும் கட்சி மாறினார்கள்! வாழ்க சேரன் என்று கர்ஜித்தார்கள்!"

புலவர் சொல்ல, மன்னன் முகம் சிவந்தது.

"நிறுத்தும், நீர் என்ன செய்தீர் அதைச் சொல்லும்!"

புலவர் முகம் இருண்டது. கண்களை இடுக்கி மன்னனை நோக்கினார்.

"அனைத்தையும் மறந்தாயோ மன்னா? வீழ்ந்து கிடந்த உன் படையை வேளப் படைகளாய் மாற்றிய கவிகளை மழையாகப் பொழிந்த புலவனை மறந்தாயோ? முடியுமா வெல்ல என்று நினைத்து, முகம் கறுத்து கிடந்த உந்தன் சேனையை, எதிரியைப் புறம்காணும் படையாக பட்டை தீட்டிய காவிய வரிகளை கடைந்து தந்தவனை மறந்தாயோ?! வெட்கம், வெட்கம்! என்னை நானே எடுத்துச் சொல்வது வெட்கம்! கடந்ததை மறந்தாய், கண்களை மூடினாய், நினைவினை விற்று கனவினை வாங்கினாய்! கனவு உன்னை கரையேற்றாது! கரங்கள் வேண்டும்! நல்ல மனங்கள் வேண்டும்! நன்றி மறந்தவன் சுற்றம் இழப்பான்! வாக்கிலும், செயலிலும் சத்தம் இழப்பான்! வருகிறேன் மன்னா! வழுக்குவாய் நியே!

→☐☆⊃



"விளக்கம் தா. விடியும் வரை விளக்கம் தா! நிலவெரியும் இரவில், கலை பயில வந்தேன்; மனம் மகிழும் உறவில், புதுப் பொருள் அறிய வந்தேன்."

"இரும்பு உலையாக நெஞ்சம்! கரும்புச் சுவைகாண மஞ்சம்! விரும்பும் கலையெல்லாம் உன்னை வந்து கொஞ்சும்! வெட்ட வெட்டத்தான் தழைக்கும்; அள்ள அள்ளத்தான் ஊறும், வைரம் தீட்ட தீட்டத்தான் ஜொலிக்கும், காமம் கலக்கக் கலக்கத்தான் சுவைக்கும்!"

மன்னன் அவள் எதிர்ப்பாட்டில் மயங்கிப்போனான். மெல்ல அருகில் போனான். சிற்றிடையை ஒரு கரம் அள்ள, மாங்கனிகளில் ஒன்றை மறு கரம் கிள்ள, இதழ்களை தேடி உதடுகள் நகர, இரு உடல் மறைந்து ஒரு உடலாக, "விளக்குத் தேவையா?" என்றாள். "விளக்கம் தேவை" என்றான்.

"அகக் கண்களுக்குத்தானே விளக்கம் தேவை. புறக் கண்களுக்கு வேண்டாமே!" என்றாள். விளக்கணைத்தாள். மன்னன் அழகின் விளக்கத்தை அணைத்தான்.

'வா' என்றன விழிகள். 'போ' என்றது மன்னனின் மனம். 'சோ' என்று பொழிந்தது மனதிற்குள் ஆசை மழை.

"வா, வா அணைக்கவா; தா, தா, இதழ் இனிக்கத் தா; வா, வா, ரசிக்க வா; தா, தா, கனி சுவைக்கத்தா! அள்ளவா, கிள்ளவா, முழுவதும் கொள்ள வா, உன்னைத் தா, உயிரைத் தா, உடல் ஆளத்தா!" என்றான் மன்னன்.

"உனக்குத்தான்; நான் உனக்குத்தான்! மருந்துதான், விருந்துதான், காதல் நோய்க்கு மருந்துதான், ஆசைப் பசிக்கு விருந்துதான், இரண்டும் இங்கு ஒன்றுதான் வா!"

நடனமாட வந்தவள் நாட்டை ஆளத் தொடங்கிவிட்டாள். மதன சுந்தரியின் முந்தானையில் மன்னன்! வளமென்ன வண்ண உடலில் என்று ஆராயவே போதவில்லை மன்னனுக்கு நேரம்! நாட்டில் வளம் இல்லை, வனப்பில்லை, அதையெல்லாம் பற்றி நினைக்கும் எண்ணமெல்லாம் மன்னனுக்கு இல்லவே இல்லை.

மக்கள் கொந்தளித்தார்கள்.

மக்களை மறந்துவிட்டான் மன்னன்! நாட்டை மறந்துவிட்டான் நாடாளும் வேந்தன்! மக்கள் பொறுமையின் எல்லைக்குப் போய்க் கொண்டிருந்தார்கள்.

"சுந்தரி, சுக மந்திரி, உன்னிடம் இருக்கிறதடி சொர்க்க சங்கதி!"



"இந்திரன், சந்திரன், தேவ சுந்தரன் யாரிடமும் இல்லாத சரச அஸ்திரம் உங்கள் தந்திரம்!" நடனக்காரியின் இதழ்களில் வசீகர வார்த்தைகளின் நடனம். மன்னன் தன்னையும் மறந்து போனான்.

"மன்னா?"

"யார் அது மன்னன்?"

"இது என்ன கேள்வி! தாங்கள்தான்!"

"நானா? நான் ஒரு அடிமை! அதோ ராணி! அவள் என் குரு! அவள் என் தெய்வம்!"

"போதையில் இருக்கிறீர்கள்!"

"பெண் ஒரு போதை! பருகப்பருக தெவிட்டாத போதை! அருந்துவது சுகம். அதற்காகத்தானே படைக்கப்பட்டது இந்த இகம்!"

அமைச்சர் பொறுமை இழந்தார். மன்னன் மனம் பேதலித்துவிட்டது. இனி மீட்சியில்லை.

மோசக்காரியின் விழி வீச்சில் மோட்சம் காண்பவனை தேசம் ஆள அனுமதிப்பது நாசம்! அமைச்சர் முடிவு செய்தார்.

மன்னன் சிறை பிடிக்கப்பட்டான். தனிமைச் சிறையில் வாடிய மன்னன் புலம்பத் தொடங்கினான்.

"நான் யார்? நீயார்? வாழ்வே மாயம்! நிலைக்குமா இந்தக்காயம்!"

அமைச்சர் கவலையோடு மன்னன் நிலை கண்டார். கலங்கினார். புலவர் பூங்குன்றனார் அமைச்சரை தேற்றினார்.

"மறந்தான், மறந்தான், மறந்தான் என்பதால் மாண்புகள் இழந்தான்! செய்நன்றி மறந்தான், செய்ய வேண்டிய செயல் மறந்தான், தன் நிலை மறந்தான், இறுதியாக தான் யார் என்பதும் மறந்தான்! நல்ல மனிதனுக்கு தேவையானது: மன உறுதி. தேவையற்றது: மன மறதி!"

அமைச்சர் நிமிர்ந்து புலவரைப் பார்த்தார். புரிந்ததின் அடையாளமாக தலையை மெல்ல ஆட்டினார்.

"உயர்ந்த இடத்தில் இருந்தவரல்லவா!" என்று வேதனைப்பட்டார் அமைச்சர்.

அதற்கு நெற்றியில் அடித்தாற்போல பதில் சொன்னார் புலவர்.

**"உள்ளத்திலே அச்சம் உடையவர்களுக்கு புறத்திலே அரண் இருந்தும் பயன் இல்லை; அது போல மறதி உடையவர்க்கு நல்ல நிலை வாய்த்தும் பயன் இல்லை! இது நான் சொன்னதல்ல, நம் திருவள்ளுவர் சொன்னது."**

"ஆம், மனிதனின் முதல் எதிரி மறதி" என்றார் அமைச்சர்.

**"அச்ச முடையார்க்கு அரணில்லை ஆங்கில்லை**
**பொச்சாப் புடையார்க்கு நன்கு"**

குறள்-534-அதிகாரம்-54

## குறுக்கெழுத்துப் போட்டி இல-143

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | ■ | 2 | | 3 |
| | ■ | 4 | | | | |
| 5 | | | ■ | 6 | ■ | |
| | ■ | ■ | 7 | | | |
| | ■ | 8 | ■ | | ■ | ■ |
| ■ | 9 | | ■ | 10 | | |
| 11 | | | | | ■ | 12 |

### இடமிருந்து வலம்

01. எமது உணவில் சுவைக்காகச் சேர்க்கப்படுவது.
02. தேர்தல் சமயத்தில் அதிகமாக இதற்காக பெரும் வேட்டை நடைபெறும்.
04. திரை கடலோடியும் பண்டையத் தமிழர் தேடுவது.
05. பாலில் இருந்து கிடைப்பது.
07. மறைந்த தமிழக முதல்வர் எம்.ஜி. ஆரை இப்படியும் அழைப்பார்கள்.
09. பறவைகளின் இருப்பிடம்.
10. பல நோய்களைக் குணப்படுத்தக் கூடிய கனி.
11. இவன் கடவுளுக்குப் பயப்பட மாட்டான்.

### மேலிருந்து கீழ்

01. மேலதிகாரிகளால் தமக்குக் கீழுள்ளவர்களுக்குப் பிறப்பிக்கப்படுவது.
03. கொழும்பு நகரில் எவராவது நின்று வானத்தை அண்ணாந்து பார்த்தால் போதும்; ஒரே நிமிடத்தில் இது சேர்ந்துவிடும்.
06. இராமரிடம் சீதை ஆசையாகக் கேட்டது.
08. வேகமாக நடந்து விட்டதை இப்படி நடந்துவிட்டது என்றும் கூறுவார்கள்.
12. எந்த வேலையையும்..... என்று பிற்போடக்கூடாது (தலைகீழாக உள்ளது)

இதற்குரிய ,சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 16.03.1996இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-143
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

இதற்கான சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொரு வருக்கும் தலா ரூபா 50/= பரிசாக வழங்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-141ற்கான சரியான விடைகள்:


| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 கை | 2 கே | யி | ■ | 3 நி | ழ | ல் |
| ■ | ட | ■ | 4 ஆ | ப | த் | து |
| 5 நி | ய | ■ | 6 த | ந் | தை | ■ |
| ல | ம் | ■ | 7 வ | த | ந் | 8 தி |
| க் | ■ | 9 செ | ன் | னை | ■ | ரு |
| 10 க | த | ம் | ■ | ■ | ■ | ப் |
| ரி | ■ | 11 பு | த் | தி | ம | தி |

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 141இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்:**

1. ஜே. சுமதி, கொழும்பு-15.
2. செல்வி. பாத்திமா றினோசா, மருதமுனை.
3. வி. பகீரதன், நீர்கொழும்பு.
4. முகமட் லாபீர், மக்கோனா.
5. திருமதி. கஸ்தூரிகணேசன், நானு ஓயா.
6. எம். சுபைதா, ராஜகிரிய.
7. செல்வி. சுபதேவி சதாசிவம், புத்தளம்.
8. எஸ். சத்தியேந்திரன், திருகோணமலை.
9. எம். நிபான், துல்ஹிரிய.
10. செல்வி. க. இந்திராணி, பொகவந்தலாவ.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

# வெற்றிக்கு வித்திடும் - சுழற் பந்து வீச்சு





தற்போது நடைபெற்று வரும் உலகக் கோப்பை கிரிக்கெட் பந்து வீச்சு ஒரு புதிய இனிய அனுபவத்தைத் தருகிறது. உலகக் கோப்பையின் போது ஆடுகிற ஒரு அணி தனது பந்துவீச்சுத் துறையில் வேகப்பந்து வீச்சாளர்களுக்கே முக்கியத்துவம் கொடுத்துள்ளது. சுழற்பந்து வீச்சாளர்களைக் கறிவேப்பிலை பயன்படுத்துவது போல் பயன்படுத்தி வந்தார்கள். இந்த முறை ஒவ்வொரு அணியும் வெற்றிக்கு சுழற்பந்து வீச்சாளர்களைப் பெரிதும் நம்பி இருக்கிறது. காரணம் போட்டி நடைபெறும் நாடுகளான இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் 'பிட்ச்'கள் சுழற்பந்து வீச்சாளர்களுக்குச் சாதகமாக இருக்கும் என நம்புகின்றனர். வில்ஸ் உலகக் கோப்பையை வெல்லும் அணிக்கு அந்தக் குழுவில் இடம்பெற்றிருக்கும் சுழற்பந்து வீச்சாளர்தான் வெற்றிப்படிகளை அமைத்துக் கொடுப்பார்கள் என்பது உறுதி.

அவுஸ்திரேலிய அணியின் 26 வயதான ஷேன் வோர்ன். விரல்களைச் சுழற்றுவதில் மாயாஜாலம் காட்டுவார். இந்தியாவிற்கு அனில் கும்ளே. பாகிஸ்தானில் முஸ்டாக் அகமட், இலங்கை அணியில் முத்தையா முரளிதரன், தென் ஆபிரிக்க அணியின் இளம்வீரர் போல் அடம்ஸ்- இவர்களெல்லாம் தாம் சேர்ந்த அணியின் வெற்றிக்காக விரல்களில் வர்ணஜாலங்கள் புரிவார்கள். வேகப்பந்து வீச்சாளர்களைப் பின்னுக்குத் தள்ளி விட்டு சுழற்பந்து வீச்சாளர்கள் முன்னணியில் நிற்பது இதுவே முதல் முறை.

பயிற்சி முகாம் முடிந்து அசாருதீன் பேட்டி கொடுத்தபோது "வலுவான அணி அவுஸ்திரேலியா" என்று ஒத்துக்கொண்டார். அதே போல் அஜித் வடேகரிடம் இந்தியாவிற்கு சிம்மசொப்பனமான அணி எது என்றதற்கு அவுஸ்திரேலியா; அடுத்ததாக தென் ஆபிரிக்காவும், பாகிஸ்தானும் என்றார். எப்படிக் கூட்டிக்கழித்துப் பார்த்தாலும் இன்றைய நிலைமையை வைத்துப் பார்க்கும் போது அவுஸ்திரேலியா இறுதிப் போட்டிக்கு நுழைவது உறுதி எனத் தெரிகிறது.

"கிரிக்கெட் என்பது முழுக்க முழுக்க அதிஷ்டத்தைப் பொறுத்தது. உலகக் கோப்பை போட்டியை நடத்தியவர்கள் வென்றதில்லை. இந்த நிலைமையை இந்தியா மாற்றுமா?" என்று கேள்வி எழுப்பியுள்ளது தமிழக சஞ்சிகை ஒன்று.

அவுஸ்திரேலிய வீரர் ஷேன் வோர்ன் பந்துவீச வரும் போது துடுப்பாட்ட வீரர்கள் மட்டையை சுழற்றத் தயங்குகிறார்கள்.

மேற்கிந்திய தீவு அணி கப்டன் ரிச்சி ரிச்சாட்சன் 4.3.96ல் நடந்த போட்டியில் ஷேன் வோர்னின் வந்து வீச்சுக்கு ஃபோர் அடித்தபோது மைதானமே கரகோஷித்தது.

ஏனைய அணிகளில் ஷேன் வோர்ன் போல அச்சுறுத்தும் சுழற் பந்து வீச்சாளர் இல்லாதது பெரும் குறைதான்.

விக்கெட்டுக்களை சாய்க்காவிட்டாலும் ரன் குவிவதை கட்டுப்படுத்துமளவுக்காவது பந்து வீசுவதும் ஒரு நாள் போட்டியில் முக்கியமான அம்சம்.

## மக்மில்லன்



பெயர் - பிரையன் மக்மில்லன்
அணி -தென் ஆபிரிக்கா
பிறந்த திகதி- 22 டிசம்பர் 1963
பிறந்த இடம்- வெல்கோம்
அணியில்-சகலதுறை ஆட்டக்காரர் (வலது கை துடுப்பாட்டம், வலது கை மித வேகப் பந்து வீச்சு.)
விளையாடும் அணிகள்- தென்ஆபிரிக்க மேற்கு மாகாண அணி, வோர் விக்ஷயர் அணி
முதல் தரப் போட்டியில் அறிமுகம் - 1984
விளையாடிய முதல் தரப் போட்டிகள்-111
முதல் தரப் போட்டியில் அதிக பட்ச எண்ணிக்கை- 140- எதிர் போலண்ட்- கேப் டவுண்-1994/95
முதல் தரப் போட்டியில் சிறந்த பந்து வீச்சு- 5/35 எதிர் நேத்தால்- கேப் டவுண்-1992/93
விளையாடிய டெஸ்ட் போட்டிகள் - 23
அதிக பட்ச எண்ணிக்கை - 113 எதிர் பாகிஸ்தான். ஜோகான்ஸ்பேர்க்- 1994/95
சிறந்த பந்து வீச்சு- 4/65 எதிர் நியூஸிலாந்து -கேப்டவுண்- 1994/95
சர்வதேச ஒரு நாள் போட்டிகள் - 42 (நடைபெற்று வரும் உலகக் கோப்பை போட்டிக்கு முன்னர்)

## சிந்தியா பதில்கள் அடுத்த வாரம் வழமைபோல

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 23

## சித்திரகூடத்தில் சிறந்ததோர் பர்ணசாலை

இமயமலையிலே ஊற்றெடுத்து பல்வேறு மலைகளையும் காடு மேடு பள்ளத்தாக்குகளெல்லாவற்றையும் கடந்து, கரைகளில் வெண் நுரையினைப் பரப்பி- களிப்பு மிகுந்த கன்னிப்பெண் போல் களி நடமிட்டு ஓடுகிறாள் கங்கை நதியாள். அந்நதியின் புனிதத் தன்மையினை உணர்ந்த இராமனும் சீதையும் இலக்குவனும் குகனின் படகில் ஏறி கங்கையைக் கடந்தனர். அதன் தென்கரையை அடைந்ததும் கரையில் இறங்கி, கங்கையை உரிய முறையில் தொழுது, தம்மைக் கரை சேர்த்தமைக்கான நன்றியைக் கூறிவிட்டுப் புறப்பட்டனர்.

கங்கையைப் பெண் தெய்வமாகவே கருதிய சீதை, கானகத்தில் தன் வாழ்க்கையில் எத்தகைய இடையூறும் வாராமல் காத்தருள வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டாள். இராமருக்கு அப்போது பெரும் மனக் கவலை சூழலாயிற்று. அவருடைய உள்ளத்தில் இனந்தெரியாத வேதனை உருவெடுத்தது. இதனை வெளிக் காட்டாதிருக்க எவ்வளவோ முயன்றார். இருப்பினும் இலக்குவன் அண்ணனுடைய மனதிலெழுந்த புயலின் அறிகுறியை அவருடைய முகத்திலிருந்தே அறிந்து கொண்டான். நண்பகலான போது குகனுடைய உதவியாளர்கள் தயாரித்த உணவினை உட்கொண்ட பின்னர் ஓர் ஆலமர நிழலில் அமர்ந்து இளைப்பாறினார்கள். அப்போது அண்ணனுக்கு இலக்குவன் பலவாறான ஆறுதலுரைகளைக் கூறித்தேற்றினான். இருப்பினும் தன் உள்ளத்திலும் விபரிக்க முடியாத வேதனைப் புயல் வீசுவதை இலக்குவனால் உணர முடியாமலில்லை.

### சேணிலை உணர்வு

இம்மூவரும் கங்கைக் கரை கடந்த அதே கால கட்டத்தில் தான் இராமரின் நினைவாகவே இருந்த தசரதச் சக்கரவர்த்தியின் உயிர் பிரிந்திருக்கிறது. நெருங்கிய உறவினர் அல்லது உற்ற நண்பர்கள் வெவ்வேறு இடங்களில்- வெகுதூரத்துக்கப்பால் இருந்த போதிலும் ஒருவருக்கு ஏற்படும் துன்பம் மற்றவருக்கு இயல்பாகவே எண்ண அலைகளால் உணர்த்தப்படுகிறது. மிக நெருக்கமானவர்களில் எவரேனும் இறந்துவிட்டால் கூட மற்றோரிடத்தில்- வெகு தூரத்துக்கப்பால் இருப்பினும் கூட, பலவகைத் துக்குறிகளினால் புலப்படுத்தப்படுகிறது. இதனை சேணிலை உணர்வு எனக் கூறலாம். அக்காலத்தில் மட்டுமல்ல, இக்காலத்திலும் இவ்வுணர்வு தோன்றுவது கண்கூடு.

சற்று நேர ஓய்வின் பின்னர் இராமரும் ஏனையோரும் பிரயாக வனத்தில் பர்ணசாலை அமைத்து தவமியற்றும் பரத்துவாச மாமுனிவரின் ஆசிரமத்தை அடைந்தனர். இராமரைக் கண்டதும் முனிவர் தனது பிறவிப் பயனை அடைந்துவிட்டதாக எண்ணிப்பூரிப்படைந்தார். அதிதிகளுக்கு உகந்த மரியாதை செலுத்தியதுடன் அன்றிரவு உணவளித்து உறங்குவதற்கும் ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தார்.

கங்கை நதியும் யமுனா நதியும் ஒன்று சேருமிடம் பிரயாகை எனப்படும். இந்தப் புண்ணிய சங்கமத்தில் தீர்த்தமாடுவதற்காக காலத்துக்குக் காலம் இந்தியாவின் பல பாகங்களிலிருந்தெல்லாம் பக்தர்கள் திரண்டு வருவார்கள். பல வகையான வசதிகள் இருந்த போதிலும், அவ்விடத்தில் தாங்கள் தரித்திருந்தால் அயோத்தி மக்கள் செய்தி அறிந்து இராமரையும் குழுவினரையும் அயோத்திக்கு திரும்ப அழைத்துச்செல்ல வந்து விடுவார்கள் என்பதனால், பரத்துவாச முனிவரிடம், தங்கள் வனவாசத்துக்கேற்ற பிறிதோர் இடத்தைக்குறிப்பிடுமாறு இராமர் கேட்டுக்கொண்டார்.

யமுனா நதியைக் கடந்து சற்றுத் தூரத்துக்கப்பால் சித்திரகூடமெனும் மலைச் சாரலில் அமைந்த பிரதேசம் வனவாசத்துக்குகந்த பிரதேசமாகும் என்று கூறி அங்கு செல்லும் மார்க்கத்தையும் பரத்துவாச முனிவர் விளக்கினார். அடுத்த நாள் பொழுது புலர்ந்ததும் குகனையும் ஆசிரமத்திலேயே நிறுத்திவிட்டு இராமர், சீதை, இலக்குவன் மூவரும் புறப்பட்டனர். அது வசந்த காலமாதலால் எங்கும் மலர்கள் நிறைந்த மரங்கள் செழித்துக்காணப்பட்டன. அளவான குளிருடன் கூடிய காற்று அவர்களுக்குப் புத்துணர்ச்சியைக் கொடுத்தது. பறவை இனங்கள் தேனிசைபாடி அவர்களை வரவேற்றன.

சீதை இந்த இயற்கை வனப்பில் தன்னையே மறந்து குதூகலித்தாள். அவளுடைய மகிழ்ச்சிகண்டு தங்கள் மனத்தில் தோன்றிய துயரத்தையும் மறந்து இராமரும் இலக்குவனும் மகிழ்ச்சியடைந்தனர்.

### தேனும் மீனும்

இந்த இடத்தில், இக்காலத்தில் சர்ச்சைக் குரியதாகக் கருதப்படும் பொருள் ஒன்றைப் பற்றிக்குறிப்பிடுவது பொருத்தம். வனவாசமேற்ற இராமனும் சீதையும் இலக்குவனும் மாமிச உணவினையும் உட்கொண்டதாக வால்மீகி முனிவரே குறிப்பிடுகின்றார். அக்காலத்தில் சத்திரியர்கள் ஊன் உணவு உட்கொண்டனர் என்பதற்கு ஆதாரங்கள் உள்ளன. இராமரும் இலக்குவனும் தங்களுக்கு வேண்டிய அளவு மாமிசத்தை வேட்டையாடிப் பெற்று, அதற்குரிய பூசையை முடித்த பின்னர் உட்கொண்டனர். இதனை வால்மீகி முனிவர் வெளிப்படையாகக் கூறியிருக்கிறார். வள்ளுவன்



பிறந்த தமிழ்நாட்டுக்காரரான கம்பநாட்டாழ்வார் இக்கருத்தினை அழுத்திக் கூறத் தயங்கியிருக்கிறார். வள்ளுவர், கம்பருக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே கொல்லாமையை வலியுறுத்தினாரல்லவா?

இராமரை முதன் முதலில் தரிசிக்க வந்த குகன், தன்னுடன் கொண்டுவந்த தேனையும் பதப்படுத்தப்பட்ட மீனையும் கையுறையாக இராமருக்கு வழங்கியதை

**இராஜகுமாரன்**

கம்பர் மறுக்கவில்லை. ஆனால், குகன் உள்ளன்புடன் கொண்டு வந்து கொடுத்தவற்றை அன்போடு ஏற்றுக் கொண்டார் என்று கவிச்சக்கரவர்த்தி கூறினாரே தவிர அவற்றை உண்டுமகிழ்ந்தார் என்று கூறத் துணியவில்லை.

**அரியதாம் உவப்ப உள்ளத்து**
**அன்பினால் அமைந்த காதல்**
**தெரிதரக் கொணர்ந்த என்றால்**
**அமிழ்தினும் சீர்த்த அன்றே**
**பரிவினின் தழீஇய என்னின்**
**பவித்திரம் எம்மனோர்க்கும்**
**உரியன இனிதின் நாமும்**
**உண்டனெம் அன்றோ என்றான்.**
(அயோத்தியா காண்டம்–650)

பொருள்: அன்பினால் உந்தப்பட்ட அகமகிழ்வோடு ஏற்பட்ட பக்தியின் விளைவால் உம்மால் கொண்டுவரப்பட்ட இந்த மீனும் தேனும் அமிர்தத்தைக் காட்டிலும் அதி சிறந்தவையாகும். ஆகவே இவை எம்மால் ஏற்றுக்கொள்ளக்கூடிய தூய்மையானவையே. எனவே இவற்றை நாம் உண்டவர் போல் ஆகிவிட்டோம்.

☆ ☆ ☆

### சித்திரகூடத்தில் சிறந்த தழைக்குடில்

இயற்கை எழில் பூத்துக் குலுங்கும் சித்திரகூட மலைச்சாரலில் தாங்கள் தங்கி வாழ்வதற்கேற்ற அருமையான இடத்தை இலக்குவனே தேர்ந்தெடுத்தான். மூங்கில், காட்டு மரங்கள் ஆகியவற்றைக் கொண்டு அழகிய பர்ணசாலை-தழைக்குடிலை- அமைத்தான். இராமரும் சீதையுமே வியந்து பாராட்டத்தக்கவகையில் மிக வேகமாக குடிலை அமைத்து விட்டான். உரிய பூசைகளைச் செய்து அத் தழைக்குடிலில் மூவரும் குடியேறினர்.

☆ ☆ ☆

### பரதனுக்கேற்பட்ட சோகம்

வசிட்ட மாமுனிவரால் அனுப்பிவைக்கப்பட்ட தூதுவர்கள் ஏழுநாட்களில் கேகய நாட்டை அடைந்தனர். கைகேயியின் தந்தையாரான அசுபவதி மன்னருக்கும் ஏனைய அரசகுடும்பத்தினருக்கும் மரியாதையின் நிமத்தம் அனுப்பிவைக்கப்படும் வெகுமதிகளையும் வசிட்ட முனிவர் கொடுத்தனுப்பியிருந்தார். அயோத்தியிலுள்ள உண்மையான நிலையினை கேகய நாட்டரசரோ- முக்கியமாக பரதனும் சத்துருக்கனுமோ- தெரிந்துவிடாமல் நடந்து கொள்ள வேண்டும் என்று முனிவர் சொல்லி அனுப்பியமைக்கு ஏற்றவாறு தூதர்கள் மிகவும் பக்குவமாக நடந்து கொண்டார்கள்.

இருப்பினும் கடந்த சில நாட்களாக பரதனும் சத்துருக்கனும் பலதுர்க்குறிகளையும் கெட்ட கனவுகளையும்கண்டு வேதனைப் பட்டவர்களாகவே இருந்தனர். எப்போது அயோத்தி மாநகர் போய்ச் சேர்வோம்: தந்தை தாய்மாரையும் உற்ற தமயன் இராமர்- இலக்குவனையும் எப்போது போய்க் காண்போம் என்று துடியாய்த் துடித்துக் கொண்டிருந்தனர்.

இரு சகோதரர்களும் படும் துன்பத்தைப் போக்குவதற்கு அரண்மனையில் பல கேளிக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. அரச பரம்பரையிலுள்ள- இவ்விருவரின் வயதினை ஒத்த உறவினர் களும் தோழர்களும் சேர்ந்து பரதனுக்கும் சத்துருக்கனுக்கும் பலவகை ஆறுதல்மொழிகளைக் கூறினார்கள். இக் குழுவினருடன், பரதனின் மெய்ப்பாது காவலனாகச் சென்ற- உபேந்திரன் மகன் லலிதகுமாரனும் காணப்பட்டான். லலிதகுமாரன் மெய்ப்பாது காவலனாகப் பதவியேற்ற போதிலும் பரத-சத்துருக்கனுக்கு உற்ற தோழனாகவும் இருந்தமையினால் கேகய நாட்டு அரச குடும்பத்தவர்களுடன் சரிசமமாகப் பழகும் வாய்ப்புக்கிடைத்தது.

அரசகுமாரர்களுக்கு அயோத்தியில் இடம்பெற்ற அசம்பாவிதங்களின் பயனாக சேணிலை உணர்வு ஏற்பட்டமையினால் கவலை ஏற்பட்டது. ஆனால் லலிதகுமாரனுக்கு மற்றுமொரு வகையான கவலை வாட்டிக் கொண்டிருந்தது. அயோத்தியில் விட்டு விட்டு வந்த பூமாலை என்னும் பூவை அவன் உள்ளத்தைக் குடைந்துகொண்டிருந்தாள். அவன் நிம்மதியான தூக்கத்தைக் கண்டு எவ்வளவோ நாட்களாகிவிட்டன. கண்களை மூடியதும் கனவுலகுக்கு லலிதகுமாரனை பூமாலை இழுத்துச் சென்று விடுகிறாள்.

அயோத்தி மாநகரிலிருந்து தூதுவர்கள் வந்திருக்கிறார்கள் என்பதை அறிந்ததும் பரதனும் சத்துருக்கனும் ஓரளவு மன ஆறுதல் பெற்றவர்களாக அவர்களைக் காண விரும்பினர். தூதுவர்கள் அரண்மனையில் ஒரு மண்டபத்தில் அரசகுமாரர்களைக் கண்டு வணங்கி முகமன் கூறி முடித்ததும், பரதன் தன் தந்தையின் நலத்தையே முதலில் விசாரித்தான். பின்னர் அண்ணன் இராமன், அண்ணி சீதை, இளைய அண்ணன் இலக்குவனைப் பற்றியெல்லம் விசாரித்தான்.

குற்றமற்ற நன்மை கிடைக்குமானால் பொய்யும் சொல்லலாம் என்ற வள்ளுவனின் வாக்குக்கொப்ப தூதர்கள், "யாவரும் நலமே உள்ளனர்; தங்கள் இருவரையும் உடனே அழைத்து வரும்படி மாமுனிவர் வசிட்டர் எம்மை அனுப்பிவைத்தார்" என்று கூறி முடித்தனர்.

கேகய மன்னர், தனது பேரர்கள் இருவரும் அடுத்த நாள் உதயத்தின் போது பயணம் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து முடித்தார். அதன்படி அதிகாலை சகல பரிவாரங்களுடனும் பரிசில்களுடனும் அரசகுமாரர்கள் புறப்பட்டனர். கூடவே லலிதகுமாரனும் மகிழ்ச்சியுடன் புறப்பட்டான்.

(தொடர்ந்து வரும்)

**இராமாயணப் போட்டி: 21**

**சரியானவிடை:- தமஸா நதிக்கரை**

1. பி. விமல்ராஜ். 26 பெரேரா பிளேஸ், குடாப்பாடு, நீர்கொழும்பு.
2. எல். துகிதா. இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு-6
3. ஆர். தீவன். 123 நியு டவுன் திகன, ராஜவெல்ல.
4. நா. வனிதா. கோயில் வீதி, பாலையூற்று, திருகோணமலை.
5. வி. புஷ்பலெட்சுமி. 71, ராகலை பஜா, ஹல்கரனோயா.

**போட்டி இல. 23 கேள்வி-** கங்கை நதியும் யமுனா நதியும் சங்கமிக்கும் இடம் யாது?

மார்ச்.16க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்கப்பட வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி–இல.22, தினமுரசு வாரமலர், த.பெ.இல–1772, கொழும்பு.**

# கிரிக்கெட் போட்டியில் கவுண்டரும் – செந்திலும்

நேற்று பம்பாய், இன்று மும்பாய். அங்கு போட்டி.. அது கிரிக்கெட் உலகக் கோப்பை போட்டி. அதனைக் கண்டு களிக்கிறார்கள் கவுண்டமணியும், செந்திலும்.

**காதிலைபூ கந்தசாமி**



செ:- அண்ணே, அண்ணே?

கவு:- என்னடா மரக்குத்தி தலையா?

செ:- கிரிக்கெட் போட்டி என்னுதானே சொன்னீங்க.

கவு:- ஆமாண்டா, இப்பென்ன குறுக்கெழுத்துப் போட்டியா நடத்தப் போறாங்க?

செ:- (குலுங்கி குலுங்கி சிரிக்கிறார்)

கவு:- சொல்லிப்புட்டு சிரியடா நாயே! மும்பாயில வந்து மூஞ்சியக் கெடுத்துக்காத.

செ:- அங்க பாருங்கண்ணே, மோட்டார் சைக்கிள் பந்தயத்தில கலந்துக்க ஒருத்தர் வந்துக்கிட்டிருக்காரு.

கவு:- ஏன்டா, எருமைப் பன்னி, அவரைப் பார்த்தா கிரிக்கெட்டு வீரன் மாதிரித் தெரியல உனக்கு?

செ:- இல்லையண்ணே, சரியாப்பாருங் கண்ணே, தலையிலை ஹெல்மேட்டு போட்டிருக்காரு பாருங்கண்ணே.

கவு:- ஓ..நீ அதைச் சொல்லுறியா, ஏன்டா பனங்கொட்டை வாயா, வாழ்க்கையில நீ கிரிக்கெட்டு பார்த்ததே கிடையாதாடா?

செ:- நொட் லைக் தட். எனக்கது பிடிக்காதண்ணே.

கவு:- நாயே எழுந்திரு.

செ:- ஏனண்ணே?

கவு:- நீ கெட்ட கேட்டுக்கும், உன் மூஞ்சிக்கும் இங்கிலீசு வேறயா? இனிமேலும் பேசினே என்னுவையி, மும்பாயிலை உள்ள நல்ல ஷாப் பார்த்து உன்னைக் கொன்னுபோயி விட்டுட்டுப் போயிடுவேன். அங்கே பன்னி. குரங்கெல்லாம் இருக்கும், நீ ஜாலியா இருக்கலாம் என்ன?

செ:- அண்ணே, வேண்டாண்ணே, நான் இங்கிலீசு பேசலண்ணே! அண்ணே, அங்க பாருங்கண்ணே, அந்தாளுக்கு விவஸ்தையே கிடையாதாண்ணே?

கவு:- ஏன்டா முண்டம்?

செ:- பந்தை எந்த இடத்திலை உரசுறாரு பாருங்கண்ணே. ஒரு ஓரமா போய் நின்னு சொறிஞ்சிட்டு வரலாமில்லே.

கவு:- அடே மரக்குத்தி தலையா, பந்து வீசுறதுக்கு முன்னாடி அப்படித்தானடா செய்யணும், அப்பத்தான் ஒரு வேகம், உஷாரு இருக்குமடா.

செ:-அங்கதான் சங்கதியிருக்கின்னு சொல்லுங்க.

கவு:- ஆமாடா, ஆட்டுக்கல்லு வாயா!

செ:- இது ரொம்ப அநியாயமண்ணே.

கவு:- எதுடா அநியாயம். நீயெல்லாம் கிரிக்கெட்டு பார்க்க வந்திருக்கியே அதுவாடா?

செ:- இல்லையண்ணே, அவரு எத்தனை கஷ்டப்பட்டு அந்தப் பந்தை ஓங்கி அடிச்சாரு, பக்கத்திலை நின்னு குறுக்க விழுந்து தடுத்தா அது அது அநியாயம் தானே அண்ணே! அது பிடிக்காமதான் மட்டை வைச்சிருக்கிறவரு வெளிநடப்பு செய்கிறாரு. அவருக்கு நாம சப்போட்டு கொடுக்கலாமண்ணே.

கவு:- வெளிநடப்புச் செய்ய இதென்ன சட்ட சபையாடா சாவுக்கிராக்கி! அவரு அவுட்டாகி வெளிய போறாருடா!

செ:- அப்படியாண்ணே, என்னண்ணே அவரு குதிச்சு குதிச்சு வாறாரு.

கவு:-உடலை ரெடியாக்கிக் கொள்ளுறாரு.

செ:- அதையும் நமக்கு முன்னாடிதான் பண்ணனுமா.

கவு:- பேசாதேயடா கரிவாயா. அண்ணர் விளாசப்போறாரு பாருடா?

செ:- அடிசக்கை, பந்தை வெளியே அடிச்சிட்டாரு. அவுட்தானே.

கவு:- இதுதான்டா ஃபோர். அதாவது நாலுரன்னு.

செ:- என்னண்ணே இது, ஊரில அடுத்த வீட்டுக்கு பந்து போனா அவுட் என்னு தானே அர்த்தம். பந்தை எடுத்து வைச்சுட்டு தரமாட்டாங்கண்ணே. இவங்க வெளியில அடிச்சிட்டு, கணக்கில நாலு ஏத்திகிறாங்க.

கவு:- நிறுத்துடா முண்டம். என் 'மூட்'டைக் கெடுக்காதேடா!

செ:- பந்தைக் கண்டாலே உங்களுக்கு 'மூட்' வந்திடுதண்ணே. அண்ணே... சீச்சீ... பந்தை அசிங்கம் பண்ணுறாரு பாருங்கண்ணே.

கவு:- என்னடா பண்ணுறாரு?

செ:- பந்தில எச்சில் போட்டு தடவுறாரு, அசிங்கம்பிடிச்ச ஆளா இருப்பாரு.

கவு:- அடே எருமைக் கழுதை, பந்தை உரசி உரசி சூடாக்குவது ஒரு டெக்னிக்கு. பந்தை எச்சில் போட்டு ஈரமாக்கி உருட்டிவிடுறது இன்னொரு டெக்னிக்கு. எல்லமே சூப்பர் டெக்னிக்குடா முண்டம்.

செ:-ஸ்டைலு, ஸ்டைலுதான், பந்து வந்துதான், ஸ்டைலுக்கேத்த பந்து தானண்ணே.

கவு:- அடே, காட்டுப் பன்னி, பின்னாடி யாரையடா பார்க்குறே, முன்னாடி பாரடா முண்டம்.

செ:- முன்னாடி பார்த்துத்தானண்ணே பாடுறேன். அய்யோ.. உதைக்காதீங் கண்ணே. அண்ணே இந்த அநியாயத்த பாருங்கண்ணே.

கவு:- என்னடா அநியாயம்?

செ:- அவரு பாவம் அவுட்டாகி, மட்டையை கருட்டிக்கிட்டு எவ்வளவு சோகமாய் போறாரு. அந்த துக்கத்திலை பங்கெடுக்காம பதினொரு பேரும் வானத்துக்கும், பூமிக்குமா குதிக்கிறாங்களே. அநியாயம்தானேயண்ணே!

கவு:- அடே.. காட்டெருமை, உன்னை யெல்லாம் கிரிக்கெட்டுப் பார்க்க கூட்டியந்தேன் பாரு, என்னை சொல்லனும். (உதைக்கிறார்)

செ:- அண்ணே அடிக்காதீங்கண்ணே. பசிக்குதண்ணே.

கவு:- வரும்போதுதானேயடா மூக்குமுட்ட பிடிச்சிட்டு வந்தே.

செ:- (பாடுகிறார்)

இரண்டு இட்லி வேண்டும்.
சர்வரிடம் கேட்டேன்.
சட்னியோடு ஒன்று
சாம்பாரோடு ஒன்று
(இரண்டு)
மாவின் தண்டனை இட்லி வழி
இட்லியின் தண்டனை வயிற்று வலி
வலியின் தண்டனை மருந்து வழி
ஒட்டல் முதலாளியைத்
தண்டிக்க என்ன வழி?
(இரண்டு)

கவு:- அடே.. மும்பாயில வந்து நம்ம மானத்த வாங்காதேடா மூதேவி. (காலால் எட்டி உதைக்கிறார். செந்தில் படிகளில் உருண்டுவிட்டு, எழுந்து ஓடத்தொடங்குகிறார்)

–(கற்பனை)–

## பார்த்ததில் வியந்தது...



கால் அழகைக் காட்டியே ரசிகர்களை கிறங்கடிப்பவர் ஜேமிவலீகர்திஸ். இலண்டனைச் சேர்ந்தவர். தனது கவர்ச்சிக்கு காரணமான கால்களை காப்புறுதி செய்துள்ளார். எவ்வளவு தொகைக்குத் தெரியுமா? 3 1/2 கோடி ரூபாய்க்கு.

விபத்து ஏதாவது நடந்து கால் பழுதானால் 3 1/2 கோடி கிடைக்கும். காப்புறுதி அதிகாரி ஒருவர் அவரது கால்களை அளவிட்டு நல்ல தரத்தில் உள்ளனவா என்று கண்டறியும் காட்சிதான் படத்தில் இருக்கிறது. கால்களை மட்டுமல்ல, கைகளை, மார்பகங்களை, முகத்தை என்று தமது உறுப்புக்களை காப்புறுதி செய்வது மேல் நாட்டு நடிகைகளின் வழக்கம். ரசிகர்களை எந்த உறுப்பு அதிகம் கவர்கிறதோ அதற்கேற்ப சம்பந்தப்பட்ட உறுப்புக்கு காப்புறுதித் தொகையும் ஏறும்.



படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O.(QD/24/NEWS/96)

www.padippakam.com

அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
436331
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11

# இரத்த அபிஷேகம்



அம்மன் ஜுவல்
AMMAN JEWEL
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
332033
29 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11

கொழும்பு குண்டுவெடிப்பின் மரணக் கரத்திலிருந்து மயிரிழையில் தப்பியவர்கள்தான் இவர்கள்

சட்டை முழுக்க இரத்தம். வன்முறையின் இரத்த அபிஷேகம். யுத்தம் தலைநகருக்குள்ளும் அசுரத்தனமாக பிரவேசித்து விட்டதன் அடையாளம் இது.

போருக்கான காரணத்தைக் கண்டறியாமல், வெந்ததைத் தின்று வாயில் வந்ததைப் பேசும் மேல்தட்டு வர்க்க மக்கள் பகுதியினரும் இப்போது சற்றே பயம் கொள்ள ஆரம்பித்து விட்டார்கள்.

கொழும்பு 7 அல்லது கறுவாக்காடு போன்ற மேல்தட்டு வர்க்க பகுதிகளுக்குள்கூட பாதுகாப்பு இல்லையென்பது புலப்பட்டு விட்டது. அதனால் யுத்தத்தை தொலைக்காட்சி செய்திகளில் ரசித்துக்கொண்டு தாம் மட்டும் பத்திரமாக இருக்கலாம் என்று யாரும் இனிக் கருதமுடியாது.

யுத்தம் தொடர்ந்தால் மரணம் சகலரது காலடியிலும் வரும். கதவைத் தட்டும்.

ஆக, போரை ஒழிக்க வேண்டும். ஒழிக்க வேண்டுமானால் போருக்கு காரணமான இனப்பிரச்சனைக்கு திறந்த மனதோடு தீர்வுகாண அனைவரும் முன்வர வேண்டும். இந்தக் குட்டித்தீவு சிறக்க வேண்டுமானால் தீர்வு தேவை..!

# ஒரே கவ்வு



கண்டவர்கள் நடுங்குவர். உலகில் மிக நீளமான நாய் இது. பர்மிங்காமில் நடைபெற்ற நாய்க் கண்காட்சியில் மொத்தம் 22 ஆயிரத்து தொள்ளாயிரத்தி தொண்ணூற்றி மூன்று நாய்கள் கலந்து கொண்டன. 9.1.1991 இல் நடைபெற்றது. அந்த நாய்கள் மத்தியில் கண்டவர்கள் வியந்ததும், பயந்ததும் இந்த நாயிடம்தான். இதன் பெயர் ஷோர்பா. உரிமையாளர் பெயர் கிறிஸ் எறக்லிட்ஸ். இலண்டனைச் சேர்ந்தவர். உலக சாதனைப் புத்தகமான கின்னஸில் இடம் பிடித்துள்ளது.

பின்னங்காலில் நின்று தாவினால் மிகச் சுலபமாக உங்கள் கழுத்தை 'லொக்' செய்து விடும்.

# தருவது



# மனதில் உறுதி வேண்டும்

27.2.96 இல் இந்திய-அவுஸ்திரேலிய கிரிக்கெட் போட்டியை கவனித்தவர்கள் அனைவரும் பொதுவாக சொன்ன விஷயம், 'இந்தியாவுக்கு உறுதி போதாது' என்பதுதான்.

இறுதிவரை அணி முழுவதும் சளைக்காமல் போராடுவது என்ற விடயத்தைப் பொறுத்தவரை இந்திய அணி பல தடவைகள் கோட்டைவிட்டிருக்கிறது.

எப்போதுமே யாராவது ஒருவர் மீதுதான் அணி முழுவதும் நம்பிக்கை வைக்கப்பட்டவர் நம்பிக்கை ஏமாற்றிவிட்டால் அணி முழுவதும் சோர்ந்து போய்விடுகிறது. இந்திய அணியின் நீண்டகாலப் பலவீனம் அதுதான்.

நல்ல கப்டன், சிறந்த மனேஜர், துடிப்பான நம்பிக்கை நட்சத்திரம் டெண்டுல்கர்-என்று தரமான நிலையில் அணி இருந்தும் கூட தன்னம்பிக்கை இல்லாததுதான் பெரிய பலவீனம்.

டெண்டுல்கர்தான் இன்றைய நம்பிக்கை நட்சத்திரம். டெண்டுல்கரை அவுட் செய்துவிட்டால் போதும், இந்திய அணியை முட்டை கட்டிவிடலாம் என்று எதிரணிகள் புரிந்து கொண்டுவிட்டன.

அவுஸ்திரேலியாவோடு 27.02.96 இல் நடந்த போட்டியில் இரண்டு ஓவர்கள் பலாப்பழம்போல இருந்தும் வெற்றி வாய்ப்பை தவறவிட்டது மாபெரும் சோகம்.

இந்திய அணிக்கு இம்முறை உலகக் கோப்பை கிடைக்க வேண்டுமானால் ஏதாவது அதிசயம் நடந்தால் மட்டும்தான் சாத்தியம்.

இந்திய அணியில் பிரபலமானவர்கள் பலர் இருக்கிறார்கள். நன்றாக சம்பாதிக்கிறார்கள். முக்கிய ஆட்டங்களில் மட்டும் ஏமாற்றி விடுகிறார்கள். 96 இலும் அந்தக் கெட்ட பழக்கம் தொடர்கிறது.

"1983இல் இந்திய அணி உலகக் கோப்பை எடுத்த போது கபில் தேவ் காட்டிய உறுதியும் வெற்றிக்கு ஒரு காரணம். அந்த உறுதி இன்றைய கப்டன் அசாருதீனிடம் சற்றுக் குறைவாகத்தான் இருக்கிறது" என்று விமர்சித்துள்ளது இந்திய ஸ்போட்ஸ் சஞ்சிகை ஒன்று.

உறுதி கப்டனுக்கு மட்டுமல்ல, இந்திய அணி முழுமைக்கும் தேவை. பாதியிலேயே சோர்ந்து போய் அசத்தத் தவறினால் உலகக் கிண்ணம் மட்டுமல்ல, உலகில் சிறந்த அணிகளில் ஒன்று என்ற எண்ணமும் தவறிப் போய் விடும்.

# வியோவெட



இன்றைய தேதிவரை உலகில் மிகப்பெரிய பூசணி இதுதான் என்கிறது லேட்டஸ்ட்டான கின்னஸ் தகவல்.

இதன் எடை 990 இறாத்தல். எடையை அளவிட பூசணியைத் தூக்கி மின்சாரத் தராசில் வைத்தார்கள். தூக்கிவைக்க மட்டும் 9 பேர் தேவைப்பட்டார்கள். இங்கிலாந்திலுள்ள 'லாங் செயர்' என்னுமிடத்தில் 'ஸ்பால்டிங்' என்னும் பகுதியில் அதிசயமாக உருவான பூசணி இது. பயிரிட்ட பாக்கியசாலி அருகே நின்று போஸ் கொடுக்கிறார்.

# அமோக விளைச்சல்



[illegible]

படிப்பகம்